# PAPER I, II, III – CURRENT AFFAIRS (TAMILNADU) TEST (31.10.2021) PART I & II

## HISTORY / வரலாறு

### 1. 175Th Birth Anniversary of Ayothidasar
**அயோத்திதாசரின் 175வது பிறந்தநாள் விழா**

**தமிழக முதல்வரின் அறிக்கை**

அயோத்திதாசர் அவர்களின் 175-வது ஆண்டு விழாவின் நினைவாக வடசென்னைப் பகுதியில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விதி 110-ன்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது,

மாண்புமிகு முதலமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளுவர், அவ்வையார், கபிலர், வள்ளலார் வரிசையிலே தமிழ்ச் சிந்தனை மரபை வளர்த்தெடுத்த மாபெரும் ஆளுமையான அயோத்திதாசப் பண்டிதர் அவர்களின் பெருமையைப் போற்றக்கூடிய அறிவிப்பு ஒன்றை, 110 விதியின்கீழ் இந்த மாமன்றத்தில் எடுத்து வைப்பதை நான் பெருமையாகக் கருதுகிறேன். தமிழ்நாட்டு அரசியலைப் பொறுத்தவரையில், இரண்டு சொற்கள் இல்லாமல் யாரும் அரசியல் நடத்த முடியாது. ஒன்று, தமிழன்; இன்னொன்று, திராவிடம். இந்த இரண்டு சொற்களையும் அரசியல் களத்தில் அடையாளச் சொல்லாக மாற்றியவர்தான், அறிவாயுதம் ஏந்தியவர்தான் அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள்.

1881 ஆம் ஆண்டே மக்கள்தொகைக் கணக்கெடுப்பில் 'பூர்வத் தமிழர்' என்று பதியச் சொன்னவர் பண்டிதர் அவர்கள். 1891 ஆம் ஆண்டு அவர் தொடங்கிய அமைப்பின் பெயர் 'திராவிட மகாஜன சபை' என்பதாகும்.

1907 ஆம் ஆண்டு 'ஒரு பைசாத் தமிழன்' என்ற இதழைத் தொடங்கி, அதையே 'தமிழன்' என்ற இதழாக நடத்தி வந்தவர் அவர். 'பூர்வீக சாதிபேதமற்ற திராவிடர்காள்' என்று அழைத்தவர் அவர். அதனால்தான் தமிழன், திராவிடம் ஆகிய இரண்டு சொற்களையும் அறிவாயுதமாக அவர் ஏந்தினார் என்று குறிப்பிட்டேன். அவர் போட்டுக்கொடுத்த பாதையில்தான் தமிழ்நாட்டு அரசியல் செயல்பட்டு வருகிறது.

எழுத்தாளர், ஆய்வாளர், வரலாற்று ஆசிரியர், மானுடவியல் சிந்தனையாளர், பதிப்பாளர்,

பத்திரிகையாளர், மருத்துவர், பேச்சாளர், மொழியியல் வல்லுநர், பன்மொழிப் புலவர், புதிய கோட்பாட்டாளர், சிறந்த செயல்பாட்டாளர், சளைக்காத போராளி எனப் பன்முக ஆற்றலைக் கொண்டவர்தான் அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள். அவரது தாத்தா திரு. கந்தப்பன் அவர்கள், தன்னிடம் இருந்த திருக்குறள் ஓலைச் சுவடிகளை திரு. எல்லீஸ் அவர்களிடம் கொடுத்து, திருக்குறளை அச்சுப் பதிப்பாக கொண்டுவந்ததை நினைக்கும்போது, குறளுக்கு அவருடைய குடும்பம் ஆற்றிய தொண்டுக்காக நாம் அனைவரும் தலைவணங்க வேண்டும்.

தந்தை பெரியார் அவர்களே, "என் பகுத்தறிவுப் பிரச்சாரத்துக்கும், சீர்திருத்தக் கருத்துகளுக்கும் முன்னோடி அயோத்திதாசப் பண்டிதர்தான்' என்று குறிப்பிட்டிருக்கிறார். அதனால், அவர் சொன்னதைத் தாண்டி நான் எதுவும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. "இந்திய நாட்டின் முன்னேற்றத்துக்கு சாதியும் மதமுமே தடை" என்று சொன்ன அயோத்திதாசர், "மனிதர்களை மனிதர்களாகப் பார்க்கும் எவரோ, அவர்தான் மனிதர்' என்று முழங்கினார்.1845 முதல் 1914 வரை வாழ்ந்த அயோத்திதாசர் அவர்களுடைய 175-வது ஆண்டு விழாவின் நினைவாகவும், அவரது அறிவை வணங்கும் விதமாகவும், வடசென்னைப் பகுதியில் மணிமண்டபம் அமைக்கப்படும் என்ற அறிவிப்பை வெளியிடுவதில் இந்த அரசு பெருமைப்படுகிறது.

## 2. 150$^{Th}$ Birth Anniversary of V.O.C
**வ.உ.சிதம்பரனாரின் 150வது பிறந்தநாள் விழா**

## தமிழக முதல்வரின் அறிக்கை

இதுதொடர்பாக சட்டப்பேரவையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆற்றிய உரை பின்வருமாறு : - "பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசியிருக்கக்கூடிய பல்வேறு கட்சியினுடைய தலைவர்கள்,அயோத்தியதாசர் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்படும் என்ற அறிவிப்புக்கு வாழ்த்து சொல்லியிருக்கிறீர்கள்; நன்றியும் தெரிவித்திருக்கிறீர்கள்; பாராட்டும் தெரிவித்திருக்கிறீர்கள்.

அதேநேரத்தில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஈஸ்வரன் அவர்கள், வ.உ.சி. அவர்களுடைய 150-வது பிறந்த நாள் வருகின்றது. எனவே, அதனை அரசு விழாவாக, அவரைப் பெருமைப்படுத்தக்கூடிய வகையில் நாம் செயலாற்ற வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். என்னுடைய முதல் சுதந்திர தின உரை - நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்று, என்னுடைய முதல் சுதந்திர தின உரையிலேயே நான் குறிப்பிட்டிருக்கிறேன். வ.உ.சி. அவர்களுடைய 150-வது பிறந்த நாள் விழா அரசு விழாவாகக் கொண்டாடப்படும் என்று நான் அறிவித்திருக்கிறேன். அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டு அவரது 150-வது ஆண்டாக வருகிற காரணத்தால், 14 அறிவிப்புகளை நான் இப்போது அறிவிக்க விரும்புகிறேன்.

- சென்னை காந்தி மண்டபத்தில் உள்ள வ.உ.சி அவர்கள் சிறையில் இழுத்த செக்கு வைக்கப்பட்டிருக்கக்கூடிய மண்டபம் பொலிவூட்டப்பட்டு, அங்கு அன்னாரது மார்பளவு சிலை திறந்து வைக்கப்படும்.
- தூத்துக்குடி மாநகரில், முதன்மைச் சாலையான மேல பெரிய காட்டன் சாலை, இனி வ.உ. சிதம்பரனார் சாலை' என அழைக்கப்படும்.
- தனது வாழ்நாளின் முக்கிய நாட்களை கோவைச் சிறையிலே கழித்த வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய கோயம்புத்தூர் வ.உ.சிதம்பரனார் முழு உருவச் சிலையானது, பூங்காவில் அமைக்கப்படும்.

- செய்தித் துறையின் பராமரிப்பிலுள்ள ஒட்டப்பிடாரம் வ.உ.சிதம்பரனார் அவர்கள் வாழ்ந்த நினைவு இல்லமும், திருநெல்வேலியில் உள்ள வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய மணிமண்டபமும் புனரமைக்கப்பட்டு, அவ்விடங்களில் அன்னாரின் வாழ்க்கை வரலாற்றை அனைவரும் அறிந்து பயனடையும் வகையில், ஒலி - ஒளி காட்சி அமைக்கப்படும்.

- வ.உ.சிதம்பரனார் அவர்கள் வாழ்க்கை வரலாற்றினைச் சித்தரிக்கும் திரைப்படத்தினை இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையில், நவீன டிஜிட்டல் முறையிலே அது வெளியிடப்படும்.

- திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் வ.உ.சிதம்பரனார் அவர்களின் பெயரில் புதிய ஆய்விருக்கை ஒன்று அமைக்கப்படும்.

- வ.உ.சிதம்பரனார் அவர்கள் எழுதியுள்ள அனைத்துப் புத்தகங்கள் புதுப்பொலிவுடன் புதுப்பிக்கப்பட்டு, தமிழ்நாடு பாட நூல் கழகத்தின் மூலம் குறைந்த விலையில் மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்.

- திருநெல்வேலியில் வ.உ.சிதம்பரனார் மற்றும் மகாகவி பாரதியார் படித்த பள்ளிக்குத் தேவையான கூடுதல் வகுப்பறைகள், கலை அரங்கம் மற்றும் நினைவு நுழைவு வாயில் 1.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

- கப்பல் கட்டுமானம், தொழில்நுட்பம், போக்குவரத்து ஆகிய கப்பல் தொடர்பானத் துறைகளில் ஈடுபட்டு, சிறந்த பங்காற்றி வரும் தமிழர் ஒருவருக்கு 'கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. விருது' ஆண்டுதோறும் கையாக வழங்கப்படும். விருதுத் தொகையாக 5 இலட்சம் ரூபாய் மற்றும் பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படும்

- கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் மறைந்த நவம்பர் 18 ஆம் தேதி, தியாகத் திருநாளாக அறிவித்துக் கொண்டாடப்படும்.

- இந்த ஆண்டு, செப்டம்பர் 5, 2021 முதல் செப்டம்பர் 5 2022 வரை, தூத்துக்குடியிலும், திருநெல்வேலியிலும் உருவாகும் அரசுக் கட்டடங்களுக்கு கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் பெயர் சூட்டப்படும்.

- பள்ளி, கல்லூரி மாணவர்கள் அறிந்து பயனடையும் வகையில், போக்குவரத்துத் துறையின் சார்பில் பேருந்து ஒன்றில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களுடைய வாழ்க்கையில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து புகைப்படக் கண்காட்சி ஏற்பாடு செய்து பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் அனுப்பப்படும்.

- தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வாயிலாக வ.உ.சிதம்பரனார் அவர்கள் குறித்த இணையவழிக் கருத்தரங்கம் நடைபெறும்.

- தமிழ் நிகர்நிலைக் கல்விக் கழகத்தின் வாயிலாக கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்கள் எழுதிய நூல்கள் மற்றும் கையெழுத்துப் பிரதிகள் ஆகியவைமுழுவதும் இணையத்திலே மின்மயப்படுத்தி வெளியிடப்படும்." எனத் தெரிவித்துள்ளார்.

## 3. 100Th Death Anniversary of Bharatiyar.
**பாரதியாரின் 100வது நினைவு தினம்**

# தமிழக முதல்வரின் அறிக்கை

**பாரதியாரின் நினைவு நாள் இனி 'மகாகவி நாள்': நூற்றாண்டு நினைவுதினத்தை முன்னிட்டு முதல்வர் ஸ்டாலினின் 14 அறிவிப்புகள்**

பாரதி மறைந்த நூற்றாண்டின் நினைவாக அவரது பெருமையைப் போற்றும் வகையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக, முதல்வர் ஸ்டாலின் இன்று (செப். 10) வெளியிட்ட அறிக்கை:

கடந்த ஆகஸ்ட் 15-ம் நாள் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்துவிட்டு உரையாற்றும்போது, மகாகவி பாரதியார் மறைந்து 100 ஆண்டுகள் ஆகிவிட்டது, அவர் மறைந்த ஆண்டின் நூற்றாண்டு என்று இந்த ஆண்டைக் குறிப்பிட்டுக் காட்டினேன். நூறாண்டுகள் கழித்து மட்டுமன்று, ஆயிரமாண்டுகள் கழித்தும் உயிரோட்டமுள்ள கவிதைகளை, பாடல்களைத் தமிழ்ச் சமுதாயத்துக்கு விட்டுச் சென்றவர்தான் மகாகவி என்று போற்றப்பட்ட பாரதியார்.

இதன் தொடர்ச்சியாக, பாரதியார் நினைவைப் போற்றும் வகையில், அவர் மறைந்த நூற்றாண்டின் நினைவாக 14 முக்கிய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

1. பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11-ம் நாள், அரசின் சார்பில் இனி ஆண்டுதோறும் 'மகாகவி நாளாக' கடைப்பிடிக்கப்படும். இதனையொட்டி, பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு மாநில அளவில் கவிதைப் போட்டி நடத்தி 'பாரதி இளங்கவிஞர் விருது' மாணவன் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் தலா ஒரு லட்சம் ரூபாய் பரிசுத் தொகையுடன் வழங்கப்படும்.
2. பாரதியாரின் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்கள் மற்றும் கட்டுரைகளைத் தொகுத்து 'மனதில் உறுதி வேண்டும்' என்ற புத்தகமாக, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்கள் சுமார் 37 லட்சம் பேருக்கு 10 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும்.
3. மகாகவி பாரதியின் வாழ்க்கை குறித்தும், அவரின் படைப்புகள் குறித்தும் ஆய்வாளர்கள் பலர் குறிப்பிடத்தக்க ஆய்வுகளைச் செய்துள்ளனர். அவர்களில் முக்கியப் பங்காற்றிய பாரதி ஆய்வாளர்களான, மறைந்த பெ. தூரன், ரா.அ. பத்மநாபன், தொ. மு. சி. ரகுநாதன், இளசை மணியன் ஆகியோரின் நினைவாக அவர்தம் குடும்பத்தாருக்கும் மற்றும் மூத்த ஆய்வாளர் சீனி. விசுவநாதனுக்கும், பேராசிரியர் ய. மணிகண்டனுக்கும், தலா மூன்று லட்சம் ரூபாயும், விருதும், பாராட்டுச் சான்றிதழும் அரசால் வழங்கி கவுரவிக்கப்படும்.
4. பாரதியின் உருவச் சிலைகள், உருவம் பொறித்த கலைப்பொருட்களைப் பூம்புகார் நிறுவனத்தின் மூலம் உற்பத்தி செய்து குறைந்த விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்படும்.
5. பாரதியின் கையெழுத்துப் பிரதிகள் தேடித் தொகுக்கப்பட்டு, அவை வடிவம் மாறாமல் செம்பதிப்பாக வெளியிடப்படும். பாரதியின் வாழ்வை சிறுவர்கள் அறியும் வண்ணம் சித்திரக்கதை நூலாகவும், பாரதியாரின் சிறந்த நூறு பாடல்களைத் தேர்வு செய்து தமிழகத்தின் புகழ்பெற்ற ஓவியர்களின் வண்ண ஓவியங்களுடன் நூல் ஒன்றாகவும் வெளியிடப்படும். மேலும், பாரதியாரின் படைப்புகள் மற்றும் பாரதியார் குறித்த முக்கிய ஆய்வு நூல்களும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிப்படும்.

6. பாரதியாரின் நூல்கள் மற்றும் அவரைப் பற்றிய ஆய்வு நூல்கள் அனைத்தையும் தொகுத்து, எட்டையபுரம் மற்றும் திருவல்லிக்கேணியில் உள்ள பாரதியார் நினைவு இல்லங்களிலும், சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்திலும், மதுரையில் அமைய உள்ள கலைஞர் நினைவு நூலகத்திலும் வைப்பதற்கு 'பாரதியியல்' என்ற தனிப்பிரிவு ஏற்படுத்தப்படும்.
7. உலகத் தமிழ்ச் சங்கங்களை ஒருங்கிணைத்து பாரதி குறித்த நிகழ்வுகள் 'பாரெங்கும் பாரதி' என்ற தலைப்பில் நடத்தப்படும்.
8. திரைப்படங்களில் இடம்பெற்ற பாரதியாரின் பாடல்கள் மட்டுமே இடம்பெறும் இசைக்கச்சேரி 'திரையில் பாரதி' என்ற நிகழ்வாக நேரு உள்விளையாட்டு அரங்கில் கரோனா தொற்றுப் பரவல் முழுமையாக ஓய்ந்த பிறகு நடத்தப்படும்.
9. பாரதியாரின் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு அடுத்த ஓராண்டுக்கு, சென்னை பாரதியார் நினைவு இல்லத்தில் வாரந்தோறும் நிகழ்ச்சியொன்று செய்தித்துறையின் சார்பில் நடத்தப்படும்.
10. திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பாரதியார் பெயரில் ஆய்விருக்கை அமைக்கப்படும்.
11. உத்தரப்பிரதேச மாநிலம் காசியில் பாரதியார் வாழ்ந்த வீட்டைப் பாராமரிக்க அரசின் சார்பில் நிதியுதவி வழங்கப்படும்.
12. பாரதியார் படைப்புகளைக் குறும்படம் மற்றும் நாடக வடிவில் தயாரிக்க நிதியுதவி வழங்கி அவற்றை நவீன ஊடகங்களின் வழியாக வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
13. பாரதியாரின் உணர்வுமிக்க பாடல் வரிகளைப் பள்ளிகள், கல்லூரிகள், பேருந்து நிலையங்கள் போன்ற முக்கிய இடங்களில் எழுதியும் வரைந்தும் பரப்பப்படும்.
14. பெண் கல்வியையும், பெண்களிடம் துணிச்சலையும் வலியுறுத்திய மகாகவி பாரதியின் பெயர், ஊரக வளர்ச்சித்துறையில் செயல்படுத்தப்படவுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்கள் வாழ்வாதாரப் பூங்காவுக்கு 'மகாகவி பாரதியார் வாழ்வாதாரப் பூங்கா' எனப் பெயர் சூட்டப்படும்.

எழுத்தும் தெய்வம் - எழுதுகோலும் தெய்வம் என வாழ்ந்து புதுநெறி காட்டிய புலவன் பாரதியைப் போற்றுவோம்".

இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

## 4. 75Th Death Anniversary of Rettaimalai Srinivasan.
**இரட்டைமலை சீனிவாசனின் 75வது நினைவு தினம்**

**பிறப்பு: ஜூலை 7, 1859**

**பிறப்பிடம்: மெட்ராஸ் மாகாணம், இந்தியா**

**இறப்பு: செப்டம்பர் 18, 1945**

**பணி: வழக்கறிஞர், பத்திரிகையாளர்**

**நாட்டுரிமை: இந்தியன்**

**பிறப்பு**

இரட்டைமலை சீனிவாசன் அவர்கள், இந்தியாவில் சென்னை மாகாணத்தில் உள்ள பழைய செங்கல்பட்டு மாவட்டத்தில் இருக்கும் மதுராந்தகத்திற்கு அருகில் உள்ள

கோழியாளம் என்கிற சிற்றூரில் ஜூலை மாதம் 7ஆம் தேதி, 1859 ஆம் ஆண்டில், தெய்வபக்தி மிகுந்த ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தார்.

**ஆரம்ப வாழ்க்கையும், கல்வியும்**

தனது தொடக்கக்கல்வியைக் கோழியாளத்தில் உள்ள ஒரு பள்ளியில் பயின்றார். அவர் ஒரு தாழ்த்தப்பட்ட வகுப்பினரான தலித் சமூகத்தில் பிறந்ததாலும், குடும்ப வறுமைக் காரணமாகவும், சாதியக் கொடுமை காரணமாகவும் அவரது குடும்பம் கோழியாளத்தில் இருந்து தஞ்சைக்கும், பின்பும் கோவைக்கும் குடிபெயர்ந்தது. தஞ்சையில் உள்ள ஒரு பள்ளியில், தனது பள்ளிப்படிப்பை மீண்டும் தொடர்ந்த அவர், தனது கல்லூரிப்படிப்பைக் கோவையில் முடித்தார். எங்கு சென்றாலும் தீண்டாமைக் கொடுமைத் தலைவிரித்து ஆடுவதைக் கண்டு வெகுண்ட அவர், அதற்கு எப்படியாவது முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று முடிவெடுத்தார்.

**இல்லற வாழ்க்கை**

இரட்டைமலை சீனிவாசன் அவர்கள், 1887 ஆம் ஆண்டில் ரெங்கநாயகி அம்மாள் என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு இரண்டு பெண் குழந்தைகள் மற்றும் 4 ஆண் குழந்தைகளும் பிறந்தனர்.

**ஆரம்பகாலப் பணிகள்**

தனது கல்லூரிப் படிப்பிற்குப் பின்னர், எழுத்தராக நீலகிரியில் உள்ள நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தார். பத்து ஆண்டுகள் அங்கு பணியாற்றிய அவர், 1890ல் சென்னைக்கு வந்தார். 1891ல் 'பறையர் மகாசன சபை' மற்றும் 1893ல் 'பறையன்' என்ற திங்கள் இதழை தோற்றுவித்தார். 1900 ஆம் ஆண்டு வரை அவ்விதழை நடத்திய அவர், அதே ஆண்டில் வேலைத் தேடி தென்னாப்பிரிக்கா சென்றார். அங்கு ஒரு மொழிப்பெயர்பாளராக நீதிமன்றத்தில் பணியில் சேர்ந்த அவர், 1921ல் இந்தியா திரும்பினார்.

**சட்டமன்ற உறுப்பினராக அவருடைய பங்கு**

மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தப்படி 1923 ஆம் ஆண்டு சட்டசபையின் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்ட அவர், 1924ல் சட்ட சபையில், ஒரு முக்கியமான தீர்மானத்தை முன்மொழிந்தார். அதன்படி, 'பொது வழியில் எந்தவொரு சாதி பாகுபாடின்றி, யார் வேண்டுமானாலும் நடக்கலாம். இத்தேசத்தில் உள்ள அனைத்து பொது உடைமைகளும், அனைவருக்கும் சொந்தமானவையே. மேலும், பள்ளர், பறையர் என்று அழைக்கப்படாமல், ஆதிதிராவிடர் என்று அழைக்கப்பட வேண்டுமென்றும், மது ஒழிப்புத் தீர்மானம், ஆலய நுழைவுத் தீர்மானம் போன்ற சமூக சீர்த்திருத்தங்களை நிறைவேற்றினார். மேலும், அவர் மணியக்காரர் முறை ஒழிக்கப்பட வேண்டுமென்றும் கோரிக்கை எழுப்பினார்.

**லண்டன் வட்டமேஜை மாநாடு**

லண்டனில் 1930, 1931 மற்றும் 1932களில் நடைபெற்ற வட்டமேஜை மாநாடுகளின் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக அம்பேத்கருடன் கலந்துகொண்டார் இரட்டைமலை சீனிவாசன் அவர்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு முழு உரிமையைப் பெற்றுத் தர எண்ணி அவர்கள் இருவரும், அம்மாநாட்டில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இரட்டை வாக்காளர் தொகுதி வழங்கப்பட வேண்டும் என்றும், தாழ்த்தப்பட்ட மக்களின் விகிதாச்சார அளவுக்கு ஏற்ப கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் உரிய பங்கு அளிக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்திப் பேசினர்.

**இறப்பு**

இரட்டைமலை சீனிவாசன் அவர்கள், செப்டம்பர் மாதம் 18ஆம் தேதி, 1945 ஆம் ஆண்டில், பெரியமேடு என்னும் இடத்தில் தனது இறுதி மூச்சை விட்டார்.

**காலவரிசை**

- 1859: மதுராந்தகத்திற்கு அருகில் உள்ள கோழியாளம் என்கிற சிற்றூரில் ஜூலை மாதம் 7ஆம் தேதி, 1859 ஆம் ஆண்டில், தெய்வபக்தி மிகுந்த ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தார்.
- 1887: ரெங்கநாயகி அம்மாள் என்பவரைத் திருமணம் செய்துகொண்டார்.
- 1890: சென்னைக்கு வந்தார்.
- 1891: பறையர் மகாசன சபையைத் தோற்றுவித்தார்.
- 1893: 'பறையன்' என்ற திங்கள் இதழை தோற்றுவித்தார்.
- 1900: வேலைத் தேடி தென்னாப்பிரிக்கா சென்றார்.
- 1921: இந்தியா திரும்பினார்.
- 1923: சட்டசபையின் உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார்.
- 1924: சட்ட சபையில், அவர் ஒரு முக்கியமான தீர்மானத்தை முன்மொழிந்தார்.
- 1930. 1931 மற்றும் 1932: லண்டனில் நடைபெற்ற வட்டமேஜை மாநாடுகளின் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாகப் அம்பேத்கருடன் கலந்துகொண்டார்.

APOLLO STUDY CENTRE

# CULTURE / கலாச்சாரம்

## 1. KEEZHADI Civilization
**கீழடி நாகரிகம்**

**1. கீழடி அகழ்வாராய்ச்சி**

மதுரை அருகே உள்ள கீழடியில் மேற்கொண்ட தொல்லியல் ஆய்வில் கிடைத்த கட்டங்கள், தொல்பொருட்கள் ஆகியவை, தமிழ்நாட்டின் வரலாற்றுத் துவக்கம் குறித்தும் தமிழர்களின் வாழ்வு குறித்தும் முன்பிருந்த பல கருத்துகளை மாற்றியமைத்தன. தமிழ்நாட்டின், தமிழர்களின் பெருமைக்குரிய புள்ளிகளில் ஒன்றாக கீழடி உருவெடுத்திருக்கிறது.

மதுரை நகரத்திற்கு தென்கிழக்கில் சுமார் 13 கிலோ மீட்டர் தூரத்தில் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்திருக்கும் கீழடி கிராமத்தில் 2014ஆம் ஆண்டில் மத்திய தொல்லியல் துறை நடத்திய ஆகழ்வாய்வில் அங்கு, 2,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலிருந்து மனிதர்கள் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
.

**கீழடி நாகரீகத்தின் காலம் என்ன?**

கீழடியில் கிடைத்த 6 பொருட்கள் ஆக்சலரேட்டட் மாஸ் ஸ்பெக்ட்ரோமெட்ரி (Accelerated mass spectometry) ஆய்வுக்காக அமெரிக்காவின் ஃப்ளோரிடாவில் உள்ள பீட்டா அனலிடிகல் லேப்பிற்கு அனுப்பப்பட்டன. அதில் கிடைத்த முடிவுகளின்படி, அந்தப் பொருட்கள், கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்கும் கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தை சேர்ந்தவை எனக் கண்டறியப்பட்டது.
கீழடியில் 353 செ.மீ. ஆழத்தில் கிடைத்த பொருள் கி.மு. 580வது ஆண்டையும் 200 செ.மீ. ஆழத்தில் கிடைத்த பொருள் கி.மு. 205வது ஆண்டையும் சேர்ந்தது எனக் கண்டறியப்பட்டது. இந்த இரு மட்டங்களுக்கு கீழேயும் மேலேயும் பொருட்கள் இருப்பதால், கீழடியின் காலகட்டம் கி.மு. ஆறாம் நூற்றாண்டு முதல் கி.மு. ஒன்றாம் நூற்றாண்டு வரையிலானது என்ற முடிவுக்கு மாநிலத் தொல்லியல் துறை வந்தடைந்தது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை வரலாற்றுக் காலம் என்பது கி.மு. மூன்றாம் நூற்றாண்டில்தான் தொடங்குவதாக கருதப்பட்டுவந்தது. ஆகவே கங்கைச் சமவெளியில் நடந்ததைப் போல, இரண்டாவது நகர நாகரீகம் இங்கு நிகழவில்லை எனக் கருதப்பட்டுவந்தது. ஆனால், கீழடியில் கிடைத்த பொருட்களை வைத்து, கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே இரண்டாவது நகர நாகரீகம் துவங்கியுள்ளது என்ற முடிவுக்கு தொல்லியல் துறை வந்தடைந்தது. கங்கைச் சமவெளியிலும் இதே காலகட்டத்தில்தான் நகர நாகரீகம் உருப்பெற்றது.

கொடுமணல், அழகன்குளம் ஆகிய இடங்களில் கிடைத்த எழுத்தின் மாதிரிகளை வைத்து தமிழ் பிராமி எழுத்தின் காலம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டாகக் கருதப்பட்டது. ஆனால், தற்போது கீழடியில் ஒரு பானை ஓட்டில் எழுத்துகளை வைத்து தமிழ் பிராமி கி.மு. ஆறாம் நூற்றாண்டிலேயே வழக்கத்தில் இருந்திருக்கலாம்; ஆகவே 2,600 ஆண்டுகளுக்கு முன்பாக கீழடியில் வாழ்ந்தவர்கள் எழுத்தறிவு பெற்றிருக்கக்கூடும் என்றும் தொல்லியல் துறை தெரிவித்தது.

இந்தியாவில் கிடைத்த வரிவடிவங்களில் சிந்து சமவெளியில் கிடைத்த வரிவடிவங்களே மிகப் பழமையானவை. சிந்துவெளி பண்பாடு மறைந்து தமிழ் பிராமி எழுத்து தோன்றியதற்கு இடையில் கீறல் வடிவில் ஒரு வரிவடிவம் இருந்ததாக

தொல்லியலாளர்கள் கருதுகின்றனர். சிந்து சமவெளி எழுத்துகளைப் போலவே இவற்றின் பொருளும் இதுவரை முழுமையாகப் புரியவில்லை.

தமிழ்நாட்டில் ஆதிச்சநல்லூர், அழகன் குளம், கொற்கை, கொடுமணல், கரூர், தேரிருவேலி, பேரூர் உள்ளிட்ட இடங்களில் கிடைத்த பானை ஓடுகளில் இந்த வரிவடிவங்கள் கிடைத்துள்ளன. இலங்கையில் திசமஹாரம, கந்தரோடை, மாந்தை, ரிதியகாம போன்ற இடங்களிலும் இது போன்ற குறீயிடுகள் கிடைத்துள்ளன. இந்த நிலையில், கீழடி அகழாய்விலும் 1001 ஓடுகள் இத்தகைய வரி வடிவங்களுடன் கிடைத்தன.

மேலும், தமிழ் பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட 56 பானை ஓடுகள் கிடைத்தன. இவற்றில் குவிரன், ஆத(ன்) உள்ளிட்ட பெயர்களும் முழுமையடையாத எழுத்துகளும் கிடைத்தன. இதில் ஆதன் என்ற பெயர், அதன் என்று குறிப்பிடப்படுகிறது. முற்கால தமிழ் பிராமியில், நெடிலைக் குறிக்க ஒலிக்குறியீடு இடும் வழக்கம் இல்லை என்பதால், இந்த தமிழ் பிராமி எழுத்துகள் காலத்தால் மிகவும் முந்தையவையாகக் கருதப்படுகின்றன.

**கீழடியின் முக்கியத்துவம் என்ன?**

தமிழ்நாட்டில் இதுவரை செய்யப்பட்ட அகழ்வாய்வுகளில் சுட்ட செங்கல்களால் ஆன கட்டடங்கள் முதன் முதலில் வெளிப்பட்டுள்ளது.

கங்கைச் சமவெளியில் இரண்டாம் நகர நாகரீகம் (சிந்து சமவெளி நாகரீகம் முதலாம் நகர நாகரீகம்) கிட்டத்தட்ட கி.மு. ஆறாம் நூற்றாண்டில் தோன்றியது. ஆனால், அதற்கு இணையான காலகட்டத்தில் தமிழகத்தில் எந்த நகர நாகரீகமும் இருந்ததற்கான ஆதாரங்கள் இதுவரை கிடைத்ததில்லை. முதன் முதலாக கீழடியில் அதே காலகட்டத்தில் கட்டடத் தொகுதிகள் கிடைத்திருப்பதால், நகர நாகரீகத்திற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகவும் ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். ஆகவே, இரண்டாம் நகர நாகரீக காலத்தில் தமிழகத்திலும் நகர நாகரீகம் இருந்திருப்பதற்கான சாத்தியக்கூறுகளை கீழடி வெளிப்படுத்தியது.

சிந்துச் சமவெளி தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டுவரும் ஆர். பாலகிருஷ்ணன் போன்ற ஆய்வறிஞர்கள், சிந்துசமவெளிக்கும் கீழடிக்கும் இடையில் தொடர்பு இருக்கக்கூடுமென்றே கருதுகிறார்கள்.

இந்தப் பின்னணியில் பார்க்கும்போது, தமிழ்நாட்டின் எந்தவொரு தொல்லியல் களத்தையும்விட கீழடி, பல்வேறு செய்திகளைச் சொல்லிக்கொண்டே இருக்கிறது.

**கீழடி எங்குள்ளது?**

மதுரை நகரிலிருந்து தென்கிழக்கு திசையில் 13 கி.மீ. தூரத்தில் இந்த இடம் அமைந்திருக்கிறது. இந்த இடத்திலிருந்து வடக்கில் இரண்டு கி.மீ. தூரத்தில் வைகை நதி ஓடுகிறது. இந்த ஊருக்குக் கிழக்கே மணலூரும் தென்கிழக்கில் அகரம் என்ற ஊரும் மேற்கில் கொந்தகையும் அமைந்திருக்கின்றன.

கீழடியில் உள்ள தென்னந்தோப்பில்தான் முதன் முதலில் அகழ்வாய்வுப் பணிகள் நடத்தப்பட்டன. பெங்களூரில் உள்ள இந்திய அகழ்வாய்வுப் பிரிவு 2014 - 15, 2015- 16 ஆகிய ஆண்டுகளில் ஆகழ்வாய்வுகளை மேற்கொண்டது. இதற்குப் பிறகு தமிழ்நாடு அரசு 2017 -18ல் அகழாய்வுப் பணிகளைத் துவங்கியது.

## 2. Porunai Civilization
### பொருநை நாகரிகம்

வைகை நதி நாகரிகமான கீழடி, 2,600 ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்லியல் எச்சங்களுடன் தமிழ்நாட்டின் வரலாற்றுத் தொன்மைக்கான ஆதாரங்களை முன்வைத்தபோது உலகம் திரும்பிப் பார்த்தது. தமிழ் நிலம் அதைவிடவும் முற்பட்டது என்பதற்கான வலுவான சான்றுகளைத் தற்போது முன்வைத்துள்ளது பொருநை (தாமிரபரணியின் பழைய பெயர்) நதி நாகரிகம்.

சங்க இலக்கியம் போன்ற வளம் மிகுந்த இலக்கியச் செல்வம் நம்மிடையே இருந்தும், தொல்லியல் ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டிராத நிலையில், தமிழ் நிலத்தின் தொன்மை வரலாற்று ஆய்வாளர்களால் ஏற்றுக்கொள்ளப்படாமல் இருந்துவந்தது. அந்த பாராமுகத்தை கீழடி திருப்பிப்போட்டது. கீழடி அகழாய்வு நடைபெற்றபோதும், அது குறித்து எழுதப்பட்ட - பேசப்பட்டபோது, மக்களிடையே வரலாற்று உணர்வு புத்துயிர் பெற்றது. மக்கள் கூட்டம் கூட்டமாகத் தொல்லியல் தளங்களை நோக்கி ஈர்க்கப்பட்டார்கள். முதல்கட்டத்தில் கீழடியின் தொன்மையைச் சில எழுத்தாளர்கள், அரசியல் கட்சியினர் மறுக்கத் தொடங்கினார்கள். ஆதாரங்கள் வரிசையாக உறுதிப்படுத்தப்பட்டபோது, கீழடியின் தொன்மை மறுக்க முடியாத ஒன்றாக மாறியது. இப்போது அதைவிடவும் தொன்மையான ஆதாரங்கள் பொருநை நதி பாயும் மண்ணில் கிடைத்துவருகின்றன.

ஆதிச்சநல்லூரில் 145 ஆண்டுகளுக்கு முன்பே ஜெர்மானிய ஆய்வாளர் பியதோர் ஜாகோரால் அகழாய்வு தொடங்கப்பட்டிருந்தபோதும், நாடு விடுதலை பெற்ற பின்பு பெரிய அளவில் தொல்லியல் ஆய்வுகள் முன்னெடுக்கப்படவில்லை. நடைபெற்ற அகழாய்வுகளும் ஈமக்காடுகளிலேயே நடத்தப்பட்டன. அவற்றைக் கொண்டு ஒரு நாகரிகத்தின் தொன்மையையோ பண்பாட்டையோ முழுமையாக அறிய முடியாது. கீழடியிலும், தற்போது பொருநை நதி பாயும் பகுதிகளிலும் நடைபெற்றுவரும் அகழாய்வுகள் அந்தப் போதாமையைத் தீர்க்கும் அடியை வலுவாக எடுத்துவைத்துள்ளன. சிந்துவெளி நாகரிகத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு அங்குள்ள மக்கள் தென்னிந்தியாவுக்கு இடம்பெயர்ந்தார்கள் என்றே உலக மக்கள் இடப்பெயர்வு தொடர்பான நவீன ஆய்வுகள் கூறிவருகின்றன. மூத்த சிந்துவெளி அறிஞரான மறைந்த ஐராவதம் மகாதேவன், அவரை அடியொற்றி ஆய்வுசெய்துவரும் முன்னாள் ஐ.ஏ.எஸ்., அதிகாரி ஆர்.பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் சிந்துவெளிக்கும் தமிழ் நிலத்துக்குமான தொடர்புகள் குறித்துத் தொடர்ந்து கவனப்படுத்தி வந்திருக்கிறார்கள். கீழடியிலும் பொருநையிலும் கிடைத்துள்ள ஆதாரங்கள் அந்தத் திசைநோக்கியே நம்மை அழைத்துச்செல்கின்றன.

பொருநை நதி பாயும் ஆதிச்சநல்லூர், கொற்கை, சிவகளை ஆகிய பகுதிகளில் தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை கண்டறிந்த ஆதாரங்களை ‘பொருநை நதி நாகரிகம்' என்கிற தலைப்பில் தமிழக அரசு மின்னூலாக வெளியிட்டுள்ளது. தூத்துக்குடி மாவட்டம் சிவகளை ஈமக்காட்டில் கிடைத்த ஒரு தாழியில் உமி நீக்கிய நெல்மணிகள் கிடைத்துள்ளன. அமெரிக்காவின் மியாமில் உள்ள பீட்டா ஆனலிடிக் டெஸ்டிங் லேபரட்டரியில் ஆய்வுசெய்தபோது, அந்த நெல்மணிகள் 3,155 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

"தமிழர் நாகரிகம், தமிழின் தொன்மை 3,200 ஆண்டுகளுக்கு முந்தையது என்ற வரலாற்று உண்மையை, அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்டிருக்கும் சான்றுகளுடன் முதல்வர் பேரவையில் எடுத்துரைத்துள்ளார். தமிழகத்தில் சிவகளையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கிடைத்துள்ள பானைகளில் உள்ள நெல்மணிகளின்

உமியை அமெரிக்காவில் கரிம பகுப்பாய்வுக்கு உட்படுத்தினோம். அதனை முதல்வர் இன்று வெளியிட்டுள்ளார்.

அதன்படி, தமிழ் நாகரிகம் 3,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது, பல்வேறு தொழில்கள் இங்கு நடந்துள்ளன, கிறிஸ்து பிறப்பதற்கு முன்பு 1,200 ஆண்டுகளுக்கு முந்தையது சிவகளை, ஆதிச்சநல்லூர் நாகரிகம் என, அறிவியல்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளதை முதல்வர் வெளியிட்டுள்ளார்.

தமிழக தொல்லியல் துறை 7 இடங்களில் அகழாய்வு பணிகளை மேற்கொண்டு வருகிறது. 7-ம் கட்ட ஆய்வுகளில் பல்வேறு விதமான பொருட்கள் கிடைத்துள்ளன. அதில், சுடுமண்ணாலான சிற்பங்கள், முத்திரைக் காசுகள், செங்கல் கட்டுமானங்கள், விளையாட்டு பொருட்கள், கங்கை சமவெளியில் காணப்படுவதாக சொல்லப்படும் கருப்பு வண்ண பானை ஓடுகள் கிடைத்துள்ளன.

கொற்கையை எடுத்துக் கொண்டால், கி.மு. 8-ம் நூற்றாண்டிலேயே வளர்ச்சி பெற்ற துறைமுகமாக விளங்கியிருக்கிறது. மயிலாடும்பாறை அகழாய்வில் கிறிஸ்து பிறப்பதற்கு 4,000 ஆண்டுகளுக்கு முன்பாகவே அங்கு வேளாண் சார்ந்த தொழில்கள் நடைபெற்றதற்கான முடிவுகள் கிடைத்துள்ளன.

கொடுமணலில் கிடைத்திருக்கும் உறைகிணறு இரு பக்கமும் நாம் இறங்கி பார்க்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது. கங்கை கொண்டசோழபுரத்தில் கண்டெடுக்கப்பட்ட ராஜேந்திரசோழனின் அரண்மனை பாகங்கள், கி.பி. 10-ம் நூற்றாண்டில் அரண்மனை கட்டுமானம் எப்படி இருந்திருக்கும் என்ற தெளிவினை தருகிறது.

சிவகளை ஆய்வு, தமிழின், தமிழகத்தின் தொன்மையை மிகவும் முன்னோக்கி எடுத்துச் சென்றிருக்கிறது. தமிழுக்கென தனி வரிவடிவம் கிடையாது என்ற கருதுகோளை இவ்வாய்வு முடிவுகள் முறியடித்துள்ளன. கிறிஸ்து பிறப்பதற்கு 1,200 ஆண்டுகளுக்கு முன்பே நம்மிடம் எழுத்தறிவு இருந்தது என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைந்திருக்கிறது.

சிவகளையில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓடுகளில் 'ஆதன்' என்ற பெயர் இடம்பெற்றிருக்கிறது. கீழடியிலும் 'ஆதன்' என்ற பெயர் இடம்பெற்றிருக்கிறது. கீழடியில் கண்டெடுக்கப்பட்ட முத்திரைக் காசுகளை ஆய்வு செய்தபோது, புகழ்பெற்ற நாணயவியல் அறிஞர் சுஸ்மிதா மஜூம்தர், மவுரிய பேரரசுக்கு முன்னதாக இருக்கக்கூடும் என தெரிவித்துள்ளார்.
அந்த காசு கீழடியில் கிடைத்திருக்கிறது என்றால், கங்கைச் சமவெளியில் நிகழ்ந்த நகர நாகரிகம் வைகைச் சமவெளியில் இருந்திருப்பதையும், இரு சமவெளிகளிலும் பொதுமக்களுக்கு இடையே வாணிபத் தொடர்பு இருந்ததையும் உறுதிப்படுத்த முடிகிறது.

கங்கை சமவெளியில் கிடைத்துள்ள கருப்பு பானை ஓடுகள் வைகை சமவெளியிலும் கிடைத்திருப்பதால், இருபெரும் நாகரிகங்களுக்கு இடையிலான தொட்டிலை நாம் உணர முடியும்.

மதுரைக்கு அருகில் உள்ள மாங்குளத்தில்தான் பாண்டியன் நெடுஞ்செழியனின் பெயர் கண்டுபிடிக்கப்பட்டது. அதன்பிறகுதான், இலக்கியம் சார்ந்த வரலாறு மட்டும்தான் தமிழுக்குடையது என்ற கருத்தை முறியடித்து, நம்முடைய வரலாற்றுக்கென்று

அசைக்க முடியாத ஆதாரங்கள் இருக்கின்றன, என நிரூபித்ததற்கான முதல் ஆதாரமாக மாங்குளம் கல்வெட்டு கிடைத்தது.

கீழடி நாகரிகம் எழுத்தறிவு பெற்ற நாகரிகம் என்பது தெளிவாகிறது. 13 எழுத்துக்கள் கொண்ட மிகப்பெரிய சொற்றொடர் அங்கிருந்த பானைகளில் கிடைத்துள்ளது. உலக அரங்கில் வியந்து பார்க்கும் வகையில் தமிழ் சமூகம், தமிழ் மொழி 3,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதை நிரூபித்திருக்கிறோம்.
இந்த நாகரிகம் பொருநை ஆற்றின் கரையில் இருக்கக்கூடிய நாகரிகம். தாமிரபரணி ஆறு பல்வேறு காலக்கட்டங்களில் பொருநை ஆறு என அழைக்கப்பட்டிருப்பதற்கான இலக்கிய சான்றுகள் கிடைத்துள்ளன. தமிழகத்திலிருந்து இந்தியாவின் வரலாறு தொடங்குகிறது. பொருநை நதியின் கரையிலே இந்த நாகரிகம் செழித்தோங்கி வளர்ந்திருக்கிறது. அங்கு அருங்காட்சியகத்தை அமைக்க ஆணையிட்டு, திருநெல்வேலி மாவட்டத்தில் அது அமைக்கப்படும் என முதல்வர் தெரிவித்திருப்பது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது".

## 3. Recent Archeological Excavations in Tamilnadu.
## தமிழ்நாட்டின் சமீபத்திய தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகள்

### தமிழரின் தொன்மையைக் காட்டும் சான்றுகள்

தமிழர் வரலாற்றின் தொன்மைக்கான சான்றுகள் மேலும் பல இடங்களில் கிடைத்துவருகின்றன. சாத்தனூர், திருவில்லிப்புத்தூர், கொடுமணல் ஆகிய இடங்களைப் போலவே மதுரை – கொல்லம் தேசிய நெடுஞ்சாலையின் கீழும் முதுமக்கள் தாழிகள் இருக்கலாம் என்று நம்பப்படுகிறது. இதேபோல, இதன் அருகேயுள்ள மம்சாபுரம், குறவன்கோட்டை ஆகிய இடங்களின் அருகேயும் பழமையின் அடையாளங்கள் பூமியில் புதைந்துள்ளன என்றும் தொல்லியல் ஆய்வு நிபுணர்கள் சொல்கின்றனர். இவையாவும் 2000 ஆண்டுகளுக்கு மேல் பழமையானவை என்று குறிப்பிடுகின்றனர்.

### தமிழகத்தின் கலாச்சாரத் தலைநகரம்

கீழடியில் மத்தியத் தொல்லியல் அகழாய்வுத் துறையினர் மேற்கொண்ட ஆய்வில் வடமொழி எழுத்து, மண்பானைகள் உட்பட 5,300 சங்க காலப் பொருட்கள் கிடைத்துள்ளன. அது குறித்து உரிய ஆய்வு நடத்த மத்திய அரசுக்கு வேண்டுகோள்கள் விடப்பட்டன. மாமதுரை 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைமையான நகரம். ஏதென்ஸ், ரோம் ஆகிய நகரங்களுக்கு ஒப்பத் தமிழகத்தின் கலாச்சாரத் தலைநகரம் மதுரை. தமிழ்நாட்டில் நெடுங்காலமாகச் சிறப்புற்று விளங்கும் நகரங்களில் முக்கிய இடத்தைப் பெறுகிறது மதுரை. இந்நகரின் தொன்மையைப் பேசும் சான்றுகள் நிறையவே உண்டு. பிளினி, தாலமி போன்ற கிரேக்க அறிஞர்கள், மாவீரன் அலெக்ஸாண்டரின் தூதரான மெகஸ்தனிஸ் போன்ற வெளிநாட்டவரின் எழுத்துக் குறிப்புகளும் சங்க இலக்கியங்களின் பாடல் வரிகளும் விளக்குகிற தகவல்கள், இந்நகரம் 2500 ஆண்டுகளுக்கும் மேலான பழமையையும் இந்தியாவின் தொன்மை நகரங்களில் ஒன்று என்பதைச் சொல்லும் சான்றுகளாகின்றன. இருந்தாலும் மதுரை மாநகரைப் பற்றிச் சொல்லும்படியான அகழ்வாய்வுச் சான்றுகள் இதுவரை எதுவும் கிடைக்கவில்லை.
மதுரை வைகை ஆற்றங்கரையில் கடந்த 2015 ஆண்டு முதல் மத்திய தொல்துறை அகழாய்வுத் துறை பெங்களூர் பிரிவு கீழடியில் நிலத்தை வெட்டி அகழாராய்ச்சி செய்ததில் பல தரவுகள் கிடைத்துள்ளன. மொத்தம் 43 தொல்லியல் குழிகள் வெட்டப்பட்டன. சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்ட பொருட்கள் கிடைத்துள்ளன.

ஆதிச்சநல்லூரில் 114 ஏக்கரில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சி 3000 ஆண்டுத்

தொன்மையைக் காட்டுகிறது. முதுமக்கள் தாழிகள், இரும்பு, வெண்கலம் போன்ற பண்டைய பயன்பாட்டுப் பொருட்கள் கிடைத்தன. இது குறித்த சத்தியமூர்த்தி குழுவின் அறிக்கை வெளிவராமல் மத்திய அரசிடம் நிலுவையில் உள்ளது.

ஈரோடு சென்னிமலை அருகேயுள்ள கொடுமணல், அழகன்குளம், மருங்கூர் போன்ற இடங்களில் கண்டறியப்பட்ட பானையோடுகள், கரூரில் கிடைத்த மோதிரம், மதுரையில் கொங்கற்புளியக்குளம், விக்கிரமங்கலம் மலைகளில் காணப்படும் எழுத்துக்கள்; கேரளவின் எடக்கல் மலை, இலங்கை ஆனைக்கோட்டை செப்பு முத்திரை போன்றவற்றில் உள்ள தமிழ் எழுத்துக்களைக் கொண்டே தமிழின் தொன்மையை அறிந்துகொள்ள முடியும்.

தமிழகத்தில் அகழராய்ச்சி தொடர்ந்து நடைபெற்றாலும் அதற்கான முடிவுகளும் செயல்பாடுகளும் திருப்திகரமாக இல்லை. அரிக்கமேடு, காவிரிபூம்பட்டினம், உறையூர், ஆதிச்சநல்லூர், கொற்கை, முசிறி, வைகை ஓரத்தில் வருசநாடு, அழகன்குளம், கொடுமணல், பொருந்தல், கரூர் அருகே அமராவதி ஆற்றங்கரை, பாடியூர் போன்ற இடங்களில் அகழாய்வில் பல தரவுகள் கிடைத்தன. குறிப்பாக இறந்தவர்களின் எலும்புகள், முதுமக்கள் தாழிகள்தான் கிடைத்தன. ஆனால் கீழடியில் வேறு சில அரிய பொருட்கள் அகழாய்வில் கண்டறியப்பட்டுள்ளன. இங்கு கிடைத்த கழிவுநீர் கால்வாய்களைப் போன்றவை மொகஞ்சதரோ, ஹரப்பாவில்தான் இருந்தன.

தமிழகத்தின் பல்வேறு இடங்களில், இப்படியான தொல்பொருள் மற்றும் அகழ்வாராய்ச்சிகள் நடைபெற்ற செய்திகள் உள்ன. தமிழகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் வரலாற்று ஆய்வுகளை மேற்கொண்டால் இன்னும் பல தரவுகள் நடக்குக் கிடைக்கும்.

இந்தியத் திருநாட்டின் வடபுலத்தில் பாடலிபுத்திரம், கன்னோஜி, உஜ்ஜயினி, இந்திரபிரஸ்தம், தட்சசீலம் போன்ற ஒரு சில பெருநகரங்களையே சிறப்பாகச் சொல்ல முடியும். ஆனால் பண்டைய தமிழகத்தில் சிறிய நிலப் பரப்பிலேயே சிறப்பு வாய்ந்த நகரங்களாக, தெற்கேயிருந்து களக்காடு, திருச்செந்தூர், மணப்பாடு, உவரி, கொற்கை, பழைய காயல், ஆதிச்சநல்லூர், தென்காசி, திருவில்லிப்புத்தூர், இராமநாதபுரம், மதுரை, பரம்புமலை, தொண்டி, உறையூர், கரூர், தகடூர், முசிறி, காங்கேயம், காவிரிப்பூம்பட்டினம், மாமல்லபுரம், காஞ்சி, திருவள்ளூர் மாவட்டத்தில் சானூர், குன்றத்தூர், பட்டறைப்பெரும்புதூர், அத்திரம்பாக்கம், பரிக்குளம், பூண்டி மற்றும் திருக்கோவிலூர் என வரலாற்றைச் சொல்லும் எண்ணற்ற நகரங்கள் இருந்துள்ளன. இதிலிருந்து வடபுலத்து நாகரிகத்தைவிடத் தமிழரின் நாகரிகமும் ஆளுமையும் பெரிதாக இருந்திருக்க வேண்டும் என்பது புலப்படுகிறது.

புதுக்கோட்டை மாவட்டம் பொற்பனைக்கோட்டையில் அகழாய்வுப் பணி நடந்துவருகிறது. சித்தன்னவாசல், குடுமியான்மலை, கலசமங்களம் எனப் பல கிராமப் பகுதிகளில் அகழாய்வுத் தரவுகள் பூமிக்குக் கீழ் உள்ளதை மீட்க வேண்டும். சமீபத்தில் திருவில்லிப்புத்தூர் அகழ்வாராய்ச்சி செய்யவேண்டிய பகுதிக்கும், ஈரோடு மாவட்டம் கொடுமணல் அகழ்வாராய்ச்சி பகுதிக்கும் செல்ல நேரிட்டது. கொடுமணல் மற்றும் இங்குள்ள அரச்சலூரில் இசை சார்ந்த பல அகழ்வாராய்ச்சி தகவல்கள் கிடைத்துள்ளன. நன்னூல் எழுதிய பவனந்தி முனிவர் வாழ்ந்த திங்களூர் இங்கேதான் உள்ளது. இங்கிருந்து நொய்யலாற்றில் பரிசல், சிறு படகுகள் மூலம் பொருட்களை ரோமாபுரிக்கு அப்போதே அனுப்பியது பெரும் வியப்பை தந்தது. இன்னும் பல தரவுகள் தோண்டி எடுத்தால் அறிந்து கொள்ளும் வாய்ப்புகள் உள்ளன. இது சுமார் இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையான வரலாற்று தொடர்புடையது. கொடுமணல் நாகரிகம் அல்லது நொய்யலாற்று நாகரிகம்

என்று அழைக்கப்படுகிறது. ஆனால் இந்த பகுதி எப்படி அழிவுக்கு உள்ளானது, இதனுடைய உண்மை வரலாறு என்ன என்பது இன்னும் வெளி உலகத்திற்கு வெளிவரவில்லை. இங்கு இந்திய அரசின் அதிகாரப்பூர்வ தொல்லியல் ஆய்வு அமைப்பான இந்திய தொல்லியல் ஆய்வகம் தனது ஆய்வுப் பணியை தொடங்கியுள்ளது. கொடுமணல் பகுதியில் தொல்லியல் துறையினர் ஆய்வு செய்ய எடுத்திருக்கும் பகுதி சுமார் 50 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். இந்த இடம் கல்லறைப் பகுதியாக இருந்திருக்க வேண்டும் என்று ஏற்கனவே ஆய்வு செய்த ஆய்வாளர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். அந்த ஆய்வுகளின் போது கல்லறைகள், சடலங்கள் புதைக்கப்பட்ட புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இங்கு 15 ஹெக்டேர் பரப்பளவில் கற்கால குடியிருப்புகள் இருந்ததற்கான தடயங்கள் உள்ளன. இங்கு முதல் ஆய்வினை தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவை இணைந்து 1985 ஆம் ஆண்டு நடத்தியது. பின்னர் 1986, 1989,1990ஆம் ஆண்டுகளில் ஆய்வுகள் நடத்தியது. இதில் 13 கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 48 இடங்களில் தோண்டப்பட்டு பழமையான பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

1999ஆம் ஆண்டு மீண்டும் ஒரு அகழாய்வு நடந்தது. அப்போது 15 அகழிகள் தோண்டப்பட்டன. இந்த அகழ்வாராய்ச்சி இந்தியாவின் மிகப்பெரிய ஆய்வு கருதப்படுகிறது. காரணம் ஒரே பகுதியில் 15 அகழிகள் தோன்டுவது என்பது மிகப்பெரிய விஷயமாகும். இது இந்த பகுதியில் பல்வேறு இன மக்கள் கூட்டாக வாழ்ந்ததற்கான அடையாளமாகக் கருதப்படுகிறது. காரணம் இங்கு கண்டுபிடிக்கப்பட்ட கல்லறைகளும் வெவ்வேறு விதமாக உள்ளன. இங்கு கிடைத்த பொருட்கள் கிமு 4ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை என்றும் ஆய்வில் தெரியவந்தது. இரும்பு பொருட்கள், கல், கோமேதகம், விலையுயர்ந்த குண்டு மணிகளும் கிடைத்துள்ளன. ஆயிரக்கணக்கான வளையல்கள் கிடைத்துள்ளன. மாணிக்கக் கற்கள், ரத்தினம் உள்பட விலையுயர்ந்த கற்களும் கிடைத்துள்ளன.

முழுமையான ஆராய்ச்சி கொடுமணலில் தேவை என்று ஆராய்ச்சியாளர்கள் கோரிக்கை விடுத்து வந்த இந்த நிலையில் இந்திய தொல்லியல் ஆய்வு மையம் தொடங்கியிருக்கும் ஆய்வு முழுமையான வரலாற்றை கொண்டு வரும் என்று எதிர்பார்த்து உள்ளனர். அதே போலவே, வரலாற்றில் திருவில்லிப்புத்தூருக்கு ஒரு முக்கிய இடம் உண்டு. இந்த பகுதியை இராணி மல்லி என்பவர் ஆண்டார். கோதை பிறந்த ஊர் கோவிந்தன் வாழும் ஊர். தமிழை ஆண்டாள், கோதை நாச்சியாருடைய திருத்தலம். ஆயிரம் வருடங்களுக்கு முன் கட்டப்பட்ட கோவில்.

இருநூறு ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட கல்விச் சாலைகள், நூலகங்கள் சூழ்ந்த ஊர். திருப்பாவை என்ற தமிழ் இலக்கியத்தை தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு அர்ப்பணித்த ஊர். பெரியாழ்வாரின் தீந்தமிழ் பாசுரங்கள் இன்றைக்கும் வியக்க வைக்கின்றது. இப்படி பல வரலாற்றுத் தரவுகளை திருவில்லிப்புத்தூருக்கு சொல்லிக் கொண்டே போகலாம். திருவில்லிப்புத்தூர் அருகேயுள்ள மதுரை - கொல்லம் தேசிய நெடுஞ்சாலையில் மேற்கு தொடர்ச்சி மலை அருகே கிருஷ்ணன் கோவில் வட்டாரத்தில் உள்ள விழுப்பனூர் கிராமத்தில் காவலர்களுக்கு துப்பாக்கிச் சுடும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த இடத்தில் முதுமக்கள் தாழிகள் நிரம்ப புதைந்துள்ளது. இது குறித்து ராஜபாளையம் ராஜுக்கள் கல்லூரி வரலாற்றுத் துறையை சார்ந்த உதவிப் பேராசிரியர் கந்தசாமியும், பேராசிரியர் திருப்பதி, பேராசிரியர் தங்க முனியான்டி, பேராசிரியர் முத்துகுமார் ஆகியோர் இதுகுறித்து ஆய்வு நடத்தியுள்ளனர். இந்த பூமியில் காணப்பட்ட முதுமக்கள் தாழிகளின் தொடர்ச்சி பல இடங்களில் இந்த வட்டாரத்தில் உள்ளதாக தரவுகள் சொல்கின்றன. அதன்மீது கற்பாறைகளால் அடுக்கி மூடப்பட்டுள்ளன. வெவ்வேறு வகையான மூன்றுவித ஓடுகள் ஆங்காங்கு காணப்படுகின்றன. ஏறத்தாழ 2 அங்குலம் கனப் பரிமாணத்தில் களிமண், செம்மண் முதுமக்கள் தாழிகள் தென்பட்டுள்ளன. இதில் வண்ணப் பூச்சும், பூ வேலைப்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. கற்கள் யாவும் கனம் அதிகமாகவும், அவை

இரும்புத் தாது கலந்து சுட்ட மண்ணால் கலவைபடுத்தப்பட்டு கட்டப்பட்டுள்ளது. இந்த முதுமக்கள் தாழிகளும் பூமியில் புதைக்கப்பட்டுள்ள இடத்தில் வடபுறமும், கீழ்மேலாகவும் ஒரு சிறு ஓடை உள்ளது. இந்த சிற்றோடையின் வடகரை மிகப் பழமையான சுவர் தடுப்புகளும் கொண்டுள்ளது. எனவே அங்கு கட்டுமானப் பணிகள் அந்த காலத்தில் நடந்துள்ளதாக தெரிகிறது. மதுரை - கொல்லம் தேசிய நெடுஞ்சாலையின் கீழும் முதுமக்கள் தாழிகள் இருக்கலாம் என்றும் நம்பப்படுகிறது. எனவே இந்த பகுதி தொல் மூத்த தமிழ் குடியினர் வாழ்ந்துள்ளனர். இவர்களுடைய பண்பாட்டையும், நாகரிகத்தையும் வெளிக் கொணர வேண்டியது அவசரமும், அவசியமும் ஆகும். இதே போல, இதன் அருகேயுள்ள மம்சாபுரம், குறவன்கோட்டை ஆகிய இடங்களின் அருகேயும் பழமையின் அடையாளங்கள் பூமியில் புதைந்துள்ளன என்றும் பல கருத்துகளை சொல்கின்றனர்.

இவையாவும் 2000 ஆண்டுகளுக்கு மேல் பழமையானவை என்று குறிப்பிடுகின்றனர். சமீபத்தில் திருவில்லிப்புத்தூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அடிக்கல் நாட்டிய நிலத்திலும் அகழ்வாராய்ச்சி செய்தால் தமிழர்களின் தொல் நாகரிகத்தின் அடையாளம் கிடைக்கும் என்று திருவில்லிப்புத்தூரை சேர்ந்த கள ஆய்வாளர்கள் சொல்கின்றனர். ஏற்கனவே விருதுநகர் மாவட்டம், செவல்பட்டி, கோபால்சாமி மலை போன்ற சில பகுதிகளும், திருநெல்வேலி மாவட்டம் கரையிருப்பு, கழுகுமலை போன்ற பகுதிகளிலும் அகழ்வாராய்ச்சி பணிகள் மட்டுமல்லாமல், பாறை ஓவியங்களையும் ஆய்வு நடத்த வேண்டுமென்ற கோரிக்கைகளும் உள்ளன. கீழடியில் மத்திய தொல்லியல் அகழாய்வுத் துறையினர் மேற்கொண்ட ஆய்வில் வடமொழி எழுத்து, மண்பானைகள் உட்பட 5,300 சங்கக்கால பொருட்கள் கிடைத்துள்ளன. அது குறித்து உரிய ஆய்வு நடத்த மத்திய அரசுக்கு வேண்டுகோள்கள் விடப்பட்டன. மாமதுரை 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைமை நகரம் ஆகும். ஏதென்ஸ், ரோம்-க்கு ஒப்ப தமிழகத்தின் கலாச்சார தலைநகரம் மதுரை.

தமிழ்நாட்டில் நெடுங்காலமாக சிறப்புப் பெறுகிற நகரங்களில் முக்கிய இடத்தைப் பெறுகிறது மதுரை. இந்நகரின் தொன்மையை பேசும் சான்றுகள் நிறையவே உண்டு. பிளினி, தாலமி போன்ற கிரேக்க அறிஞர்கள் மற்றும் மாவீரன் அலெக்ஸாண்டரின் தூதரான மெகஸ்தனிஸ் போன்ற வெளிநாட்டவரின் எழுத்துக் குறிப்புகளும், சங்க இலக்கியங்களின் பாடல் வரிகளும் விளக்குகிற தகவல்கள், இந்நகரம் 2500 ஆண்டுகளுக்கும் மேலான பழமையையும் இந்தியாவின் தொன்மை நகரங்களில் ஒன்று என்பதையும் சொல்லுகிற சான்றுகளாகின்றன. இருந்தாலும் மதுரை மாநகரைப் பற்றிய சொல்லும்படியான அகழ்வாய்வு சான்றுகள் இதுவரை எதுவும் கிடைக்கவில்லை என்றே தெரிய வருகிறது.

அந்நகரின் வரலாற்றைக் கி.பி. பத்தாம் நூற்றாண்டுக்கு முந்தைய கால கட்டத்திற்கு நகர்த்துவதற்குத் தோதான வலுவான ஆதாரங்கள் எதுவும் மதுரை நகர் சார்ந்து இதுவரை நமக்குக் கிடைக்கவில்லை என்பதே அதிகமான வரலாற்று ஆய்வாளர்களின் கருத்தாக இருக்கிறது. இந்நிலையில் மதுரை வைகை ஆற்றங்கரையில் கடந்த 2015 ஆண்டு முதல் மத்திய தொல்துறை அகழாய்வுத் துறை பெங்களூர் பிரிவு கீழடியில் நிலத்தை வெட்டி ஆகழராய்ச்சி செய்ததில் பல தரவுகள் கிடைத்துள்ளன. மொத்தம் 43 தொல்லியல் குழிகள் வெட்டப்பட்டன. சங்ககாலத்தில் பயன்படுத்தப்பட்டப் பொருட்கள் கிடைத்துள்ளன. அன்றைக்குள்ள நாகரீகம் கண்டறியப்பட்டுள்ளது. சமீபத்தில் இருந்து திரும்பவும் கீழடியில் அகழ்வாராய்ச்சி பணிகள் தொடங்கியுள்ளதாக செய்திகள். ஆதிச்சநல்லூரில் 114 ஏக்கரில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் 3000 ஆண்டின் தொன்மையை காட்டுகிறது. 1872, 1876, 1903 1914 என பல கட்டங்களில் இங்கு ஆய்வுப் பணிகள் நடந்தன. முதுமக்கள் தாழிகள், இரும்பு, வெண்கலம் போன்ற பண்டைய பயன்பாட்டுப் பொருட்கள் கிடைத்தன. இது குறித்தான சத்தியமூர்த்தி குழுவின் அறிக்கையும் வெளிவராமல் மத்திய அரசிடம் பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது.

**7 இடங்களில் தொல்லியல் அகழாய்வுப் பணிகள்:**

தமிழ்நாட்டில் ஏழு இடங்களில் தொல்லியல் அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருவதாக தொழில் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார்.

சட்டப் பேரவை வளாகத்தில் செய்தியாளர்களுக்கு அவர் வியாழக்கிழமை அளித்த பேட்டி:
தமிழ்நாட்டின் தொல்லியல் துறை ஏறத்தாழ 7 இடங்களில் இந்த ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. கீழடியில் இப்போது 7-ஆம் கட்ட ஆய்வு நடந்து வருகிறது. இந்த ஆய்விலும், பல்வேறு விதமான பொருட்கள் நமக்கு கிடைத்திருக்கிறது. சுடுமண்ணால் ஆன சிற்பங்கள், முத்திரை காசுகள், பல்வேறு செங்கல் கட்டுமானங்கள், கங்கை சமவெளியில் இருப்பதாக சொல்லக்கூடிய கருப்பு வண்ண பானை ஓடுகள் கீழடியிலும் கிடைத்துள்ளன.

அதே போன்று கொற்கையை எடுத்துக் கொண்டால், கி.மு. 8-ஆம் நூற்றாண்டில் சங்க காலத்திலேயே வளர்ச்சி பெற்ற துறை முகமாக இருந்துள்ளது.

மயிலாடும்பாறையில் கிடைத்துள்ள ஆய்வுகள் கிறிஸ்து பிறப்பதற்கு 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே வேளாண் சார்ந்த தொழில்கள் நடந்துள்ளதை நமக்கு அறிவித்துள்ளது. கொடுமணலில் கிடைத்துள்ள உறைகிணறு இரண்டு பக்கமும் நாம் இறங்கி பார்க்கும் வகையில் அரிய கண்டுபிடிப்பாக உள்ளது. சிவகளையில் நடத்தப்பட்டுள்ள ஆய்வுகள் தமிழ் மொழியின் தொன்மையை மிகவும் பழைய காலத்துக்கு மிகவும் முன்னோக்கி அது எடுத்து சென்றுள்ளது.

கிறிஸ்து பிறப்பதற்கு முன்பாகவே 1,200 ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழனுக்கு என்று ஒரு நாகரீகம் இருந்தது. நம்மிடத்தில் எழுத்தறிவு இருந்தது என்பதை எடுத்து காட்டும் வகையில் ஆய்வுகள் அமைந்துள்ளது. சிவகளையில் கிடைத்துள்ள பானை ஓடுகளில் ஆதன் என்ற பெயர் இடம் பெற்றுள்ளது. அதே பெயர் கீழடியிலும் கிடைத்துள்ளது.

தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் ஆதிச்சநல்லூர், கொற்கை, சிவகளையில் தமிழர் நாகரிகம் செழித்தோங்கி வளர்ந்திருக்கிறது என்ற வகையில் பொருநை நாகரிகத்துக்கான ஒரு மிகப் பெரிய அருங்காட்சியகத்தை ரூ 15 கோடி செலவில் உருவாக்குவதற்கு திருநெல்வேலி மாநகரத்தில் அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று சொல்லியிருப்பது வரலாற்றில் குறிக்கப்பட வேண்டிய

ஒன்று. ஆய்வுகளில் கிடைத்துள்ள பொருநை நாகரிகத்துக்கான பொருட்கள் இந்த அருங்காட்சியில் காட்சிப்படுத்தப்படும். தொடர்ந்து கள ஆய்வு செய்யப்படும். வருங்காலத்தில் கிடைக்கும் பொருட்களையும் அங்கு காட்சிப்படுத்துவோம் என்று தங்கம் தென்னரசு கூறினார்.

**தென் தமிழக பொக்கிஷங்களை காட்சிப்படுத்த நெல்லையில் ரூ 15 கோடியில் நவீன அருங்காட்சியகம்**

தென் தமிழகத்தில் அகழ்ந்தெடுக்கப்பட்ட அரிய பொக்கிஷங்களை காட்சிப்படுத்த நெல்லையில் ரூ 15 கோடியில் நவீன அருங்காட்சியகம் அமைக்கப்படுமட் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.

**சட்டப் பேரவையில் விதி 110-ன் கீழ் அவர் படித்தளித்த அறிக்கை:**

தமிழ்நாடு தொல்லியல் துறையால் இப்போது மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வின் போது ஆதிச்சநல்லூருக்கு அருகே சிவகளைப் பறம்புப் பகுதியில் முது முக்கள் தாழி ஒன்று கண்டெடுக்கப்பட்டது. இதிலிருந்த நெல்மணிகள் அமெரிக்க நாட்டின் மியாமி நகரத்தில் அமைந்திருக்கும் உலகப் புகழ்பெற்ற பீட்டா பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டன. இதன் ஆய்வு முடிவுகள் கிடைத்துள்ளன.

கி.மு. 1,155-ம் ஆண்டு: முதுமக்கள் தாழியில் கண்டெடுக்கப்பட்ட நெல்மணிகளின் காலம் கி.மு.1,155 எனக் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, தண்பொருநை என்று அழைக்கப்பட்ட தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் 3,200 ஆண்களுக்கு முற்பட்டது என்பதை அறிவியல் ஆய்வுகளின் அடிப்படையில் உறுதி செய்ய முடிகிறது. இதனை அறிவிப்பில் அளவிட முடியாத பெருமிதமும், மனமகிழ்ச்சியும் கொள்கிறேன். பண்டைய தமிழர்களின் செழுமையான பண்பாடு, கடல் வழி வணிகம், நீர் மேலாண்மை, இரும்பு உருக்குதல், அரிய மணிகள் தயாரித்தல், முத்துக் குளித்தல் போன்ற தொழில்நுட்பங்களை உலகம் அறிந்து கொள்ளக் தேவையான சான்றுகளைச் சேகரிக்கும் வகையில், இந்தியாவில் வேறெந்த மாநிலத்தை விடவும் அதிகளவு நிதியாக ரூ 5 கோடி நிகழ் நிதியாண்டில் ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக ஆதிச்நல்லூர், சிவகளை மற்றும் கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வின் போது கிடைத்த அரிய பொருள்களை அழகுறக் காட்சிப் படுத்தும் விதமாக, திருநெல்வேலி நகரில் ரூ 15 கோடியில் நவீன வசதிகளுடன் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

**கீழடி நாகரிகம்:**

கீழடியில் தொடர்ந்து அகழாய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அங்கு அண்மையில் சூரியன், நிலவு மற்றும் வடிவியல் குறியீடுகள் கொண்ட முத்திரைகளுடன் கூடிய வெள்ளிக் காசு கண்டெடுக்கப்பட்டது. அதை ஆய்வு செய்த தலைசிறந்த நாணயவியல் அறிஞரும், கொல்கத்தா பல்கலைக்கழகப் பேராசிரியருமான சுஷ்மிதா பாசுமஜூம்தார், வெள்ளிமுத்திரைக் காசானது கி.மு. நான்காம் நூற்றாண்டுக்கு முற்பட்டது எனக் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஏற்கெனவே, கரிம பகுப்பாய்வு முடிவுகளின் படி, கீழடியில்கண்டெடுக்கப்பட்ட தமிழி எழுத்துகளின் காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டு என்று அறிவிக்கப்பட்ட நிலையில், அதனை வலுப்படுத்தும் விதமாக இப்போது பெறப்பட்ட இரண்டு கரிம மாதிரிகளின் பகுப்பாய்வு முடிவுகளிலும் கீழடி நாகரிகம் கி.மு. ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனத் தெரியவிந்துள்ளது.

கொற்கையிலும் அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த அகழாய்வில் இப்போது கருப்பு வண்ணப்பூச்சு பெற்ற கங்கை சமவெளியைச் சேர்ந்த பானை ஓடுகள் கிடைத்துள்ளனன. இதன்மூலம், கொற்கைத் துறைமுகமானது. கி.மு. ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பே வெளிநாடுகளுடனும், இந்தியாவின் பல்வேறு பகுதிகளுடனும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தது என்பது உறுதியாகிறது என முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.

**பொற்பனைக்கோட்டை அகழாய்வில் செங்கல் கால்வாய் கட்டுமானம்:**

புதுக்கோட்டை மாவட்டம், பொற்பனைக்கோட்டை அகழாய்வில், செங்கற்களால் கட்டப்பட்ட கால்வாய் போன்ற கட்டமைப்பு வியாழக்கிழமை காலை வெளிக்கொணரப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை அருகேயுள்ள பொற்பனைக்கோட்டைப் பகுதியில் சங்க காலக்கோட்டை இருந்ததற்கான, சுமார் 1.63 கிலோ மீட்டர் நீளத்தில் வட்ட வடிவிலான சுற்றுச்சுவர் உள்ளிட்ட அடையாளங்களைக் கொண்டுள்ளது.

இங்கு தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக பேராசிரியர் இனியன் தலைமையிலான குழுவினர் கடந்த 13 நாள்களாக அகழாய்வை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த சில நாட்களுக்கு முன்பு இந்த அகழாய்வுக் குழிகளில் இரும்பாலான கொக்கி, மண்பானைகள், குடுவைகள் மூடியிலுள்ள கூம்புபோன்ற மேல்பகுதி, விளையாட்டுப் பொருளாகக்கருதப்படும் சுடுமண் வட்டச்சில்லு போன்றவையும் கண்டெடுக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாக சுமார் இரண்டரை அடி ஆழத்தில் சுடுமண் செங்கற்களால் ஆன கால்வாய் போன்ற கட்டமைப்பு ஒன்று வியாழக்கிழமை காலை வெளிக்கொணரப்பட்டுள்ளது.

இதேபோல், அகழாய்வுக்கு வெளியே பொற்பனைக் கோட்டையின் மேற்பகுதியில் புதுக்கோட்டை தொல்லியல் ஆய்வுக் கழகத்தினர், அதன் நிறுவனர் ஆ. மணிமண்டன் தலைமையில் தொடர் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். இதில் மேற்குப் புற அகழிமேட்டில் சுடுமண் மேற்கூரை ஓடுகள், மதுக்குடுவையை ஒத்த அடிப்பாகம் ஆகியவை கிடைத்துள்ளன. இவையும் அகழாய்வில் ஈடுபட்டுள்ள பேராசிரியர் இனியனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஆதிச்சநல்லூரில் நீண்ட காலமாகவே ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. ஈமத்தாழிகள், பானைகள் போன்றவை கண்டறியப்பட்டுள்ளது மட்டுமல்லாமல், சிறிய வகை கருவிகள் போன்றவையும் ஆதிச்சநல்லூரில் கண்டறியப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் சிவகளையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் பானை ஒன்றில் வைக்கப்பட்டிருந்த நெல்மணிகள் கிடைத்துள்ளது. அந்த நெல்மணிகளை எடுத்து ஆய்வு மேற்கொண்ட போது, கிமு 1155-ம் ஆண்டை சேர்ந்த நெல்மணி என்பதைக் கண்டறிந்துள்ளனர்.

கொற்கை பகுதியில் சங்கு வளையல்கள், சங்கு மணிகள் போன்றவை கிடைத்தன. அந்த பகுதி சங்கு அறுக்கும் தொழிற்சாலை அமைந்திருக்கலாம் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். வடிகட்டிகள், கங்கை பகுதியில் கிடைக்கும் மண்பாண்டங்கள் போன்றவற்றை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். அதேபோல் பல வடிவமைப்புகள் கொண்ட வெளிநாட்டு மண்பாண்டங்களும் கொற்கையில் கிடைத்துள்ளது. எனவே கொற்கை பகுதி, மிகப்பெரிய வணிக பகுதியாக இருந்திருக்கலாம் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

.

**கொற்கையில்,** கடந்த 1968 மற்றும் 1969-ம் ஆண்டுகளில் தமிழக தொல்லியல்துறை சார்பில் அகழ்வாய்வு செய்யப்பட்டது. அந்த அகழாய்வுப் பணிதான், தமிழக தொல்லியல்துறை உருவான பின்னர், செய்யப்பட்ட முதல் அகழாய்வு.
அந்த அகழாய்வில், கொற்கை நகரம் சுமார் 2,800 ஆண்டுகள் பழைமையானது என்பது உறுதியானது. இங்கு துறைமுகம் இருந்ததாகவும், இங்கிருந்து கடல்வழி ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடந்ததாகவும், 'கொற்கை' பாண்டிய மன்னர்களின் தலைநகராகவும் விளங்கியது எனவும் அறிவிக்கப்பட்டது. 52 ஆண்டுகள் கழித்து, தற்போது இங்கு மீண்டும் அகழாய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த அகழாய்வுப் பணிக்காக, கொற்கைப் பகுதியில் 17 ஆய்வுக்குழிகள் தோண்டப்பட்டுள்ளன. இந்த அகழாய்வில் ஏற்கெனவே சுமார் 2,800 ஆண்டுகள் பழைமையான கட்டிடம், அறுக்கப்பட்ட நிலையில் சங்குகள், சங்குகளை பட்டை தீட்டப் பயன்படுத்தப்பட்ட பல வடிகங்கள், சங்குகள், சங்கினால் செய்யப்பட்ட வளையல் துண்டுகள், இரும்பு உருக்குத் துண்டுகள், கறுப்பு சிவப்பு பானை ஓடுகள், கீறல்கள் மற்றும் பல்வேறு குறியீடுகள் உள்ளிட்ட பல்வேறு வகையான பொருள்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த மாதம் நான்கு அடுக்குகள் கொண்ட திரவப் பொருள்களை வடிகட்டும் சுடுமண் குழாய்கள், உருகிய கண்ணாடி மணிகள், கடல் சிப்பிகள், சில கடல் வாழ் உயிரினங்களின் எலும்புகள், சுமார் 2,000 ஆண்டுகளுக்கு முன்பு சங்க காலத்தில் பயன்படுத்திய 9 அடுக்கு கொண்ட செங்கல் கட்டடம் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**ராமநாதபுரம் அழகன்குளத்தில்** முதல் முதலில், 1980களில் அகழ்வாய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. பண்டைக் காலத்தில் இப்பகுதியில் மிகவும் வலுவான வர்த்தகம் நடந்திருப்பதற்கான பல்வேறு அகழ்வாய்வு ஆதாரங்கள் இருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றன. மேலும், இங்கு மிகப்பெரிய அளவில் அகழ்வாய்வு பணிகளை மேற்கொள்ள முன்னாள் முதலமைச்சர் உத்தரவிட்டிருந்தார்.

முதலில் செய்யப்பட்ட அகழ்வாய்வின் போது, பூமியில் புதைக்கப்பட்டிருந்த பழங்காலத்து ஆபரணங்கள், அரிய வகை வளையல்கள், கண்ணாடி முத்துக்கள், ரோமானிய நாணயங்கள், பழங்காலத்துப் பானைகள் கண்டுபிடிக்கப்பட்டதாக அகழ்வாய்வு பணிகளில் ஈடுபட்டு வரும் அதிகாரிகள் தெரிவித்தனர். இதன் மூலமே இது வலுவான வர்த்தக பகுதி என்று அதிகாரிகள் கணிக்கின்றனர்.

மத்திய தொல்லியல்துறை சில பகுதிகளில், முதலில் அகழ்வாய்வு பணிகளைத் துவங்கினாலும், பின் தமிழ்நாடு தொல்லியல்துறையே அந்த பணிகளை முன்னோக்கி எடுத்துச் செல்கிறது. இந்த பணிகள் பற்றிப் பல விமர்சனங்கள் எழுந்தாலும், அகழ்வாய்வுகள் தொடர்ந்து நடைபெறும் பட்சத்தில் அவை வரலாற்றை மாற்றி எழுத வழிவகை செய்யும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

## 4. Centenary Year of Madurai Gandhi Museum.
**மதுரை காந்தி அருங்காட்சியகத்தின் நூற்றாண்டு**

மகாத்மா காந்திக்கும் மதுரைக்கும் உள்ள முக்கியத்துவத்தை சிறப்பிக்கும் வகையில், ராணி மங்கம்மாள் அரண்மனையில் 1959 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 அன்று இந்தியாவில் முதன்முறையாக காந்திக்கு அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது. அப்போதைய பிரதமர் ஜவகர்லால் நேரு நேரில் வந்து அருங்காட்சியகத்தை திறந்து வைத்தார். இந்தியா முழுவதும் ஏழு இடங்களில் காந்திக்கு அருங்காட்சியகம் இருந்தாலும், தென்னிந்தியாவில் உள்ள ஒரே அருங்காட்சியகம் இது தான். இங்கு, காந்தி சுடப்பட்ட போது அணிந்திருந்த அவரது இரத்தக்கறை படிந்த வேஷ்டி பத்திரமாக பாதுகாக்கப்படுகிறது.

## 5. Centenary Year of Gandhi's Revolution In Dress.
**காந்தியின் ஆடை புரட்சியின் நூற்றாண்டு**

மதுரையில் அரையாடைக்கு மாறி மகாத்மா காந்தி தனது தோற்றத்தில் மேற்கொண்ட புரட்சியின் நூற்றாண்டு நினைவை செப்டம்பர் 22ஆம் தேதி கொண்டாடுகிறது மதுரை காந்தி அருங்காட்சியகம்.

இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்ட தேசத்தந்தை மகாத்மா காந்தி இதுவரை 20 முறை தமிழகம் வந்துள்ளார். அதில், 5 முறை மதுரைக்கு வந்த போது பல்வேறு முக்கியமான புரட்சிகளுக்கு வித்திட்டுள்ளார். 1919 ல் ரவுலட் சட்டத்திற்கு எதிராக இளைஞர்களை திரட்டவும், 1921 ல் ஒத்துழையாமை இயக்கத்திற்கு பரப்புரை மேற்கொள்ளவும், 1927 ல் கதர் துணிகளுக்கு பரப்புரை செய்யவும், 1934 ல் அரிஜன நல யாத்திரைக்கும், 1946 ல் அரிஜன வழிபாட்டிற்கு மீனாட்சி அம்மன் கோவிலில் அனுமதித்த போதும் வருகை தந்துள்ளார்.

மதுரைக்கு இரண்டாவது முறையாக 1921 ஆம் ஆண்டு செப்டம்பர் 21 ஆம் தேதி பிற்பகலில் வந்திறங்கினார் காந்தி. ஒத்துழையாமை இயக்கத்துடன், சுதேசி மற்றும் கதர் பரப்புரையை மேற்கொள்ள வந்தவர், மதுரை மேலமாசி வீதியில் இருந்த அவரது ஆதரவாளர் ராம் கல்யாண்ஜி என்பவருக்கு சொந்தமான 251 A என்ற எண் கொண்ட வீட்டில் தங்கினார். குஜராத் பாரம்பரிய உடையில் தலைப்பாகை, வேஷ்டி, சட்டை அணிந்து வந்திருந்த காந்தி,மறுநாள் செப்டம்பர் 22 ஆம் தேதி காலை தனது தலையை மொட்டை அடித்துக் கொண்டு, வேஷ்டி மற்றும் ஒரு துண்டு மட்டும் அணிந்த படி தோன்றினார்.

கூலி தொழிலாளிகள், விவசாயிகளின் ஏழ்மையை உணர்த்தும் வகையில் தன்னுடைய உடையை மாற்றிக்கொள்ள நினைத்துக் கொண்டிருந்த காந்தி, மதுரையில் அந்த முடிவை செயல்படுத்தினார். "எனது வாழ்க்கை பயணத்தில் நான் மேற்கொண்ட மாற்றங்கள் குறித்து பின்னர் நான் வருந்தியது கிடையாது. நான் அவற்றை செய்தே ஆக வேண்டியிருந்தது. அத்தகைய பெரும் மாற்றம் ஒன்றினை எனது உடையில் நான் மதுரையில் செய்தேன்" என காந்தி தனது குறிப்புகளில் பதிவு செய்துள்ளார்.

இந்தியாவின் ஏழ்மையை உணர்த்துவதற்காக காந்தி அணிந்த அரையாடையே அவரது அடையாளமாகவும் மாறிப்போனது. மதுரை மேலமாசி வீதியில் அவர் தங்கியிருந்த வீடு 1954 ஆம் ஆண்டு விற்பனைக்கு வந்த போது அதை தமிழ்நாடு கதர் கிராம கைத்தொழில் வாரியம் வாங்கி கதர் விற்பனையை நடத்தி வருகிறது.தற்போதும் மேலமாசி வீதியை கடக்கையில் அந்த வீட்டையும், அதில் "வறுமையில் வாடித்தவிக்கும் பாமர மக்களின் தானும் ஒருவன் என்பதை உணர்த்தும் வகையில் காந்தியடிகள் முழந்தாள் வரை ஆடை உடுத்தி விரதம் மேற்கொண்ட இடம்" என பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டினையும் காணலாம்.
முதன் முறையாக அந்த அரையாடை தோற்றத்துடன் 1921 செப்டம்பர் 22 ஆம் தேதியே மதுரை மக்கள் முன்பு உரையாற்றினார்.அப்படி அவர் தோன்றிய இடத்தில் 1984 ஆம் ஆண்டு அவரது திருவுருவ சிலை அமைக்கப்பட்டு, தற்போது காந்தி பொட்டல் என்ற பெயரில் அழைக்கப்பட்டு வருகிறது.

அதன்பின்னர், 1934 ஆம் ஆண்டு நான்காவது முறையாக காந்தி மதுரைக்கு வந்து மீனாட்சி அம்மன் கோவிலில் தரிசனம் செய்ய சென்ற போது, அப்போது விடுதலை போராட்ட வீரராக இருந்த கக்கனை கோவிலுக்குள் நுழைய அனுமதி அளிக்கவில்லை. "எப்போது அனைவரும் இந்த கோவிலுக்குள் நுழைய அனுமதி அளிக்கப்படுகிறதோ அப்போது நானும் நுழைந்து கொள்கிறேன்" என தெரிவித்து வழிபாடு செய்யாமல் திரும்பி சென்றார். பின், 1946 ஆம் ஆண்டு கடைசியாக மதுரை வந்த போது, அரிஜனர்கள் வழிபட மீனாட்சி அம்மன் கோவிலில் அனுமதி அளிக்கப்பட்ட செய்தியறிந்து சுவாமி தரிசனம் செய்தார்.

## 6. Tamil Development department Announcements.
**தமிழ் வளர்ச்சித்துறை அறிவிப்புகள்**

**தமிழ் வளர்ச்சி துறையின் முக்கிய அறிவிப்புகள்!**

தீராக்காதல் திருக்குறள் என்ற பெயரில் தீந்தமிழ் நிகழ்ச்சிகள் நடத்தப்படும் இதற்கான சிறப்பு நிதியாக ரூபாய் 2 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

அயல்நாடு மற்றும் வெளி மாநிலங்களில் வாழும் தமிழர்களுக்கு தமிழ் கற்பிக்க தமிழ் பரப்புரை கழகம் உருவாக்கப்படும். இதற்கென தொடர் செலவினம் ஆக ரூபாய் ஒரு கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

பள்ளி மாணவர்கள் தங்களின் தமிழ்மொழிக் இலக்கியத் திறனை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் திறனறித் தேர்வு நடத்தி ஆண்டுதோறும் 1500 பேர் தெரிவு

செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு ஊக்கத்தொகையாக திங்கள்தோறும் ரூபாய் 1500 வழங்கப்படும்.

திருக்குறள் முற்றோதல் செய்து பரிசுத் தொகையை வழங்காமல் நிலுவையில் உள்ள 219 மாணவர்களுக்கு இந்த ஆண்டு குரல் பரிசு வழங்கப்படும். அடுத்த ஆண்டு முதல் ஆண்டுக்கு 70 மாணவர்கள் என்று உச்சவரம்பு நீக்கப்பட்டு பரிசுத் தொகை உயர்த்தப்படும்.

தமிழ் அறிஞர்களான சிலம்பொலி சு.செல்லப்பன்,முனைவர் தொ பரமசிவன்,புலவர் இளங்குமரனார், திரு முருகேச பாகவதர், திரு சங்கர வள்ளிநாயகம் மற்றும் புலவர் செ.ராசு ஆகியோரின் நூல்கள் நாட்டுடைமை ஆக்கப்பட்டு பரிவுத் தொகை வழங்கப்படும்.

திருக்கோயில்களில் தேவாரம் திருவாசகம் திவ்யப் பிரபந்தம் ஆகியவற்றோடு திருக்குறள் வகுப்புகள் நடத்தப்படும்.

தமிழறிஞர்கள் எழுத்தாளர்களின் பிறந்தநாளன்று இலக்கியக் கூட்டங்கள் நடத்திட ரூபாய் 15 லட்சம் நிதி உதவி அளிக்கப்படும்.

புகழ்பெற்ற தலைவர்கள் தமிழறிஞர்களின் ஒலி/ஒளிப் பொழிவுகள் ஆவணம் ஆக்கப்படும். இதற்கென ஆண்டுதோறும் ரூபாய் 25 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படும். சங்க இலக்கியங்கள் சந்தி பிரிக்கப்பட்டு நூல்களாக அச்சிட்டு குறைந்த விலையில் வெளியிட ரூபாய் 10 லட்சம் ஒதுக்கீடு செய்யப்படும்

தமிழில் பெயர் எழுதும்போது முன்னேற்றத்தையும் (Initial) தமிழிலேயே எழுதும் நடைமுறையை அனைவரும் பின்பற்ற ஊக்குவிக்கப்படும்.

வணிக நிறுவனங்களில் வழங்கப்படும் பற்றுச் சீட்டுக்கள் தமிழிலும் அச்சிட்டு வழங்கப்படும். குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்களுக்கு தமிழில் பெயர் சூட்ட ஊக்குவிக்கப்படவும் வழிமுறைகள் உருவாக்கப்படும்.

அனைத்து பல்கலைக்கழகங்களிலும் பெறப்பட்ட முனைவர் பட்ட ஆய்வு சுருக்கம் மற்றும் ஆய்வு தொகுப்புகள் தமிழில் தொகுத்து தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் வாயிலாக இணையத்தில் வெளியிடப்படும்.

பழந்தமிழ் இலக்கியங்கள் நவீன இலக்கியங்கள் ஒலி நூல்களாக வெளியிட ரூபாய் 10 லட்சம் வழங்கப்படும். செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்டத்தின் கீழ் புதிய கலைச் சொற்கள் உருவாக்கம், இணைய வழியில் அறிமுகம் என ஆண்டுதோறும் ரூபாய் 5 லட்சம் வழங்கப்படும்.

தொல்காப்பியம் முதல் முத்தொள்ளாயிரம் வரையிலான 41 செவ்வியல் நூல்கள் எளிதாகவும் ஒரே இடத்தில் தொகுப்பாகவும் கிடைக்கப் பெற வழிவகை செய்யப்படும் இதற்கு ஆண்டுதோறும் ரூபாய் 10 லட்சம் வழங்கப்படும்

நாட்டிற்காக பாடுபட்ட தலைவர்களின் பிறந்த நாளன்று மாவட்ட அளவில் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிகள் நடத்தி பரிசு, பாராட்டு சான்றிதழ் வழங்கப்படும். இதற்கு ஆண்டுதோறும் 81 லட்சத்து 60 ஆயிரம் நிதியுதவி வழங்கப்படும்.

தமிழைப் பிற மொழியினருக்கு கற்பிக்கும் வகையில் திராவிட மொழிகள் உட்பட பிற மொழிகளில் பாடநூல்களும் பன்மொழி அகராதி தமிழ் கற்பிக்கும் பொருள் குறுஞ்செயலிகள் உருவாக்கப்படும்.

சுருக்கு பையின் சொற்கள் தமிழ் மின்நூல்கள் அரசு தலங்களில் உள்கட்டமைப்புகள் போன்றவை படைப்பாக்கப் பொது உரிமத்தின் வெளியிடப்படும். ஆட்சி சொல் அகராதி திருத்திய பதிப்பு மற்றும் அரசு துறைகளில் புதிய கலைச்சொற்கள் தொகுத்து வெளியிடப்படும்.

# POLITY – அரசியலமைப்பு

## 1. Centenary Year of State Legislature
**தமிழ்நாடு சட்டப்பேரவை நூற்றாண்டு விழா**

1921-ல் அமைந்த முதல் சட்டமன்றத்தைக் கணக்கில்கொண்டுதான் தற்போது நூற்றாண்டு விழா கொண்டாடப்படுகிறது.

**தமிழக சட்டமன்ற வரலாறு:-**

❖ ஆங்கிலயேர்கள் ஆட்சிக்காலம் முதலே தனித்து நின்று, முக்கியத்துவம் வாய்ந்த இடமாகத் திகழ்ந்தது நம் தமிழகம். தற்போதுள்ள தமிழக சட்டப்பேரவை, முன்பிருந்த சென்னை மாகாணத்தின் நீட்சியாகவே கருதப்படுகிறது.

❖ 1919 சீர்திருத்தங்களால்தான், `சட்டம் இயற்றும் சபை' என்ற அடிப்படையில், இந்தியர்களுக்கு ஆட்சி நிர்வாகத்தில் பகுதிவாரியாக பொறுப்பாட்சிகள் வழங்கப்பட்டன. அதன் அடிப்படையில்தான் 1921-ல் சென்னை உள்ளிட்ட ஒன்பது மாகாணங்களில் புதிய சட்டமன்றங்கள் தனித் தனியாக உருவாக்கப்பட்டன.

❖ அதுவரை, மக்கள் பிரதிநிதிகள் நேரடித் தேர்தல்களின் வாயிலாகத் தேர்ந்தெடுக்கப்படாமல் வணிகர்கள், பட்டதாரிகள், உள்ளாட்சி அமைப்புகளின் வழியாக மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட்டுவந்தனர். இந்த ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து, அனைவருக்கும் வாய்ப்பளிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், 1909-ம் ஆண்டு இந்திய அரசியலில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டது. அதன் மூலம் பிராமணரல்லாத உயர்சாதிகளுக்கும், மதச் சிறுபான்மையினருக்கும் அரசியலில் சம உரிமை என்பதைத் தாண்டி அதிக வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

❖ அதைத் தொடர்ந்து, 1919-ல் மாண்ட்ஃபோர்டு சீர்திருத்தங்கள் அதை விரிவுபடுத்தி, ஆட்சிப்பொறுப்பை மொத்தமாக அவர்களின் கையில் வழங்க வழிவகுத்தது. சென்னை உள்ளிட்ட 9 மாகாணங்களில் ஆட்சி நிர்வாகத்தின் தலைவராக ஆளுநரை ஏற்றுக்கொண்டு, சட்டமியற்றும் நடவடிக்கைகளை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடம் பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்கியது.

❖ அதுவரை, ஒன்றிய அரசாங்கத்தின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்துவந்த மாகாண அரசாங்கங்கள் மாண்ட்ஃபோர்டு சீர்திருத்தங்கள் மூலம் சுயமாகப் பொறுப்பாட்சி நடத்த அனுமதிக்கப்பட்டன.

❖ 1909-ம் ஆண்டு முதல், இந்தியக் கவுன்சில் சட்டம் 1892-ன்படி மெட்ராஸ் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சிலின் மூலம் உறுப்பினர்கள் மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து, இந்திய அரசு சட்டம் 1919 இயற்றப்பட்ட பின்னர் சென்னை மாகாணத்தில், 1921-ம் ஆண்டு முதன்முறையாகத் தேர்தல் நடத்தப்பட்டு சட்டப்பேரவை அமைக்கப்பட்டது. தற்போதைய தமிழக சட்டமன்றத்தின் முதல் கூட்டம் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் 1921-ம் ஆண்டு, ஜனவரி 9-ம் தேதி நடைபெற்றது.

❖ 1920 முதல் 1937 வரை சென்னை மாகாணத்தில் இரட்டை ஆட்சி முறை நடைமுறையிலிருந்தது. எனவே, அது ஓர் அவை கொண்ட சட்டமன்றமாகச்

செயல்பட்டது. ஆனால், மாகாண அரசாங்கத்தின் முழுமையான அதிகாரங்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்படவில்லை. ஒரு பகுதி அமைச்சரவையிடமும், மற்றொரு பகுதி வழக்கம்போல ஆளுநர் தலைமையிலான நிர்வாக அவையிடமே இருந்தன. அமைச்சரவையின் பொறுப்பிலிருந்த துறைகள் `மாற்றப்பட்ட துறைகள்' எனவும். ஆளுநரின் பொறுப்பிலிருந்த துறைகள் `ஒதுக்கப்பட்ட துறைகள்' எனவும் வகைப்படுத்தப்பட்டன.

- நிதி, நீதி, நீர்ப்பாசனம், தொழிற்சாலைகள் உள்ளிட்ட முக்கியத் துறைகளும் , கல்வி, நூலகம், உள்ளாட்சி, மக்கள் நல்வாழ்வு, சுகாதாரம் உள்ளிட்ட துறைகளும் இரட்டை ஆட்சிக்கு ஏற்றாற்போல் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. இந்தநிலையில், 1921-ம் ஆண்டு, சென்னை உள்ளிட்ட ஒன்பது மாகாணங்களின் சட்டமன்றங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் ஆட்சி நிர்வாகத்தில் சிறப்பாகச் செயல்பட்டு தொடர்ச்சியான அரசியல் சீர்திருத்தங்களுக்கு வழிவகுத்தனர். அப்போது ஆட்சிப் பொறுப்பிலிருந்த நீதிக் கட்சி, கல்வி மற்றும் சமய விவகாரங்களில் தனது கொள்கைகளை வலுவாக வகுத்து கட்டமைத்தது.

- தற்போதைய தமிழக சட்டமன்றத்தின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாக இருக்கிறது. ஆனால், 1921-ல் சென்னை மாகாணத்தின் சட்டமன்ற பதவிக்காலம் மூன்று ஆண்டுகள் மட்டுமே. 1919 சீர்திருத்தத்தின்படி சென்னையில் அமைக்கப்பட்ட சட்டமன்றத்தில் 98 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களும், 25 நியமன உறுப்பினர்களும் இருந்தனர். சென்னை மாகாண நிர்வாகத்தின் அதிகாரப் பொறுப்புகளை தன்வசம் வைத்திருந்த ஆளுநர், சட்டமன்றத்தின் பதவிக்காலம் முடிவதற்கு முன்பாகவே கலைக்கவும், பதவிக்காலத்தை நீட்டிக்கவும் எல்லா அதிகாரங்களையும் பெற்றிருந்தார்.

- இந்திய ஒன்றியத்தின் ஒன்பது மாகாணங்களில் 1921-ல் சுமார் 16 ஆண்டுகள் ஆளுநர் மற்றும் அமைச்சர்கள் என இரட்டை ஆட்சிமுறை நடைமுறையிலிருந்தது. பின்னர், 1919 சீர்திருத்தத்தைப் போன்று 1935-ல் மேற்கொள்ளப்பட்ட இந்திய அரசியல் சீர்திருத்தங்களின் விளைவாக, சென்னை உள்ளிட்ட ஒன்பது மாகாணங்களில் இரட்டை ஆட்சி முறை ஒழிக்கப்பட்டு, மாகாண சுயாட்சி முறை அறிவிக்கப்பட்டது.

- அதைத் தொடர்ந்து, 1937-ல் அது நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி, இந்திய அரசு சட்டம் 1935-ன் படி, 216 உறுப்பினர்களைக்கொண்ட சட்டமன்றமும், 56 உறுப்பினர்கள் கொண்ட சட்ட மேலவையும் உருவாக்கப்பட்டது. இந்தச் சட்டத்தின்படி நடத்தப்பட்ட தேர்தலுக்குப் பிறகு, 1937-ம் ஆண்டு, ஜூலை மாதம் முதல் சட்டப்பேரவை பதவியேற்றது. 1921-ல் சட்டமன்றமும், 1937-ல் சட்டப்பேரவையும் உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

- அதையடுத்து, உலகப்போரில் இந்தியர்கள் ஈடுபடுத்தப்பட்டதைக் கண்டித்து, 1939-ல் சென்னை மாகாண அமைச்சரவை பதவி விலகியது. அதைத் தொடர்ந்து, 1946-ம் ஆண்டு, மார்ச் மாதம் இரண்டாம் சட்டமன்றத் தேர்தல் நடைபெற்றது.

- 1947-ல் ஆங்கிலேயர்கள் இந்தியாவை முற்றிலுமாக விடுவித்த பின்னர், இந்திய அரசு சட்டம் 1947 உருவாக்கப்பட்டது. அதையடுத்து, 1952 இந்தியப் பொதுத்தேர்தலைத் தொடர்ந்து, தற்போதைய தமிழகத்தின் முதல் சட்டப்பேரவை

1952, மார்ச் மாதம் அமைக்கப்பட்டது. அதுவரை மூன்று ஆண்டுகளாக இருந்த பதவிக்காலம் 1952-ல் ஐந்து ஆண்டுகளாக மாற்றப்பட்டது. 1952-1957 இடையிலான காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில் காமராஜர் மற்றும் ராஜாஜி ஆகியோர் முதல்வர்களாக இருந்தனர்.

- ❖ அதையடுத்து, 1957-ம் ஆண்டு, 2-ம் சட்டப்பேரவை அமைக்கப்பட்டது. 1957-1962 ஆட்சிக் காலத்தில் சென்னை - ஆந்திரா எல்லை பிரச்னை காரணமாக ஆந்திர சட்டப்பேரவையிலிருந்து ஒரு உறுப்பினர் சென்னைக்கு மாற்றப்பட்டார். அதன் காரணமாக, 205-ஆக இருந்த சென்னை சட்டப்பேரவையின் உறுப்பினர் எண்ணிக்கை 206-ஆக உயர்ந்தது. 1957-1962 வரையிலான காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் காமராஜ் மற்றும் பக்தவத்சலம் ஆகியோர் முதல்வர்களாக இருந்தனர். 1965-ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட 'தொகுதி சீரமைப்பு' நடவடிக்கைகளின் விளைவாகச் சென்னை சட்டப்பேரவையின் உறுப்பினர் எண்ணிக்கை 234-ஆக உயர்த்தப்பட்டது.

- ❖ அதுவரை காங்கிரஸ் கட்சி மட்டுமே ஆதிக்கம் செலுத்திவந்த நிலையில், 1967 தேர்தல் திராவிட அரசியலின் தொடக்கமாக மாறியது. திமுக., காங்கிரஸை ஆட்சிப் பொறுப்பிலிருந்து அகற்றிவிட்டு அரியணையில் ஏறியது. அந்தத் தேர்தலின் விளைவாக விளைவாக அப்போதைய முதல்வர் அண்ணாதுரையின் முன்னெடுப்பில் சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்பட்டு 1969-ம் ஆண்டு ஜனவரி 14-ம் நாள் `சென்னை மாநிலம்', `தமிழ்நாடு' மாநிலம் என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டது.

- ❖ அதைத் தொடர்ந்து, 1971-ம் ஆண்டு -அமைக்கப்பட்ட 5-வது சட்டப்பேரவை 1976-ம் ஆண்டே கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி அமலுக்கு வந்தது. தமிழ்நாட்டில் சட்டப்பேரவை கலைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டது அதுவே முதன்முறை.

- ❖ 1977-ம் ஆண்டு 6-வது தமிழக சட்டப்பேரவை அமைக்கப்பட்டது. 1975-ம் ஆண்டின் 'தொகுதி சீரமைப்பு' நடவடிக்கைகளின் காரணமாக மாற்றியமைக்கப்பட்ட 234 தொகுதிகளில் முழுமையாகத் தேர்தல் நடத்தப்பட்டது.

- ❖ அதைத் தொடர்ந்து, 1980-ம் ஆண்டு தமிழகத்தின் 7-வது சட்டப்பேரவையும் ,1985-ம் ஆண்டு 8-வது சட்டப்பேரவையும் அமைக்கப்பட்டன.

- ❖ 8-வது சட்டப்பேரவை பதவிக்காலத்தில் தமிழக சட்ட மேலவையை நீக்குவதற்கான தீர்மானம் 1986-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டு நாடாளுமன்றத்தின் இரு அவைகளின் ஒப்புதல் பெறப்பட்டது. அதைத் தொடர்ந்து அதே ஆண்டு, நவம்பர் 1-ம் தேதி தமிழக 'சட்ட மேலவை' கலைக்கப்பட்டது. அதன் மூலம், 1937-ம் ஆண்டு இரு அவைகளாக உருவாக்கப்பட்ட தமிழக சட்டமன்றம் 1986-ம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் ஒரே அவையைக் கொண்ட சட்டமன்றமாக உருவெடுத்தது. அதற்குப் பிறகு தொடர்ச்சியாக சட்டமேலவையை நீக்கவும், சேர்க்கவும் அரசியல் கட்சிகளால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன.

இப்படியாக ஆட்சியும் காட்சியும் தமிழகத்தில் மாறிக்கொண்டே இருக்க தற்போது ஆட்சியில் இருக்கும் திமுக அரசு 1921-ம் ஆண்டைக் கணக்கில்கொண்டு இன்று நூற்றாண்டு விழாவை விமரிசையாகக் கொண்டாடவிருக்கிறது.

இந்த இடைப்பட்ட காலத்தில், சமூகநீதியை நிலைநாட்டும் இட ஒதுக்கீடு, தேவதாசி முறை ஒழிப்புச்சட்டம், பெண்களுக்கு வாக்குரிமை, மாநிலப் பெயர் மாற்றம், இந்து சமய அறநிலையத்துறை உருவாக்கம், கோயில்களில் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் உள்ளிட்ட புரட்சிகர சட்டங்கள் தமிழக சட்டமன்றத்தின் மூலம் கொண்டுவரப்பட்டுள்ளன.

## 2. Centenary Year of Communal G.O

**வகுப்புவாத அரசாணை நூற்றாண்டு விழா**

கம்யூனல் ஜிஓ ஒரு சமநிலையாளராக நிரூபிக்கப்பட்டது, பிராமணரல்லாதவர்கள் நிர்வாகத்திலும் அரசியலிலும் அவர்களுக்குரிய இடத்தை பாதுகாத்தது

நீதிக்கட்சி அரசாங்கத்தால் இந்த நாளில் 100 ஆண்டுகளுக்கு முன்பு வெளியிடப்பட்ட 'வகுப்புவாத GO' உடன் தொடங்கிய தமிழ்நாட்டில் சமூக நீதி இயக்கம் நீண்ட தூரம் முன்னேறியுள்ளது. அரசாங்க உத்தரவும், பல தசாப்தங்களாக அது உருவாக்கிய அடுத்தடுத்த நடவடிக்கைகளும், ஒரு சமநிலையை நிரூபித்து, பிராமணரல்லாதவர்களுக்கு அதிகாரம் அளித்து, நிர்வாகம் மற்றும் அரசியலில் அவர்களுக்கு வேண்டிய இடத்தை பாதுகாத்தது.
செப்டம்பர் 16, 1921 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவில், "பிராமணரல்லாதோர் வகிக்கும் பதவிகளின் விகிதத்தை அதிகரிக்க" கோரியது, இது மெட்ராஸ் செயலகம் உட்பட மாகாண சேவைகளில் இந்திய கிறிஸ்தவர்கள், முஸ்லீம்கள் மற்றும் ஆதி திராவிடர்களை உள்ளடக்கியது. உத்தரவு பிறப்பிக்கும் முன், சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

**பிராமண ஆதிக்கம்**

.

1912 ஆம் ஆண்டு சென்னை அரசாங்கத்தால் தொகுக்கப்பட்ட தரவுகள், இந்தியர்கள் வேலை செய்யும் உயர்நிலை அரசாங்க சேவையில், பிராமணர்கள் 55% துணை கலெக்டர்களாகவும், 83.3% துணை நீதிபதிகளாகவும், 72.6% மாவட்ட முன்சிஃப்களாகவும் இருந்தனர்.

1917 ல் வருவாய் மற்றும் நீதித்துறையில் பணியாற்றியவர்களிடையே சாதி அமைப்பு பகுப்பாய்வு, தாசில்தார்கள், துணை தாசில்தார்கள், ஆங்கில தலைமை எழுத்தர்கள், மாவட்ட மற்றும் துணை நீதிமன்றங்களின் ஷரிஸ்தாதர்கள், அதே முடிவை வலுப்படுத்துகிறது.

"உயர் கல்வியில், 1870 மற்றும் 1918 க்கு இடையில், பதிவுசெய்யப்பட்ட மாணவர்களிடையே பிராமணர்களின் விகிதம் மற்றும் மெட்ராஸ் பல்கலைக்கழகத்தால் இளங்கலை பட்டப்படிப்பு வழங்கப்பட்டவர்கள் 67-71%வரம்பில் இருந்தனர்".

இளங்கலை சட்ட பட்டத்திற்கான வேட்பாளர்களின் விகிதத்தைப் பொறுத்தவரை, பிராமணர்கள் 1919 இல் 73.57% ஆக இருந்தனர்; மற்றும் உரிமம் பெற்ற கற்பித்தல் பட்டத்திற்கான எண்ணிக்கை 73.03%ஆகும். மருத்துவத் துறையில் மட்டுமே விகிதம் குறைவாக இருந்தது.

கம்யூனல் GO ஒரு அடையாள ஆவணமாக நிரூபிக்கப்பட்டது, ஏனெனில் நியமனத்தின் உண்மையான அதிகாரம் பிரிட்டிஷ் கைகளில் இருந்தது, மேலும் அவர்களின் உயர் சாதி, பிராமண சகாக்களுடன் கூட்டு சேர்ந்து, அவர்கள் நியமனங்களை வெற்றிகரமாக ரத்து செய்தனர்.

## 3. Tamil Nadu Non-Resident Tamils' Welfare Board (Polity)
**தமிழ்நாடு புலம்பெயர் நலவாரியம்**

புலம் பெயர் தமிழர்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றும் விதமாக இன்று புலம்பெயர் தமிழர் நல வாரியம்' என்பதாகவெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காக்கும் வாரியம் தோற்றுவிக்கப்படும் என, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

உலகின் பெரும்பான்மை நாடுகளில் வாழும் இனமாக நம்முடைய தமிழினம்தான் இருக்கிறது. 30-க்கும் மேற்பட்ட நாடுகளில் அதிக எண்ணிக்கையிலும், 60-க்கும் மேற்பட்ட நாடுகளில் குறைந்த எண்ணிக்கையிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள்.

இப்படிப் பல்வேறு நாடுகளுக்குச் சென்று வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும், உதவிகளைச் செய்யவும் தமிழக அரசு முன்வந்துள்ளது.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வெளிநாடுவாழ் தமிழர் நலச்சட்டம் 2011ஆம் ஆண்டு திமுக அரசால் இயற்றப்பட்டுள்ளது.

**இதன் சிறப்பு அம்சங்கள்;**

- புலம்பெயர் தமிழர் குறித்த தரவுத் தளம் (Database) ஏற்படுத்தப்பட்டு, இவ்வாரியத்தில் பதிவு செய்பவர்களுக்கு விபத்து, ஆயுள் காப்பீடு, மருத்துவக் காப்பீடு திட்டங்கள் அடையாள அட்டையுடன் வழங்கப்படும்.
- வெளிநாட்டுக்குச் செல்லும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை வழங்கப்படும்.
- கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்காகத் தமிழர்கள் புலம்பெயரும்போது, பயணப் புத்தாக்கப் பயிற்சி சென்னை , ராமநாதபுரம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், பெரம்பலூர், சிவகங்கை,விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் நடத்தப்படும்.
- வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்துள்ள தமிழர்களுக்கு ஆலோசனை பெற வசதியாகக் கட்டணமில்லா தொலைபேசி வசதி மற்றும் வலைதளம், கைப்பேசி செயலி (Mobile application) அமைத்துத் தரப்படும்.
- புலம்பெயர் தமிழர்களுக்கு எனத் தனியாகச் சட்ட உதவி மையம் அமைக்கப்படும்.
- கோவிட்-19 பெருந்தொற்று சூழலால் சுமார் ஏழு லட்சம் தமிழர்கள் வேலையிழந்து தாயகம் திரும்பியுள்ளனர். இவர்களுக்கு உதவியாக குறு தொழில்கள் செய்திட, இரண்டரை லட்சம் ரூபாய் மானியத்துடன் கூடிய கடன் தரப்படும். இதற்கென ஆறு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.
- புலம்பெயர் தமிழர்கள் தாய்நாட்டில் பாதுகாப்பான முதலீடு செய்ய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி, அரசு மற்றும் தொழில் நிறுவனங்களில் பாதுகாப்பான முதலீடு செய்யப்படும்.
- புலம்பெயர்ந்த தமிழர்கள், தமது சொந்த ஊரில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்திடவும், கல்வி, மருத்துவம் போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்திடவும் 'எனது கிராமம்' திட்டம் தொடங்கப்படும். இதற்கான அனைத்து ஒருங்கிணைப்பும் அரசின் தரப்பில் எளிய முறையில் செய்து தரப்படும்.
- வெளிநாடுகளில் நிரந்தரமாகக் குடியுரிமை பெற்றுள்ள தமிழர்களின் வாரிசுகளுக்கு தமிழ் மொழியைக் கற்றிட ஏதுவாக தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலமாக தமிழ் கற்றுக் கொடுக்கப்படும். அதுமட்டுமின்றி, அங்குள்ள கல்வி

நிறுவனங்களில் தமிழ் பயிற்றுவிக்க ஊக்கத்தொகை மற்றும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

- புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள் அந்தந்த நாடுகளில் உருவாக்கியுள்ள நலச்சங்கங்கள் ஒருங்கிணைக்கப்படும். இச்சங்கங்களின் மூலமாக நம்முடைய கலை, இலக்கியம் மற்றும் பண்பாடு பரிமாற்றங்கள் நடைபெறும். இதற்காக 4 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

- பல்வேறு நாடுகளில் உள்ள தமிழர்களை ஒருங்கிணைக்கும் விதமாக அந்தந்த நாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12-ம் நாள் 'புலம்பெயர்ந்த உலகத் தமிழர் நாளாகக்' கொண்டாடப்படும்.

- புலம்பெயர் தமிழர் நல வாரியம் மற்றும் புலம்பெயர் தமிழர் நல நிதிக்காக 6 கோடியே 40 லட்சம், நலத்திட்டங்களுக்காக 8 கோடியே 10 லட்சம் மற்றும் தமிழ்க் கல்வி, கலை, பண்பாடு மற்றும் கருத்துப் பரிமாற்றத்துக்காக 5 கோடியே 50 லட்சம் என, மொத்தம் 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

# GOVERNANCE - ஆளுகை

## 1. Achievements of First 100 Days of DMK Government
**திமுக அரசின் முதல் 100 நாள் சாதனைகள்**

### 100 நாட்கள் சாதனைகள்

- கொரோனா என்ற பெருந்தொற்றில் இருந்து மக்களைக் காத்தல்

- எந்த அலையையும் எதிர்கொள்ளும் வல்லமை கொண்டதாக மக்கள் நல்வாழ்வுத் துறையை மாற்றுதல்

- மகளிருக்கு அரசு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாப் பயணம்

- பால் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைப்பு

- பெட்ரோல் விலை லிட்டருக்கு 3 ரூபாய் குறைப்பு

- கொரோனா நிவாரண நிதியாக 2 கோடியே 10 இலட்சம் குடும்பங்களுக்கு 4 ஆயிரம் ரூபாய்

- இந்தியாவின் வேறு எந்த மாநில அரசும் வழங்காத 9 ஆயிரம் கோடி மதிப்பிலான 14 மளிகைப் பொருட்கள்

- குடும்பத்தலைவிகளுக்கு 1000 ரூபாய் உரிமைத்தொகை வழங்குவதற்கான பயனாளிகள் தேர்வு

- நமக்கு நாமே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டங்களுக்குப் புத்துயிர்ப்பு

- கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்

## 2. Welfare Schemes of Current DMK Government
## தற்போதைய திமுக அரசின் நலத்திட்டங்கள்

அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி-2 என்ற புதிய திட்டத்தை மீண்டும் அறிமுகப்படுத்தி குக்கிராமங்களிலும் வசிக்கும் மக்களின் எதிர்பார்ப்பு மற்றும் தேவைகள் நிறைவேற்றப்படும்.

இதன் மூலம் 2021-26-ம் ஆண்டு வரை, கிராமங்களை முழுமையான வளர்ச்சி அடைந்த கிராமங்களாக மாற்றுவதற்கு தேவையான அடிப்படை வசதிகள் படிப்படியாக ஏற்படுத்தப்படும். இந்த ஆண்டில் ரூ.1,200 கோடி மதிப்பீட்டில் 2 ஆயிரத்து 505 கிராம ஊராட்சிகளில் இந்த திட்டம் செயல்படுத்தப்படும்.

**சமூக மேம்பாட்டு திட்டம்**

தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் நக்சலைட்களின் தீவிரவாத நடவடிக்கைகளால் ஏற்பட்ட பிரச்சினைகளை சரிசெய்ய அங்கு சமூக பொருளாதார மேம்பாட்டு திட்டம் 2003-04-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த ஆண்டில் இத்திட்டம் ரூ.7.50 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.

**மகளிர் திட்டங்கள்**

ஊட்டச்சத்து காய்கறி தோட்டம் திட்டம், இந்த ஆண்டில் கூடுதலாக 2 லட்சம் மகளிர் சுயஉதவி குழு உறுப்பினர்களுக்கு விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மகளிர் சுயஉதவி குழுக்களின் உற்பத்தி பொருட்கள் அனைவருக்கும் எளிதில் கிடைப்பதற்காக ஊரகம் மற்றும் நகரப்பகுதிகளில் உள்ள ஊராட்சி, நகராட்சி அலுவலகங்கள் அமைந்துள்ள இடங்கள், பஸ் நிலையம், கோவில்கள், சுற்றுலா தலங்கள் ஆகிய இடங்களில் 500 மதி விற்பனை அங்காடிகளை உருவாக்க அரசு திட்டமிட்டுள்ளது.

ஆளுமை, தொழில் மேம்பாடு ஆகியவற்றை உள்ளடக்கிய கற்றல் பாடங்களை உருவாக்கி, இணையவழி கற்றலுக்காக எதிர்காலத்தில் சுயஉதவி குழு மகளிரின் வளர்ச்சியை இலக்காக கொண்டு சிறந்த செய்திகளுடன் சமுதாய காணொலி விரைவில் செயல்படுத்தப்படும்.

**ஊரக புத்தாக்கம்**

தமிழகத்தில் ஊரக புத்தாக்க திட்டம், இந்த ஆண்டு ரூ.212.69 கோடி செலவில் செயல்படுத்தப்படும். பள்ளிகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் ரூ.150 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2021-22-ம் ஆண்டு முதல் அறிமுகப்படுத்தப்படும்.

ஊராட்சி ஒன்றிய ஆரம்ப, நடுநிலைப்பள்ளிகளில் உள்ள உள்கட்டமைப்பு வசதிகளைப் பழுதுபார்த்தல், புனரமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் நவீன வசதிகளை பள்ளிகளுக்கு வழங்குவது இந்த திட்டத்தின் நோக்கமாகும்.

**மக்களை தேடி மருத்துவம்**

மிழகம் முழுக்க சுமார் 20 லட்சம் பேர் அரசு மருத்துவமனைகளில் நீரிழிவு, ரத்த அழுத்தத்துக்கான மாத்திரைகளை வாங்கி உட்கொண்டு வருகின்றனர். ஊரடங்கு காலத்தில் இவர்களால் அரசு மருத்துவமனைக்கு சென்று மருந்துகளை வாங்க முடிவதில்லை. இதனால் அவர்களுக்கு நீரிழிவும், ரத்த அழுத்தமும் கட்டுப்பாட்டில் இல்லாமல் இருப்பதால் கொரோனா தொற்றிலிருந்து மீள முடியாமல் தவிக்கின்றனர். பெரும்பாலான மரணங்களும் இதனாலேயே நிகழ்கின்றன.

இவர்களுக்கு தடையில்லா மருந்துகளை வழங்குவதற்காகவே, மக்களை தேடி மருத்துவம் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக வீடு தேடி வரும் வாகனத்தில் செவிலியர்கள், பிஸியோதெரபி சிகிச்சையாளர்கள் இருப்பார்கள். 45 வயது மேற்பட்ட நோயாளிகளுக்கு வீடு வீடாக சென்று மருந்துகளை வழங்கிட கிராம சுகாதார செவிலியர்கள், தமிழ்நாடு பெண்கள் மேம்பாட்டு கழகத்தின் தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள்.

## 3. The Dravidian Model.

**திராவிட மாதிரியில் தமிழ்நாடு**

அனைத்து சமூகங்களுக்கும் உள்ளடக்கிய வளர்ச்சி! அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி! உள்ளடக்கிய வளர்ச்சி! இதுதான் திராவிட மாதிரி இருக்கிறது.

**'முதலீட்டாளர்களின் முதல் முகவரி'** –

அந்த மாநாட்டில்தான் தமிழக அரசு புதிய நிறுவனங்களைத் தொடங்க 35 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. முதல் முதலீடு 17,141 கோடியை ஈர்த்தது. இதன் மூலம் 55 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

அடுத்து சில வாரங்களுக்கு முன்பு சென்னையில் ஒரு ஏற்றுமதி மாநாட்டை நடத்தினோம். **"ஏற்றுமதி ஏற்றம் – தமிழ்நாடு முன்னணியில் உள்ளது"** அதுதான் மாநாட்டின் தலைப்பு. அன்று, 2,180 கோடி மதிப்பிலான 25 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன் மூலம் 42 ஆயிரத்து 145 பேர் வேலைவாய்ப்புக்காக உள்ளனர். தொடங்குவதற்கு பல்வேறு நிறுவனங்கள் உள்ளன.

1.93 லட்சம் கோடி ஏற்றுமதியுடன், தமிழ்நாடு இந்தியாவின் மூன்றாவது பெரிய ஏற்றுமதி மாநிலமாகும். இதை முன்னணியில் கொண்டு வர உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். இதற்காக நாங்கள் தமிழ்நாடு ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கையை வெளியிட்டுள்ளோம்.

மாநில ஏற்றுமதி மேம்பாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. நாங்கள் சிறிய மற்றும் நடுத்தர ஏற்றுமதி நிறுவன வழிகாட்டியையும் வெளியிட்டுள்ளோம். தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கும் அதிக தேவை உள்ளது. ஏற்றுமதிக்கும் அதிக தேவை உள்ளது. அதற்கான அனைத்து திட்டங்களையும் தமிழக அரசு செய்து வருகிறது.

தமிழகத்தில் உள்ள இயற்கை சூழல் அனைத்து தொழில்களுக்கும் ஏற்றது. மனித வளமும் சிறந்தது.

தமிழ்நாட்டில் ஆட்சி மற்றும் அரசியல் சூழல் மாறி வருகிறது என்பதை இந்தியா மட்டுமின்றி உலக சமூகத்திற்கும் சொல்ல வேண்டிய கடமை பத்திரிக்கைகளுக்கு உள்ளது.

## 4. "Data Base, Data Centric" Governance Model.

## 5. State-level Disha Committee.
### மாநில அளவிலான திஷா குழு

மத்திய அரசின் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்க மாநில அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு (DISHA Committee) தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

மத்திய அரசின் திட்டங்கள் மாவட்ட அளவில் நடைமுறைப்படுத்துவதை கண்காணிக்க, மத்திய அரசின் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, தமிழக முதல்வரைத் தலைவராகக் கொண்டு மாநில அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு (DISHA Committee) அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் துணைத் தலைவராகவும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் உறுப்பினர் செயலாளராகவும், உறுப்பினர்களாக மத்திய அரசால் பரிந்துரைக்கப்பட்ட மக்களவை உறுப்பினர்களான டி.ஆர்.பாலு, எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், ஆ.ராசா, எம்.செல்வராஜ், பி.ஆர். நடராஜன், சு.திருநாவுக்கரசர், தொல்.திருமாவளவன், பி.ரவீந்திரநாத்குமார், கே.நவாஸ்கனி ஆகியோரும், மாநிலங்களவை உறுப்பினர்களான திருச்சி சிவா, ஆர்.எஸ்.பாரதி, எ.நவநீதகிருஷ்ணன் மற்றும் எஸ்.ஆர்.பாலசுப்ரமணியன் ஆகியோரும்; மாநில அரசால் பரிந்துரைக்கப்பட்ட சட்டப்பேரவை உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், டாக்டர் நா.எழிலன், டி.கே.ஜி.நீலமேகம், மு.பூமிநாதன், ஜெ.எம்.எச்.அசன் மௌலானா மற்றும் கே.ஏ.செங்கோட்டையன் ஆகியோர் உள்ளனர்.

மேலும், இக்குழுவில் பல்வேறு அரசுத் துறை செயலாளர்கள், துறைத் தலைவர்கள், அரசு சாரா தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள், மாநில அளவிலான வங்கியாளர் குழுவின் மேலாண்மை இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

மத்திய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, மாவட்ட அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு குழுக்களில் எடுக்கப்பட்ட முடிவுகளைப் பொறுத்து திட்டங்கள் செயல்படுத்தப்படும் நிலையை மதிப்பாய்வு செய்தல், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாநில அரசால் ஈடுபடுத்தப்பட்டுள்ள மனித வளங்களின் செயல்திறனை வரிசைப்படுத்தி மதிப்பாய்வு செய்தல், வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள தடைகளை நிவர்த்தி செய்து, அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் வடிவமைப்புகளை மேம்படுத்த அல்லது நடுநிலைப்படுத்த உரிய திருத்தங்களைச் செய்ய பரிந்துரைகளை வழங்குதல் ஆகியன இக்குழுவின் பணியில் அடங்கும்.

மேலும், வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக நிதி நிலைமையை மதிப்பாய்வு செய்தல், பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நிலப் பிரச்சினைகள் தொடர்பாக மாநில அலுவலர்களால் தேவையான தெளிவை நீட்டிப்பதில் காலக்கெடுவை உறுதி செய்யும் நோக்கில் பல்வேறு திட்டங்களைச் சரியான நேரத்தில் செயல்படுத்தவுள்ள தடைகளை மீளாய்வு செய்தல், திட்டங்களைச் செயல்படுத்துவதில் பெறப்பட்ட புகார்கள் / முறைகேடுகள், பயனாளிகளின் தவறான தேர்வு, முறைகேடான நிதி / திசைதிருப்புதல் போன்ற புகார்களைப் பின்தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப் பரிந்துரை செய்தல் ஆகியவற்றையும் இக்குழு மேற்கொள்ளும்.

பல்வேறு திட்டங்களின் கீழ் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளின் ஆதார் எண்ணோடு இணைக்கப்பட்ட வங்கி கணக்குகளுக்கு நிதி உதவி வழங்குவது குறித்து உரிய வழிகாட்டுதல்களை வழங்குதல், மத்திய அரசின் துறைத் திட்டங்கள், சம்பந்தப்பட்ட மத்திய நிறுவனங்கள் முறையாகச் செயல்படுத்துவதில் உள்ள சிக்கல்களை அடையாளம் காணுதல் மற்றும் மாநில அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின்கீழ் கண்காணிக்கப்படும் திட்டங்கள் தொடர்பாக நிகழ்வுகள் மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் பார்வைக்குக் கொண்டு செல்லுதல் போன்ற பணிகளை இந்த குழு மேற்கொள்ளும்".

## 6. AK Rajan Committee Recommendations– NEET.
## AK ராஜன் குழு பரிந்துரைகள் - NEET

'நீட்' தேர்வின் மூலம் மாணவர் சேர்க்கையை நடத்தினால் தமிழகத்தில் என்னென்ன பாதிப்புகள் ஏற்படும்? என்பதை ஆய்வு செய்து தமிழக அரசிற்கு பரிந்துரைப்பதற்காக சென்னை ஐகோர்ட்டின் ஓய்வு பெற்ற நீதிபதி ஏ.கே.ராஜன் தலைமையில் உயர்மட்ட குழுவை தமிழக அரசு நியமித்தது.

**நீட் ஆய்வறிக்கையின் முக்கிய அம்சங்கள்**

- ❖ நீட் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் கற்றல் என்ற நிலை மாறி, பயிற்சி எடுத்தால் மட்டுமே வெற்றிபெற முடியும் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இது திறன் குறைந்தவர்களும் உள்ளே வருவதற்கான வழியைத் திறந்துவிட்டிருக்கிறது.
- ❖ சி.பி.எஸ்.இ பாடத்திட்டத்துக்கு ஆதரவாக நீட் இருக்கிறது.
- ❖ தமிழகத்தில் அரசு மருத்துவக் கல்லூரிகளில் பயிலும் சி.பி.எஸ்.இ மாணவர்களின் எண்ணிக்கை 2015-ல் 0% இருந்தநிலையில், 26.83%- ஆக உயர்ந்திருக்கிறது. அதேபோல், தனியார் மருத்துவக் கல்லூரிகளில் இந்த எண்ணிக்கை 0.07% -ல் இருந்து 12.01% ஆக அதிகரித்திருக்கிறது.
- ❖ மாநில பாடத்திட்டத்தில் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை 65%-ல் இருந்து 43.01% ஆகக் குறைந்திருக்கிறது.
- ❖ தமிழ் வழியில் படித்து எம்.பி.பி.எஸ் படிப்பில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையும் 14.4% -ல் இருந்து 1.7% ஆகக் குறைந்துவிட்டது. அதேநேரம், ஆங்கில வழிக் கல்வியில் பயின்ற மாணவர்களின் எண்ணிக்கை 56.02%-ல் இருந்து 69.53% ஆக உயர்ந்துள்ளது.
- ❖ பயிற்சி வகுப்புகள் மூலம் நீட் தேர்வை ஒரு முறைக்கு மேல் எழுதுபவர்கள் அதிக அளவில் வெற்றிபெறுகிறார்கள். ஒருமுறைக்கு மேல் நீட் தேர்வு எழுதுபவர்கள் 2016-17-ம் ஆண்டில் 12.47% ஆக இருந்த நிலையில், 2020-21 கல்வியாண்டில் 71.42% என்ற அளவுக்கு அதிகரித்திருக்கிறது.
- ❖ நீட் அறிமுகத்துக்குப் பின்னர் எம்.பி.பி.எஸ் படிப்பில் சேரும் ஊரகப் பகுதி மாணவர்கள் எண்ணிக்கை 30% குறைந்துள்ளது. நகரப் பகுதி மாணவர்கள் 30% அதிகரித்திருக்கிறார்கள்.
- ❖ நீட் வந்த பிறகு 40% முதல் தலைமுறை பட்டதாரி மாணவர்கள் வாய்ப்புகளை இழந்திருக்கிறார்கள்.
- ❖ பெற்றோரின் ஆண்டு வருமானம் 2.5 லட்ச ரூபாய்க்குள் இருக்கும் மாணவர்கள் எண்ணிக்கை 10.45% ஆகக் குறைந்துள்ளது.
- ❖ நீட் தேர்வில் சுமாரான மதிப்பெண் பெற்ற மாணவர்களும் தனியார் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படிக்கிறார்கள். குறிப்பாக, மொத்த மதிப்பெண்ணில் 20% அளவுக்குக் குறைந்த மார்க் எடுத்தவர்களும் எம்.பி.பி.எஸ் படிக்கிறார்கள்.
- ❖ தமிழகத்தில் ஆண்டுதோறும் நீட் பயிற்சியில் மட்டும் ரூ.5,750 கோடி அளவுக்குப் பணம் புழங்குகிறது.
- ❖ மாணவர்கள் உயர் கல்வி பயில்வதற்குத் தயாராக இருக்கிறார்களா... அவர்களின் திறன் போன்றவற்றை நீட் தேர்வு கொண்டு கணிக்க இயலாது.
- ❖ கற்றலுக்கு எதிரானதான பயிற்சி வகுப்புகளை நீட் ஊக்குவிக்கிறது.
- ❖ நீட் தேர்வின் வெற்றி குறித்து எந்தவொரு ஆய்வும் இதுவரை நடத்தப்படவில்லை.
- ❖ அனைத்து மாநிலங்களுக்கும் பொதுவான பாடத்திட்டம் என்ற அடிப்படையில் நீட் தேர்வின் பாடத்திட்டம் தோல்வியடைகிறது.

## 7. First 5 orders signed by CM Stalin. (governance)
**முதல்வரின் முதல் ஐந்து கையெழுத்து**

**`முதல்வராக முதல் 5 கையெழுத்து..!'**

இன்று காலை முதல்வராகப் பதவியேற்ற ஸ்டாலின், கோபாலபுரம் இல்லம், அண்ணா, கருணாநிதி நினைவிடங்கள், பெரியார் திடல் ஆகிய இடங்களுக்குச் சென்று மரியாதை செய்தார். தொடர்ந்து ஸ்டாலின் தலைமைச் செயலகம் வந்தார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டது. தொடர்ந்து முதல்வர் அறையில், தனது இருக்கையில் அமர்ந்த ஸ்டாலின், தனது முதல்வர் பணிகளைத் தொடங்கினார்.

1. முதல் கையெழுத்தாக, ரேஷன் அரிசி அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண நிதியாக ரூ.4,000 வழங்குவது தொடர்பான கோப்பில் கையெழுத்திட்டார். முதற்கட்டமாக இந்த மாதமே ரூ.2,000 வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. தொடர்ந்து ஆவின் பால் லிட்டருக்கு 3 ரூபாய் குறைப்பு செய்த உத்தரவில் கையெழுத்திட்டார். இது மே மாதம் 16-ம் தேதி முதல் அமலுக்கு வரும் எனக் கூறப்படுகிறது.

3. தேர்தல் வாக்குறுதியில் இடம்பெற்றிருக்கும் அறிவிப்பைச் செயலாற்றும் வகையில் தொடர்ந்து தமிழகம் முழுவதுமுள்ள அரசுப் பேருந்துகள், அரசுக் கட்டுப்பாட்டில் இயங்கும் சாதாரண கட்டண நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் பணிபுரியும் மகளிர், உயர் கல்வி பயிலும் மாணவியர் உள்ளிட்ட அனைத்து மகளிரும் கட்டணமில்லா பேருந்துப் பயண அட்டை இல்லாமல் நாளை முதல் பயணம் செய்ய முதலமைச்சர் ஆணை பிறப்பித்துள்ளார். இதன் மூலம் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்படும் கூடுதல் தொகையான 1,200 கோடி ரூபாயை மானியமாக வழங்கி அரசு ஈடுகட்டும்.

4. மாவட்டந்தோறும் மக்களின் பல்வேறு பிரச்னைகள் தொடர்பான மனுக்களை முதல்வர் பெற்று அந்த மனுக்க்ள் மீது ஆட்சிக்கு வந்து நூறு நாள்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வுகாணப்படும் என்ற வாக்குறுதியை அளித்துள்ளார். அந்த வாக்கை நிறைவேற்றும் வகையில் `உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தை செயல்படுத்த புதிய துறையை உருவாக்கி, இந்திய ஆட்சிப்பணி அலுவலர் ஒருவரை நியமிக்கும் அரசாணைக்கு முதல்வர் ஒப்புதல் அளித்துள்ளார்.

5. கொரோனாவால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் பலரும் அரசு மருத்துவமனைகள் மட்டுமன்றி, தனியார் மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்றுவரும் நிலையில், பொதுமக்கள் நலன் கருதி அவர்களின் நிதிச் சிக்கலைக் குறைக்கும் வகையில் சிகிச்சைக்கான மருத்துவமனை கட்டணத்தை தமிழக அரசு காப்பீட்டு திட்டத்தின் கீழ் ஏற்க முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார். இதன்படி முதலமைச்சர் காப்பீட்டு திட்டத்தில் சிகிச்சைச் செலவுகளையும் தனியார் மருத்துவமனைக்கு அரசு வழங்கும்.

# SOCIAL ISSUES – சமூக பிரச்சனைகள்

## 1. Impact of COVID in Tamilnadu
**தமிழ்நாட்டில் கோவிட்டின் தாக்கம்**

**முக்கிய கண்டுபிடிப்புகள்**

- பெருந்தொற்றினால் தூண்டப்பட்ட பொது முடக்கத்தின் முக்கியமான ஒரு விளைவு வேலை மற்றும் வாழ்வாதார இழப்பு ஆகும். பிப்ரவரி 2020இல்,

பெருந்தொற்றுக்கு முன்பாக 91.2 விழுக்காடு மாதிரி குடும்பங்களில் குறைந்தபட்சம் 1-2 உறுப்பினர்கள் பணிபுரிந்தனர்.

- அதைத் தொடர்ந்து, மார்ச் முதல் மே 2020 வரையிலான காலத்தில், 53 விழுக்காடு குடும்பங்கள் தங்கள் வாழ்வாதார இழப்பை எதிர்கொண்டன. கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டதால், இது செப்டம்பர் 2020 இல் 34 விழுக்காடாகவும், 2021 ஜனவரியில் 17 விழுக்காடாகவும் சரிந்தது. முதல் 2 சுற்றுகளின்போது, கிராமப்புற வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்பட்டது.
- ஆனால், மூன்றாவது சுற்றின்போது, கிராமப்புறங்களை விட (16 விழுக்காடு) நகர்ப்புறங்களில் வேலை மற்றும் வாழ்வாதார இழப்பு சற்று அதிகமாகவே (18 விழுக்காடு) இருந்தது.
- ஒட்டு மொத்த வேலை மற்றும் வாழ்வாதார இழப்பில் 69 விழுக்காட்டினர் சாதாரண தொழில் துறையைச் சேர்ந்தவர்கள் ஆவர். இது பெருந்தொற்று காலம் முழுவதும் அதிகமாகவே பாதிக்கப்பட்டு இருந்துள்ளது. அதைத் தொடர்ந்து தனியார் துறையில் மாத ஊதியம் பெறுவோர் பாதிக்கப்பட்டனர்.
- ஒவ்வொரு முடக்கத்தின்போதும், சாதாரண தொழிலாளர்கள் பொருளாதார மற்றும் சுகாதார அதிர்ச்சிகளால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இவர்கள்மீது கவனம் செலுத்தப்பட வேண்டும்.
- இந்த மீட்சியானது இரண்டாவது அலை மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொது முடக்கம் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டது.
- இது மாநிலத்தின் நிதி நிலைமை மிது கடுமையான தாக்கங்களைக் கொண்டிருந்த போதிலும். முதல் அலையின் சர்வே கண்டுபிடிப்புகள், பொது முடக்க நீக்க நடவடிக்கைகள் நேர்மறை விகிதங்களுடன் வரிசைப்படுத்தப்பட்டால் பொருளாதாரம் மீட்கப்படும் ஆற்றலைக் கொண்டுள்ளது என்பதை உணர்த்துகின்றது.
- தமிழ்நாடு பெருந்தொற்று காலத்தின்போது உணவு பாதுகாப்பு பிரச்சினையை நன்றாக கையாண்டது. முதல் சுற்றின்போது, 22 விழுக்காடு குடும்பங்களில் உணவு பாதுகாப்பு பிரச்சினை பதிவு செய்யப்பட்டுள்ளது. இது செப்டம்பர் மாதத்தில் 13 விழுக்காடாகவும், 2021 ஜனவரி மாதத்தில் 6 விழுக்காடாகவும் குறைந்துள்ளது.
- மாநிலத்தில் பொது விநியோகத் திட்டத்தை சிறப்பாக நடத்தியதாலும். கோவிட்-19 நிவாரண நடவடிக்கைகளின்கீழ் கூடுதல் உணவு பரிமாற்றங்களை சரியான நேரத்தில் வெளியிட்டதன் காரணமாகவுமே இது சாத்தியமாயிற்று.
- மூன்று சுற்றுகளிலும் உணவுப் பாதுகாப்பு சவால்களுக்கு மேற்கோள் காட்டப்பட்ட முக்கிய காரணம் வருமானப் பற்றாக்குறை.
- பல்வேறு காலங்களில் பெருந்தொற்றின் பாதகமான தாக்கத்தைத் தணிப்பதற்காக மாநிலத்தால் பல நிவாரண நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.
- மார்ச் 2020 முதல் மே 2020 மாதங்களுக்கு இடையிலான கடினமான முடக்கக் காலத்தில், குடும்ப அட்டை வைத்திருக்கும் அனைவருக்கும் இலவச ரேஷன் பொருட்கள், 1000 ரூபாய் ஒருமுறை நேரடி ரொக்கப் பரிமாற்றம், புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கும் குடும்ப அட்டை இல்லாதவர்களுக்கும் குறிப்பிட்ட

நிவாரணப் பொருட்கள் வழங்கல் போன்ற பெரும்பாலான நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- கடுமையான முடக்கக் காலத்தில், இந்த அனைத்து நடவடிக்கைகளிலும், பொது விநியோகத் திட்டத்தின்மூலம் உணவுப் பரிமாற்றம், மற்றும் அதற்கு அடுத்ததாக ரொக்கப் பணப் பரிமாற்றம் ஆகியவை மிகவும் பயனுள்ளவையாக இருந்ததாக கண்டறியப்பட்டன. நகர்ப்புறங்களில் அம்மா உணவகங்கள் மூலம் இலவச உணவு வழங்கியதும், உணவு பாதுகாப்பு பிரச்சினைகளை கையாள்வதில் குறிப்பிடத்தக்க பங்கு வகித்தது.

கோவிட்-19 இன் பொருளாதார தாக்கம்

- தமிழகத்தின் பொருளாதாரத்தில் பெருந்தொற்றின் தாக்கத்தை ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட, மாநில அரசால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, கோவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக போடப்பட்ட பொது முடக்கம் மாநிலத்தை மோசமான நிலையில் தள்ளியது என்று குறிப்பிட்டுள்ளது.
- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறையில் ஏற்பட்ட நெருக்கடி உற்பத்தித் துறையையும் பாதித்தது என்று இந்த அறிக்கை குறிப்பிடுகிறது. ‘‘குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களின் பொது முடக்கத்தின் கடுமையான விளைவுகள் காரணமாக, இந்த நிதியாண்டில் உற்பத்தித் துறையின் மொத்த உற்பத்தியில் 13 முதல் 15 விழுக்காடு வரை சரிவு ஏற்படலாம் என்று இந்த அறிக்கை எச்சரித்தது. இதன் காரணமான இந்த நிதியாண்டில் சுமார் ரூ.34,000 முதல் ரூ.41,000 கோடி வரை இழப்பு ஏற்பட்டுள்ளது’’ என்று அந்த அதிகாரி குறிப்பிட்டார்.
- அந்த அறிக்கையின்படி, வங்கி மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற சேவைகள் குறைந்த அளவே பாதிக்கப்பட்டிருந்தபோதிலும், ரியல் எஸ்டேட், சில்லறை விற்பனை மற்றும் சுற்றுலாத் துறைகள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டன.

## 2. How Tamilnadu Tackled COVID - 19?
**கோவிட்-19 பெருந்தொற்றை தமிழகம் எவ்வாறு எதிர்கொண்டது?**

**கோவிட் பெருந்தொற்று அச்சுறுத்தலுக்கு முதலில் தயாரானது தமிழ்நாடு**

ஒடிசாவில் நவீன் பட்நாயக் அரசுக்கு முன்பாகவே, கொரோனா வைரஸ் அச்சுறுத்தலைச் சமாளிப்பதற்கு தமிழக அரசு முதலில் நடவடிக்கை எடுத்தது. ஜனவரி 30 அன்று கேரளாவில் இருந்து முதல் கோவிட்-19 நேர்வு பதிவாவதற்கு முன்பாகவே, வெளிநாட்டிலிருந்து வருபவர்களை தமிழ்நாடு சுகாதாரத் துறை அதிகாரிகள் கண்காணித்து வந்தனர். ஜனவரி 30 அன்று. சீனாவில் இருந்து வந்த 78 பேர் வீட்டுத் தனிமைப்படுத்தலில் இருப்பதாக தமிழ்நாடு அரசு அறிவித்தது, பின்னர் அவர்களுக்கு நோய்த் தொற்று இல்லை என்று கண்டறியப்பட்டது.

முதல் கோவிட்-19 தாக்கம் மார்ச் 7ஆம் தேதியும், இரண்டாவது தாக்கம் மார்ச் 19ஆம் தேதியும் பதிவாகியுள்ளது. ஆனால் மார்ச் 17 வாக்கில், மாநில நிர்வாகம் அனைத்து அச்சுறுத்தல்களையும் சமாளிக்கத் தயாராக இருந்தது. தனிநபர் பாதுகாப்பு

உபகரணங்கள் மற்றும் முகக் கவசங்களைக் கொள்முதல் செய்தல், மாவட்டங்களில் தொடர்பு கண்காணிப்பு குழுக்கள் அமைப்பு, இரயில் நிலையங்களின் நுழைவு மற்றும் வெளியேறும் இடங்களில் வெப்பமானிகளைப் பயன்படுத்துதல் மற்றும் உதவி மையங்களை அமைத்தல் போன்றவை உள்ளிட்ட விரிவான அறிவுரைகளை மாநில அரசின் தலைமைச் செயலாளர் அனைத்துத் துறைகளுக்கும் நிறுவனங்களுக்கும் வழங்கினார்.

தொலைக்காட்சி உரையில் பிரதமர் நரேந்திர மோடி அறிவிப்பதற்கு ஒருநாள் முன்னதாகவே தமிழ்நாடு அரசு, மாநிலத்தில் பொது முடக்கத்தை அறிவித்தது.

**கோவிட்-19 தொடர்பான இணையதளம்**

கோவிட்-19 தொடர்பான மாநில அரசின் இணையதளம், பல மாவட்டங்களின் பல்வேறு மருத்துவமனைகளில் சாதாரண படுக்கைகள் மற்றும் ஆக்சிஜன் ஆதரவு கொண்ட படுக்கைகளின் வகைப்படுத்துலுடன் படுக்கை கிடைப்பது குறித்த நிகழ்நேர புதுப்பிப்பை வழங்கியது. இதன் காரணமாக படுக்கைகள் அல்லது கோவிட்-19 தொடர்பான மருத்துவ அவசர உதவிகள் தேடி நோயாளிகள் இங்கும் அங்கும் அலைவது தவிர்க்கப்பட்டது.

**போதுமான ஆக்சிஜன் விநியோகம்**

மருத்துவ ஆக்சிஜன் மற்றும் சுகாதார வசதிகள் வழங்கல் தொடர்பாக மருத்துவமனைகள் எதிர்கொள்ளும் 'எந்த வகை பிரச்சினைகளையும்' தீர்ப்பதற்கு 24 மணி நேரமும் வாரத்தின் 7 நாட்களிலும் இயங்கும் உதவி மையம் அமைக்கப்பட்டது. உதவிக்கு 104ஐ அழைக்கலாம் என்று தமிழக அரசு தெரிவித்தது.

**ரெம்டெசிவிர்**

மாநில அதிகாரிகளால் பரிந்துரைக்கப்பட்ட, விற்பனைக்காக நிர்ணயிக்கப்பட்ட இடங்களில், கோவிட்-19 நோயாளிகளின் உறவினர்களின் கூட்ட நெரிசலைத் தவிர்ப்பதற்காக வைரஸ் தடுப்பு மருந்தாகிய ரெம்டெசிவில் நேரடியாக தனியார் மருத்துவமனைகளுக்கு வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது.

45 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்காக, அரசு அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களில் இரண்டு வாரங்களுக்குள் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் என்று அரசு அறிவுறுத்தியது.

மத மற்றும் திருவிழா நோக்கங்களுக்காக கூடுவது தடைசெய்யப்பட்டது மற்றும் அனைத்து வழிபாட்டுத் தலங்களிலும் பிரார்த்தனைகள் சமூக விலகல் போன்ற விதிமுறைகளைக் கடைபிடித்து குறிப்பிட்ட நேரம் வரை மட்டுமே அனுமதிக்கப்படும்.

மற்ற மாநிலங்களிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் தமிழ்நாட்டிற்கு வருபவர்களைக் கண்காணிக்க முன்பு போல மின் பதிவு விதிமுறை அமலில் இருக்கும்.

திருமணங்களில் பங்கேற்கக்கூடிய அதிகபட்ச நபர்களை 100 ஆகவும், இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்பவர்களை 50 ஆகவும் மட்டுப்படுத்தி, விளையாட்டு நிகழ்வுகளுக்கு பார்வையாளர்களை அனுமதிக்கக் கூடாது என்றும், நீச்சல் குளங்களை பயிற்சிக்கு மட்டுமே பன்படுத்த வேண்டும் என்றும் அரசு கூறியது.

மளிகைக் கடைகள், சில்லறை கடைகள், மால்கள் மற்றும் பெரிய கடைகள், உணவகங்கள் மற்றும் டீ கடைகள் என எதுவாக இருந்தாலும், எந்த நேரத்திலும் அங்கு கூடும் நபர்களின் எண்ணிக்கை 50 விழுக்காட்டைத் தாண்டக் கூடாது, மற்றும் அனைத்து கடைகளும் இரவு 11 மணி வரை இயங்கலாம் மற்றும் பார்சல் சேவைகளும் அத்தகைய நேரம் வரை மட்டுமே இயங்க அனுமதிக்கப்படும்.

ஒற்றைத் திரை மற்றும் மல்டிப்ளக்ஸ் உள்ளிட்ட திரையரங்குகள், மிருகக் காட்சி சாலைகள், பொழுதுபோக்கு பூங்காக்கள், பொழுதுபோக்கு கிளப்புகள் ஆகியவற்றுக்கு ’50 விடுக்காடு’ மட்டுமே என்ற விதி பொருந்தும். ‘200’ என்பது கலாச்சார, பொழுதுபோக்கு, அரசியல் அல்லது விளையாட்டு உள்ளிட்ட நிகழ்ச்சிகளுக்கு ஆடிட்டோரியங்களில் அனுமதிக்கப்படும் அதிகபட்ச நபர்களின் எண்ணிக்கை ஆகும்.

முகக் கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளி உள்ளிட்ட நிலையான செயல்பாட்டு நடைமுறைகளைக் கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்திய அரசு, வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கு அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

நிறுவனங்கள், தொழிற்சாலைகள், வணிக வளாகங்கள் மற்றும் உணவு விடுதிகள் வெப்ப பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதை, கை சுத்திகரிப்பை, முகக் கவசம் அணிவதை உறுதி செய்ய வேண்டும். வணிக செயல்பாட்டிற்காக மட்டுமே முகக் கவசம் அணிவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

முகக் கவசம் அணியாதவர்களை உணவு விடுதிகள் மற்றும் வணிக வளாகங்கள் உள்ளிட்ட இடங்களுக்குள் அனுமதிக்கக் கூடாது.

தொழிற்சாலைகள் தங்கள் தொழிலாளர்கள் தடுப்பூசி போடுவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் மற்றும் நிலையான விழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றாத நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

சிறிய திரைத் தொடர்கள் மற்றும் திரைப்படங்களுக்கான படப்பிடிப்பு அனுமதிக்கப்பட்ட போதிலும், கலைஞர்கள் மற்றும் ஊழியர்கள் ஆர்டி-பிசிஆர் பரிசோதனைகளுக்கு உட்பட வேண்டும் மற்றும் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். தயாரிப்பு நிறுவனங்கள் இதை உறுதி செய்ய வேண்டும் என்று அரசு தெரிவித்துள்ளது.

காய்ச்சல் முகாம்கள், காய்ச்சல் போன்ற அறிகுறிகள் உள்ளவர்களைக் கண்டறிய வீட்டுக்கு வீடு சென்று கணக் கெடுப்பு மேற்கொள்ளுதல் மற்றும் தொற்று பாதித்த நபரின் தொடர்பில் இருந்தவர்களைத் தடம் அறிவது ஆகிய நடவடிக்கைகள் மாநிலம் முழுவதும் மீண்டும் செயல்படுத்தப்படும்.

கட்டுப்பாட்டுப் பகுதிகளில், தற்போதைய கட்டுப்பாடுகள் எந்தவித தளர்வும் இல்லாமல் தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும் மற்றும் ஒன்றிய அரசின் தடையின்படி, சர்வதேச விமானப் பயண சேவை அனுமதிக்கப்பட மாட்டாது.

சென்னையில், ஒவ்வொரு மண்டலத்திற்கும் களநிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டு, நோய்ப் பரவல் குறைக்கப்படும். அத்தகைய குழுக்கள் மாவட்ட நிலைகளிலும் அமைக்கப்படும்.

கட்டுப்பாட்டு மண்டலங்களுக்கான கண்காணிப்பு அமைப்புகள் (உள்ளாட்சி அமைப்புகள் மட்டுமல்லாது, காவல்துறை மற்றும் சுகாதாரத் துறைகளைச் சேர்ந்த பணியாளர்கள்), கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்கள் அந்தப் பகுதியைவிட்டு வெளியே செல்லாமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

கட்டுப்பாட்டு மண்டலங்களில் உள்ள மக்களுக்கு உதவுவதற்காக தன்னார்வலர்கள் நியமிக்கப்படுவார்கள். குடியிருப்பாளர்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதை அவர்கள் உறுதி செய்வார்கள்.

கோவிட்-19 நோய் அறிகுறிகள் இருப்பதாகச் சந்தேகித்தால், அருகாமையில் உள்ள அரசு மருத்துவமனையை நாட வேண்டும் என்று அரசு தெரிவித்து, பொது மக்களின் ஒத்துழைப்பை நாடியது.

## 3. Tamilnadu Slum Dwellers resettlement policy
**தமிழக அரசின் புதிய குடிசை மாற்று மறுவாழ்வு கொள்கை**

- தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் (Tamil Nadu Urban Habitat Development Board), செப்டம்பர் 1970இல் நிறுவப்பட்டது. இது தமிழகத்தில் குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களின் வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துவதற்காக பல்வேறு வீட்டு வசதி, குடிசை மேம்பாடு மற்றும் மறுவாழ்வு மற்றும் மீளகுடியேற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இந்த வாரியம் ஆரம்பத்தில் சென்னையில் தனது நடவடிக்கைகளைத் தொடங்கியது. பின்னர் அதன் செயல்பாடுகள் படிப்படியாக 1984 முதல் தமிழகத்தின் பிற நகர்ப்புறங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டன.
- தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் குறிக்கோள், 'கடவுளை நாம் ஏழைகளின் சிரிப்பில் காணலாம்' என்பதாகும். இந்த வாரியம், குடிசைப்பகுதி மற்றும் நகர்ப்புற சேரி குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக, 2023க்குள் சேரி இல்லாத நகரங்களின் பார்வையை மேம்படுத்துவதற்காகவும், 2023க்குள் சேரி இல்லாத நகரங்களை உருவாக்க

வேண்டும் என்ற தொலைநோக்குப் பார்வையை அடைவதற்காகவும், உள்-சித்தாந்தத் திட்டங்கள், உள்-இடத் திட்டம் மற்றும் உட் கட்டமைப்பு மேம்பாடு மற்றும் மறுவாழ்வு மற்றும் மீள் குடியேற்றத் திட்டங்கள் போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

- தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் செவ்வாய்க்கிழமை அன்று வெளியிட்ட வரைவு கொள்கையானது, துறைகள், சட்ட ரீதியான அமைப்புகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவை பல்வேறு சட்டங்கள் மற்றும் விதிகளின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு, வெளியேற்றம் மற்றும் இடப்பெயர்ச்சிக்குப் பொருந்தும் என்று கூறுகிறது.
- மீள் குடியேற்றத்திற்கான நிலத்தை அடையாளம் காணும்போது, குறிப்பிட்ட பயனாளியின் தினசரி வாழ்வாதார நடவடிக்கைகளை கருத்தில் கொள்ள வேண்டும் என்று அது குறிப்பிடுகிறது.
- மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுக்காக நிலத்தைத் தேடும் போது வேலை செய்யுமிடத்திலிருந்து உள்ள தொலைவையும், அருகிலுள்ள நகரத்திலிருந்து உள்ள தொலைவையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அது குறிப்பிடுகிறது.
- தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியமாக இருந்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், குடிசைவாசிகள் அருகில் உள்ள நகரத்திற்கு பேருந்து அல்லது ரயிலில் செல்வதற்கு அரை மணி நேரம் மட்டுமே ஆகும் தொலைவில் உள்ள பகுதியில் மட்டுமே குடியமர்த்த வேண்டும் என்று வரைவு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.
- இந்த வரைவுக் கொள்கையானது, ஆட்சேபனைக்குரிய புறம்போக்கு நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் மீதான பிற அறிவுறுத்தல்களைத் தாண்டியும் இது மேலோங்கி இருக்கும் என்று குறிப்பிடுகிறது.

இந்தக் கொள்கையானது அத்துமீறுபவருக்கு / அந்த நிலத்தின் உரிமையைப் பெறாதவருக்கு மட்டுமே பொருந்தும் என்றும் இது குறிப்பிடுகிறது.

## 4. Tamil Nadu Village Habitation Improvement Scheme (THAI) THAI திட்டம்

### தமிழ்நாடு குக்கிராமங்கள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (தாய் திட்டம்)

குக்கிராமங்களில் தற்போதுள்ள அடிப்படை வசதிகள் மற்றும் தேவைப்படும் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை குறித்து விரிவான கணக்கெடுப்பு நடத்தி அதன் மூலம் கண்டறியப்படும் அடிப்படைத் தேவைகளை தாய் திட்ட நிதியிலிருந்தும், இதர திட்டங்கள் மற்றும் இதர துறை திட்டங்கள் மூலமும் நிறைவு செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும்

**மேற்கொள்ளப்படும் பணிகள்**

குக்கிராமம் குறித்த அடிப்படை வசதிகளின் விவரங்களான குடிநீர் விநியோகம் (மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், சிறுமின்விசை பம்புகள், தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகள், கைப்பம்புகள்), தெருவிளக்குகள், தெருக்கள் மற்றும் சந்துகள், இடுகாடு / சுடுகாடு> அரசு / உள்ளாட்சி கட்டடங்கள்> அரசு / உள்ளாட்சி பள்ளி கட்டடங்கள்>

சிறுகுளங்கள் மற்றும் ஊரணிகள்> விளையாட்டு திடல்கள்> பேருந்து நிலையங்கள்> சந்தைகள்> கிராம ஊராட்சி சாலைகள்> ஊராட்சி ஒன்றிய சாலைகள் ஆகிய உள்கட்டமைப்பு வசதிகளின் இன்றைய தன்மையை அறிந்து அவற்றை மேம்படுத்துவது அல்லது புதிதாக உருவாக்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

கூடுதல் தேவைப்பணிகளாக அங்கன்வாடி மையம், பொது விநியோக கடை, சுய உதவிக்குழு கட்டிடம், கதிரடிக்கும் களம், விளையாட்டு மைதானம் மற்றும்

**அனுமதிக்கப்பட்ட இதர பணிகள்.**

கிராம ஊராட்சிகளில் அமைந்துள்ள குக்கிராமங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடும் மாநில அரசைச் சார்ந்தது.

**தாய் திட்டம் II – 2016 – 17**

குக்கிராமங்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு அரசு 2011-12ம் ஆண்டு முதல் தாய் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. தற்போது தமிழ்நாடு அரசு தாய்திட்டம் – II 2016-17-ம் ஆண்டின்கீழ் பின்வரும் பணிகள் செயல்படுத்தி வருகிறது.

- சிறுபாசன ஏரிகள் மேம்படுத்தல்
- தார் சாலைகள் அமைத்தல்
- அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல்
    1. குடி நீர் பணிகள்
    2. கிராமப் பகுதிகளிலுள்ள குடியிருப்புகளுக்கு சிமெண்ட் கான்கிரீட் அல்லது பேவர் பிளாக் அமைத்தல்
    3. மயானம் மேம்பாடு செய்தல்
    4. மயானத்திற்கு அணுகு சாலைகள் அமைத்தல்

**சிறுபாசன ஏரிகள் மேம்படுத்தல்**

தாய் திட்டத்தின்கீழ் ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டிலுள்ள சிறுபாசன ஏரிகளில் 2016-17-ம் ஆண்டின்கீழ் 62 ஏரிகள் மேம்படுத்தும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் இயந்திரங்களின் மூலம் ஏரிகளில் உள்ள முட்புதர்களை அகற்றி தூரி வாரப்பட்டு மதகு மற்றும் கலங்கள் புதிதாக கட்டப்பட்டு கரைகள் பலத்தப்படும். இதனால் சிறுபாசன ஏரிகள் முழு கொள்ளளவினை எட்ட முடியும். இதன் மூலம் நிலத்தடி நீர் மட்டம் உயர்வதால் குடிநீர் மற்றும் விவசாயத் தேவைகளை பூர்த்தி செய்ய வழி வகுக்கும்.

**அடிப்படை வசதிகள் மேம்படுத்துதல்**

தாய் திட்டத்தின்கீழ், குக்கிராமங்களில் குடிநீர் பணிகள், தெரு விளக்குகள், அணுகுசாலைகள், இடுகாடு அமைத்தல், இடுகாடு/சுடுகாடு செல்ல சிமெண்ட் சாலைகள் அமைத்தல் ஆகிய அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படுகிறது. மேலும் சாலைகளின் தரத்தினை மேம்படுத்தவும், மண் சாலைகளை தார் சாலைகளாக மாற்றும் பணிகளும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**பயனாளி:**

கிராமப்புற மக்கள்.

**பயன்கள்:**

கிராமப்புற பகுதிக்கு அடிப்படை வசதிகள்

APOLLO STUDY CENTRE

## 5. Chennai's Sustainable Urban Services.
### சென்னையின் நிலையான நீடித்த நகர்ப்புற சேவைகள்

**முன்னுரை:**

சென்னையை பசுமையான, வாழக்கூடிய, போட்டித் தன்மையுள்ள, காலநிலை மாற்றம் மற்றும் பிற அதிர்ச்சிகளைத் தாங்கக் கூடிய உலகத்தரம் வாய்ந்த நகரமாக மாற்றும் தொலைநோக்குத் திட்டத்திற்கு, உலக வங்கியின் நிர்வாக இயக்குநர்கள் குழு இன்று 150 மில்லியன் டாலர் ஒப்புதல் அளித்தது.

150 மில்லியன் டாலர் சென்னை நகர கூட்டாண்மை: நிலையான நகர்ப்புற சேவைகள் திட்டமானது நிறுவனங்களை வலுப்படுத்தவும், சேவை நிறுவனங்களின் நிதி ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் மற்றும் நான்கு முக்கிய நகர்ப்புற சேவைகளின் தரத்தில் குறிப்பிடத்தக்க மேம்பாடுகளை ஏற்படுத்தவும் உதவும் - நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர், இயக்கம், சுகாதாரம் மற்றும் திடக் கழிவு மேலாண்மை.

**முக்கிய அம்சங்கள்**

- இந்தத் திட்டமானது சென்னையை மேலும் பசுமையான, வாழக்கூடிய மற்றும் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக்கூடிய ஒரு நகரமாக மாற்றும் தமிழகத்தின் தொலைநோக்குப் பார்வையை நிறைவேற்றும்.
- தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் திட்டம் தவிர, மேகாலயா மாநிலத்தில் சுகாதார சேவைகளின் தரத்தை மேம்படுத்தும் 40 மில்லியன் டாலர் திட்டத்திற்கும் உலக வங்கி ஒப்புதல் வழங்கியுள்ளது. இது கோவிட்-19 பெருந்தொற்று போன்ற சுகாதார அவசர நிலைகளைக் கையாளும் மாநிலத்தின் திறனை மேலும் வலுப்படுத்தும்.

**சென்னை மாநகர கூட்டாண்மை**

சென்னை மாநகர கூட்டாண்மை: நிலையான நகர சேவைகள் திட்டம் என்பது நிறுவனங்களை வலுப்படுத்த உதவும் 150 மில்லியன் டாலர் திட்டமாகும். இது சேவை நிறுவனங்களின் நிதி ஆரோக்கியத்தை மேம்படுத்தவும், கீழ்க்கண்ட நான்கு முக்கிய நகர்ப்புற சேவைகளின் தரத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைக் கொண்டு வரவும் உதவும்:

- குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல்
- இயக்கம்
- சுகாதாரம், மற்றும்
- திடக் கழிவு மேலாண்மை.

**நீர்வள மேலாண்மை, நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் சேவைகள்**

சென்னையில் தொடர்ந்து வரும் வெள்ளம் மற்றும் வறட்சியின் சுழற்சியை உடைப்பதற்காக, இந்தத் திட்டம் நீர்வளங்கள், நீர் வழங்கல் அமைப்பு மற்றும் தேவை

ஆகியவற்றின் ஒருங்கிணைந்த நிர்வாகத்தை ஆதரிக்கும். இது நீர் ஒழுங்குமுறை ஆணையம் உருவாக்குவதை, முக்கிய நகரப் பகுதியில் நீர் வழங்கல் மற்றும் சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்கான செயல்திறன் அடிப்படையிலான ஆபரேட்டர் ஒப்பந்தங்களின் பயன்பாடு, புதிதாகச் சேர்க்கப்பட்ட புறநகர்ப் பகுதிகளில் வசிக்கும் வீடுகளுக்கு சேவைகளை விரிவாக்குதல், செயல்பாட்டு திறனில் மேம்பாடு (எ.கா நீர் இழப்புகளைக் குறைப்பதன்மூலம்), மேம்படுத்தப்பட்ட செலவு மீட்பு (மேம்படுத்தப்பட்ட பயனர் கட்டணங்கள் மற்றும் / அல்லது இயக்க செலவுகளைக் குறைப்பதன் மூலம்) ஆகியவற்றை ஆதரிக்கும்.

**நகர்ப்புற இயக்கம்**

இந்தத் திட்டம் பல்வேறு போக்குவரத்து சேவைகளை ஒருங்கிணைத்தலை உறுதி செய்யும் மற்றும் பொது போக்குவரத்து மற்றும் பொது இடங்களில் பெண்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதை வலியுறுத்தும், தடையற்ற மற்றும் பாதுகாப்பான, குடிமக்களை மையமாகக் கொண்டு இயங்கும் சேவைகளை சென்னைக்கு வழங்குவதை ஆதரிக்கும். இது செயல்திறன் அடிப்படையிலான ஒப்பந்தத்தின்மூலம் பேருந்து சேவைகளின் அளவு மற்றும் தரத்தை மேம்படுத்தும் மற்றும் பாதசாரிகள் மற்றும் சைக்கிள் ஓட்டுதல் உள்கட்டமைப்பை விரிவாக்கும். மேலும், இது பல ஒருங்கிணைந்த போக்குவரத்து முறைகள் மற்றும் முகமைகளில் ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கான நிறுவனமாக சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையத்தின் செயல்பாட்டை ஆதரிக்கும்.

**சுகாதார சேவைகள்**

இந்தத் திட்டம் சென்னைக்கு விரிவான சுகாதார சேவைகளை வழங்க உதவுதல் (உதாரணமாக, புற்றுநோய், நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் ஆகியவற்றைக் கண்டறிதல் உட்பட), பொது சுகாதார மையங்களின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் அவை தேசிய தர உறுதி நிலைகளை அடைய உதவுதல், மற்றும் அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளின் வழக்கமான அறிக்கையிடல் மூலமாக நோய் கண்காணிப்பை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலமாக சுகாதாரப் பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்தும்.

**திடக்கழிவு மேலாண்மை**

இந்தத் திட்டம் சென்னை மாநகரம் கழிவுகளைக் குறைக்கவும் மற்றும் வள மீட்பை மேம்படுத்தவும், மாநகரத்தை கழிவு வரிசைமுறையை மறுபயன்பாடு, மறு சுழற்சி மற்றும் மீட்பு நோக்கி நகர்த்தவும் உதவுகிறது. இது, அதன் திடக் கழிவு மேலாண்மை அமைப்பின் செயல்பாட்டு மற்றும் நிதி நிலைத் தன்மையையும் மேம்படுத்தும்.

**இந்தத் திட்டம் ஏன் சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது?**

சென்னையின் பெருநகர மாநகராட்சிப் பகுதியில் 10.9 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். இது இந்தியாவின் நான்காவது அதிக மக்கள் தொகை கொண்ட பெருநகரப் பகுதியாகும். இந்த மாநகரம் ஒரு பொருளாதார அதிகார மையமாக இருந்தபோதிலும், முக்கிய சேவைகளுக்கான வளர்ந்து வரும் தேவைக்கு ஏற்ப

முன்னேறவில்லை. இந்த நகரம் இயற்கைப் பேரழிவுகள், காலநிலை மாற்றம் மற்றும் கோவிட்-19 பெருந்தொற்று போன்ற தொற்று நோய்களாலும் எளிதில் பாதிக்கப்படக் கூடியதாக உள்ளது. எனவே. இது போன்ற அனைத்து சவால்களையும் எதிர்கொள்வதற்கு இந்தத் திட்டம் உதவும்.

## 6. Singara Chennai 2.0.
**சிங்கார சென்னை 2.0**

**சிங்கார சென்னை 2.0**

மே 2021இல் ஆட்சிக்கு வந்த புதிய தி.மு.க அரசு சிங்கார சென்னை திட்டத்தைப் புதுப்பிக்க ஒரு திட்டத்தை அறிவித்தது. இந்த அரசின் கடைசி காலத்திற்கும் தற்போதைய காலத்திற்கும் இடையிலான இடைவெளியில், பல திட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. அவற்றில் முக்கியமானது இந்திய அரசின் சீர்மிகு நகரங்கள் திட்டம். ஏற்கனவே மாநகரின் பல பகுதிகளில் வளர்ச்சிப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பாண்டிபஜாரில் உள்ள பாதசாரிகள் நடைபாதை ஒரு பிரகாசமான உதாரணம். சென்னை மெட்ரோ இரயிலின் தரைப்பகுதிக்கு மேலேயும் கீழேயும் இயக்கப்படும் நிலையால், நகருக்குள் பயணிக்கும் சிரமம் குறைந்துள்ளது.

**சிங்கார சென்னை 2.0 இன்கீழ் உள்ள முன்மொழிவுகள்**

- நீலத் திட்டம் (Project Blue) – இது மாநகரத்தின் கடற்கரையை மாற்றுவதற்கான திட்டம் ஆகும். இது நகரின் கடற்கரையை மாற்றுவதற்கான ஒரு திட்டம் ஆகும். இந்த நகரத்தின் கடற்கரையில் முற்றிலும் மாறுபட்ட காட்சி, தண்ணீர் விளையாட்டுகள் மற்றும் ஒரு மீன்காட்சியகம் ஆகியவை இருக்கும். நகரத்தின் பரந்த கடற்கரையை காட்சிப்படுத்தி சுற்றுலாவை மேம்படுத்துவதே இதன் நோக்கம் ஆகும்.
- நகர்ப்புற தோட்டங்கள், விளையாட்டுப் பகுதிகளுடன் நகரம் முழுவதும் சுரங்கப் பாதைகள் மற்றும் மேம்பாலங்களை அழகுபடுத்துதல்.
- ஒரு ∴பெர்ரிஸ் சக்கரத்திற்கான முன்மொழிவுடன் அண்ணா நகர் டவர் பூங்காவை மறுவடிவமைப்பு செய்தல்.
- கிண்டி மற்றும் எழும்பூர் இரயில் நிலையங்களுக்கான பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.
- குழந்தைகளின் அறிவியல் விசாரணை மற்றும் மனநிலையை ஊக்குவிப்பதற்காக அறிவியல் மற்றும் கணித பூங்காக்கள்
- விக்டோரியா ஹால் போன்ற பாரம்பரிய அடையாளங்கள் முன்னுரிமை அடிப்படையில் புதுப்பிக்கப்படும்.
- தெரு கலை மற்றும் உள்ளூர் வாழ்க்கை மற்றும் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் பிற வடிவங்களை ஊக்குவிப்பதற்காக நகரத்தில் ஒரு கலை மாவட்டத்தை உருவாக்குதல்.

❖ செல்லப்பிராணி பூங்கா, அறிவியல் மையம் மற்றும் அதிநவீன பல்விளையாட்டு வளாகத்தை உருவாக்குதல்.

❖ மின்சார வாகன பயன்பாட்டை ஊக்குவித்தல்.

சிங்காரச் சென்னை 2.0இன்கீழ் பல்வேறு சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான அரசாணை புதன்கிழமை அன்று வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, இதற்கான பணிகளை மாநகர நிர்வாகம் விரைவில் தொடங்க உள்ளது. கொடுங்கையூர் மற்றும் பெருங்குடியில் மரபுக் கழிவுகளை உயிரியல் சுரங்கப்படுத்துதல், பாரம்பரிய கட்டிடங்களை சீரமைத்தல், தரமான கழிவறைகளை அணுகுதல் மற்றும் பொது சுகாதார மையங்களை வலுப்படுத்துதல் போன்ற திடக்கழிவு மேலாண்மை திட்டங்களும் இந்தத் திட்டத்தில் அடங்கும் என்று உயர் அலுவலர்கள் சிலர் தெரிவித்தனர்.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ஷிவ் தாஸ் மீனா அவர்கள் வெளியிட்டுள்ள அரசாணையின்படி, சிங்காரச் சென்னை 2.0 ஐ செயல்படுத்துவதற்கான முன்மொழிவு மற்றும் வழிகாட்டுதல்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனுமதி வழங்குதல் மற்றும் செயல்படுத்துவதற்காக ஐந்து பேர் கொண்ட ஒரு ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம் மாநகரத்துடன் கூடுதலாகச் சேர்க்கப்பட்ட பகுதிகள்மீது சிறப்பு கவனம் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ‘‘நாங்கள் ஏற்கனவே 60,000 மரக்கன்றுகளை நட்டுள்ளோம், பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அரசாணை இப்போது எங்களை மேலும் சில பெரிய திட்டங்களுக்குச் செல்ல அனுமதி அளிக்கும்’’ என்று அந்த அலுவலர் தெரிவித்தார். சுவர்களை அழகுபடுத்துதல் மற்றும் சுவரொட்டிகளை அகற்றுதல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

பாலங்கள் அலங்கார விளக்குகளால் பசுமைப்படுத்தப்பட்டிருந்த போதிலும், மிண்ட் கடிகார கோபுரம், போன்ற வரலாற்று சிறப்பு மிக்க கட்டமைப்புகளும் புதுப் பொலிவு பெற்றன. கடற்கரை அழகுபடுத்தலை நோக்கமாகக் கொண்ட ‘நீலத் திட்டத்திற்கு’ இந்த அரசாணை ஒரு உத்வேகத்தை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ‘‘விரைவாக நிதி பெறக்கூடிய திட்டங்களை முடிப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்படும். இருப்பினும், இந்தத் திட்டத்தின்கீழ், பெரிய வித்தியாசத்தில் பணிகள் மேற்கொள்ளப்படக்கூடும் என்பதால், ரு.500 கோடி நிதி ஒதுக்கீடு என்பது போதுமானதாக இருக்காது என்பது கவலைக்குரியதாக உள்ளது’’ என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கூடுதலாக, ஒவ்வொரு வீட்டிற்கும் மெட்ரோ குடிநீர் விநியோகம் செய்யப்படும். தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் லிமிடெட் மூலம் நிதி மேலாண்மை செய்யப்படும்.

**தூய்மை சென்னை**

- ❖ மரபுக் கழிவுகளை உயிரியல் ரீதியாக அப்புறப்படுத்துதல், மீட்டெடுக்கப்பட்ட நிலங்களை நகர்ப்புற பசுமை இடங்களாக மாற்றுதல்.
- ❖ இறைச்சிக் கூடங்கள் மற்றும் சந்தைகளை நவீனமயமாக்கல்
- ❖ கட்டுமானக் கழிவுகளை அறிவியல் ரீதியாக அப்புறப்படுத்துதல்

**பசுமை சென்னை**

- ❖ மாநகரம் முழுவதும் மரங்களை நடுதல்

**நீர்மிகு சென்னை**

- ❖ தண்ணீர் விநியோகப் பணிகள்
- ❖ நீர்வழிப் பாதைகள் மற்றும் நீர்நிலைகளுக்குப் புத்துயிரூட்டுதல்

**எழில்மிகு சென்னை**

- ❖ பாரம்பரிய கட்டிடங்களை மறுசீரமைப்பு செய்தல், முகப்பு விளக்குகளை வழங்குதல்
- ❖ சந்திப்புகளையும், பாலங்களின் கீழ்பகுதிகளையும் அழகுபடுத்துதல்
- ❖ மாநகர கட்டமைப்பின் தரத்தை உயர்த்துதல்
- ❖ மாற்றுத் திறனாளிகளுக்கு நடைபாதைகளை ஏற்படுத்தித் தருதல்

**நலமிகு சென்னை**

- ❖ பொது மற்றும் சமூக கழிப்பறைகளைக் கட்டுதல்.
- ❖ தாய் மற்றும் குழந்தைகள் நல வசதிகளை மேம்படுத்துதல்.
- ❖ வெளிப்புற விளையாட்டுகள் மற்றும் உடற்பயிற்சிக்கான வசதிகளை வழங்குதல்
- ❖ மோட்டார் பொருத்தப்படாத போக்குவரத்தை ஊக்குவித்தல்
- ❖ நிலத்தடி கழிவுநீர் வசதிகள் ஏற்படுத்தித் தராத பகுதிகளில் அவற்றை ஏற்படுத்தித் தருதல்

**கல்விமிகு சென்னை**

- ❖ பள்ளிகளின் கட்டமைப்பை மேம்படுத்துதல்
- ❖ பள்ளிக் குழந்தைகளுக்கு கற்றல் மையங்களை ஏற்படுத்தித் தருதல்
- ❖ நவீன நூலகங்கள்

## 7. Doorstep Medical

**மக்களைத் தேடி மருத்துவம்**

**மக்களைத் தேடிமருத்துவம்**

**மக்களைத் தேடி மருத்துவர் - வீட்டு வாசலில் சுகாதாரச் சேவைகள்**

| | |
|---|---|
| திட்டம்: | மக்களைத் தேடி மருத்துவர் - வீட்டு வாசலில் சுகாதாரச் சேவைகள் |
| அரசு: | தமிழ்நாடு அரசு |
| தொடங்கி வைத்தவர்: | முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் |
| தொடங்கி வைத்த தேதி: | ஆகஸ்ட் 5, 2021 |
| முதன்மை பயனாளிகள் | மாநிலத்தில் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகள் |
| பயன்: | வீட்டு வாசலில் மருத்துவ பராமரிப்பு மற்றும் சிகிச்சை |
| நோக்கம்: | தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு அவர்களின் வீடுகளிலேயே மருத்துவ பராமரிப்பு மற்றும் சிகிச்சைகளை வழங்குதல். |

**நோக்கங்களும் பயன்களும்:**

- இந்தத் திட்டத்தின் முதன்மை நோக்கம், தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குத் தேவையான அனைத்து சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகளுடன், வீட்டிலேயே சிகிச்சை அளிப்பதாகும்.
- இந்தத் திட்டத்தின்கீழ், நோயாளிகள் தங்கள் வீட்டிலேயே சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகளைப் பெற முடியும்.
- இது, பற்றாக்குறையான மருத்துவ வசதிகள் உள்ள பகுதிகளுக்கு மருத்துவ உதவியை வழங்கும்.
- இது, நோய் மற்றும் வியாதிகளை எளிதில் அடையாளம் காண உதவுவதுடன், இதன்மூலம் விரைவாக குணப்படுத்தி சிகிச்சை அளிக்க முடியும்.
- இது, மிகவும் அவசியமில்லாமல் நோயாளிகள் மருத்துவமனைக்கு வருவதைத் தவிர்க்கவும் உதவும்.
- இதன்மூலம் மாநில அரசு, குடிமக்களின் ஆரோக்கியத்தை கண்காணிக்க முடியும்.
- இந்தத் திட்டத்தின்கீழ், மக்களின் வாழ்க்கை மற்றும் ஆரோக்கிய சமநிலையைப் பராமரிக்க முடியும்.

**முக்கிய அம்சங்கள்:**

- வீட்டு வாசலில் சுகாதாரத் திட்டம் - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் 5 ஆகஸ்ட், 2021 அன்று மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.
- இந்தத் திட்டம் தற்போது கிருஷ்ணகிரி, தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சென்னை, சேலம் மற்றும் மதுரை மாவட்டங்களில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

- இந்தத் திட்டத்தின்கீழ் மாநில அரசு மக்களுக்குத் தேவையான மருந்துகள், மருத்துவ சேவைகள் மற்றும் சிகிச்சைகளை குடியிருப்பாளர்களுக்கு வழங்கும்.
- இது, முக்கியமாக தொற்றா நோய் உள்ள மக்களுக்கு உதவுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்தத் திட்டம் நோயாளிகள் தங்கள் வீட்டிலேயே சுகாதாரம் மற்றும் மருத்துவ சிகிச்சையை அணுக உதவும்.
- இதன்மூலம் தொற்றா நோய்களுக்கு சிகிச்சை பெறுவதற்காக மருத்துவமனைகளுக்கு வருவது தவிர்க்கப்படுகிறது.
- இது வியாதிகள் மற்றும் நோய்களை விரைவாகக் கண்டறிய உதவுகிறது. இதன்மூலம் தேவைக்கேற்ப நோய்களை உடனடியாகக் குணப்படுத்த முடியும்.
- இந்தத் திட்டத்தின்மூலம் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு போன்ற நோய்களை ஆரம்பத்திலேயே கண்டறிய முடியும். சிறுநீரக நோய்களையும் கண்டறிய முடியும்.
- இந்தத் திட்டம், வீட்டு வாசலில் சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக, சுகாதாரப் பணியாளர்கள், செவிலியர்கள், இயன்முறை மருத்துவர்கள் போன்றவர்களின் ஒரு பொறிமுறையை உருவாக்கும்.
- இந்தத் திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக, 1,264 மகளிர் தன்னார்வலர்கள், 50 இயன்முறை மருத்துவர்கள் மற்றும் 50 செவிலியர்கள் ஆகியோர் ஏற்கனவே நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.
- அனைவருக்குமான 50சுகாதாரப் பாதுகாப்பு தொகுதிகளில், சுமார் 1172 சுகாதார துணை மையங்கள், 189 ஆரம்ப சுகாதார மையங்கள் மற்றும் 50 சமூக சுகாதார மையங்கள் உள்ளடக்கப்படும்.
- 2021ஆம் ஆண்டின் இறுதியில், இந்தத் திட்டம் மாநிலம் முழுவதிற்கும் விரிவுபடுத்தப்படும், சுமார் 25,000 சுகாதார மற்றும் ஆதரவு பணியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுவர்.
- தற்போது இந்தத் திட்டத்திற்காக ரூ.242 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- இந்தத் திட்டத்தின்கீழ், 30 இலட்சம் குடும்பங்களை உள்ளடக்கிய மொத்தம் 1 கோடி பேர் பயனடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- நோயாளிகளுக்கு வீட்டிலேயே சிகிச்சை அளிப்பதன் மூலம் உடல்நலம் மற்றும் மருத்துவ சேவையை வழங்குவதில் இது ஒரு முக்கியமான படியாகும். இதனால் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவது தவிர்க்கப்படுகிறது.
- இந்தத் திட்டம் மாநிலத்தில் சுகாதாரப் பாதுகாப்பு பொறிமுறையை ஊக்குவிப்பதாக அமையும்.

## 8. Tamilnadu Urban Employment Scheme.
**தமிழக நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டம்**

**முன்னுரை:**

நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தை மாநிலத்தில் முன்னோடி அடிப்படையில் செயல்படுத்த தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்தத் திட்டம் வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதன் மூலமும், பொதுச் சொத்துக்களை உருவாக்குதல்

மற்றும் பராமரிப்பதன்மூலமும் வாழ்வாதாரத்தையும் சமூகப் பாதுகாப்பையும் வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஒரு முன்னோடியாக, இந்தத் திட்டம் பெருநகர சென்னை மாநகராட்சியில் இரண்டு மண்டலங்களிலும், 14 மாநகராட்சிகளில் தலா ஒரு மண்டலத்திலும், ஏழு மண்டலங்களில் தலா ஒரு நகராட்சியிலும், 37 மாவட்டங்களில் தலா ஒரு ஊராட்சியிலும் 2021-22ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். 2021-22ஆம் ஆண்டில் முதற்கட்டமாக இந்தத் திட்டத்திற்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின்படி, இந்தத் திட்டத்தின்கீழ் மொத்த வேலை நாட்களில் 50 விழுக்காடு பெண்களுக்கு ஒதுக்கப்படும் என்று இந்த ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கும் ஆண்களுக்கும் திறமையான மற்றும் பகுதி திறமையான வேலைகளுக்கு ஏற்ப ஒரே ஊதியம் வழங்கப்படும். இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் சி. ரங்கராஜன் தலைமையிலான குழு பரிந்துரைத்ததன் அடிப்படையில் தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் அமைந்துள்ளது.

தமிழ்நாட்டில் நகர்ப்புற மக்கள் தொகை வேகமாக வளர்ந்து வருகிறது. அது 2036க்குள் மொத்த மக்கள் தொகையில் 60 விழுக்காட்டை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது மொத்தம் 4 கோடி பேர் இப்போது நகர்ப்புறங்களில் வசிக்கின்றனர். இது மொத்த மக்கள் தொகையில் 53 விழுக்காடு ஆகும்.

**பின்னணி:**

இது மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் அடிப்படையில் தமிழக அரசால் செயல்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டமாகும்.

இது நகர்ப்புற ஏழைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முனைகிறது.

**தேவை:**

மற்ற மாநிலங்களைப் போல் அல்லாமல், தமிழ்நாட்டில் நகர்ப்புற மக்கள் தொகை வேகமாக வளர்ந்து வருகிறது. இது 2036க்குள் மொத்த மக்கள் தொகையில் 60 விழுக்காட்டை எட்டும்.

மொத்த மக்கள் தொகையில் 53 விழுக்காட்டினர், அதாவது நான்கு கோடி மக்கள் தற்போது நகர்ப்புறங்களில் வாழ்கின்றனர்.

ஆனால், அவர்களில் பலர் கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக வேலையை இழந்துள்ளனர்.

**செயலாக்கம் மற்றும் முக்கிய அம்சங்கள்:**

இந்தத் திட்டத்தின்கீழ், தொழிலாளர்கள் நீர்நிலைகளை சுத்தம் செய்தல் மற்றும் பொது பூங்காக்கள் மற்றும் பிற இடங்களைப் பராமரித்தல் போன்ற வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுவார்கள்.

**முக்கிய நோக்கங்கள்:**

- திறமை தேவைப்படாத தொழில்களில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள விரும்பும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் 100 நாட்களுக்குக் குறையாத ஊரக வேலைவாய்ப்பு உருவாக்கம்.
- கிராமப்புற ஏழைகளின் வாழ்வாதார தளத்தை வலுப்படுத்துவதன்மூலம் அவர்களின் சமூக சேர்க்கையை தானாகவே உறுதி செய்தல்.
- கிராமப் புறங்களில் கிணறுகள், குளங்கள், சாலைகள் மற்றும் கால்வாய்கள் போன்ற நீடித்த சொத்துக்களை உருவாக்குதல்.
- கிராமப்புறங்களில் இருந்து மக்கள் நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்வதைக் குறைத்தல்
- பயன்படுத்தப்படாத கிராமப்புற தொழிலாளர்களின் உழைப்பைப் பயன்படுத்தி கிராமப்புற உள்கட்டமைப்பை உருவாக்குதல்.

## GEOGRAPHY / புவியியல்

### 1. Jal Jeevan Mission – Tamilnadu.
### ஜல் ஜீவன் திட்டம் - தமிழ்நாடு

ஜல்சக்தி அமைச்சகத்தின் தேசிய ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்கு முதல் தவணையாக ரூ.614.35 கோடியை மத்திய அரசு வழங்கியுள்ளது.

ஜல்சக்தி அமைச்சகத்தின் தேசிய ஜல் ஜீவன் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டுக்கு முதல் தவணையாக ரூ.614.35 கோடியை ஒன்றிய அரசு வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டுக்கு ஜல்ஜீவன் திட்டத்துக்கான ஒதுக்கீட்டை 4 மடங்கு உயர்த்த ஒப்புதல் அளித்துள்ள ஜல்சக்தி அமைச்சர் கஜேந்திர சிங், 2024ஆம் ஆண்டுக்குள் ஒவ்வொரு கிராம வீடுகளுக்கும் குடிநீர் குழாய் இணைப்பு வழங்க தமிழ்நாட்டிற்கு முழு உதவியும் அளிக்கப்டும் என உறுதி அளித்துள்ளார்.

**தமிழ்நாட்டில் குடிநீர் குழாய் இணைப்பு**

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 1.26 வீடுகளில், 40.36 லட்சம் வீடுகளுக்கு (31.80 விழுக்காடு) குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் தேதி இந்த திட்டம் தொடங்கியபோது, 21.65 லட்சம் (17.06 விழுக்காடு) வீடுகளுக்கு மட்டுமே குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டிருந்தது. தமிழ்நாட்டில் கடந்த 22 மாதங்களில் 18.70 லட்சம் (14.74 விழுக்காடு) வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இன்னும் 86.53 லட்சம் வீடுகள் குடிநீர் குழாய் இணைப்பு இல்லாமல் உள்ளன. இந்தாண்டில் 16.13 லட்சம் வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்படும். அடுத்த 3 ஆண்டுகளுக்குள் மீதமுள்ள வீடுகளுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவது மிகப் பெரிய பணியாக இருக்கும்.

**இதுவரை ஒதுக்கப்பட்ட தொகை**

2020-21ஆம் ஆண்டில் மத்திய அரசு வழங்கிய ரூ.921.99 கோடியில், தமிழ்நாடு ரூ.544.51 கோடியை மட்டும் பயன்படுத்தியது. ரூ.377.48 கோடியை திருப்பி அளித்தது. இந்தாண்டு 4 மடங்கு அதிகமாக ரூ.3,691 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. செலவழிக்காத நிலுவைத் தொகையாக ரூ.377.48 கோடி உள்ளது.

2020-21ஆம் ஆண்டில் மாநிலத்தின் பங்களிப்பு பற்றாக்குறையாக ரூ. 290.79 கோடி உள்ளது. 2021-22ஆம் ஆண்டில், ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் குடிநீர் குழாய் இணைப்பு வழங்க தமிழ்நாட்டுக்கு ரூ.8,428.17 கோடி உள்ளது. ஆகையால், கிராமங்களில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் தமிழ்நாடு அரசால் குடிநீர் குழாய் இணைப்பு வழங்க முடியும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

**கிராமங்களுக்கு முன்னுரிமை**

2021-22ஆம் ஆண்டில், 15வது நிதி ஆணையத்தின் மானியமாக ஊரக உள்ளாட்சி பகுதிகளில் குடிநீர் மற்றும் துப்புரவு பணிக்கு ரூ.1,600 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அடுத்த 5 ஆண்டுகளுக்கு ரூ.8,436 கோடி உறுதி அளிக்கப்பட்ட நிதி உள்ளது. தமிழ்நாடு கிராமப் பகுதிகளில் செய்யப்படும் இந்த மிகப் பெரிய முதலீடு புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கி, கிராம பொருளாதாரத்தை ஊக்குவிக்கும்.

தமிழ்நாட்டில் உள்ள கிராம பகுதிகள், பட்டியலின, பழங்குடியின மக்கள் அதிகம் உள்ள கிராமங்கள், தண்ணீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் குடிநீர் குழாய் இணைப்பு வழங்க படும்

## 2. Palmyra Development Mission.
**பனைமர சாகுபடி திட்டம்**

- பனை மேம்பாட்டு இயக்கத்திற்கு ரூ.3 கோடி நிதி; பனை வெல்லம் ரேஷன் கடையில் விற்க நடவடிக்கை! வேளாண் பட்ஜெட்டில் அறிவிப்பு.
- தமிழகத்தின் மாநில மரமான பனைமரங்களை காக்க பல்வேறு முக்கிய அறிவிப்புகள் அந்த பட்ஜெட்டில் இடம் பெற்றுள்ளன.
- பனைமரங்கள் வெட்டுவதை தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்
- பனை மரங்களை வேரோடுவெட்டி விற்பதை தடுக்க அரசால் உத்தரவு பிறப்பிக்கப்படும்.
- பனை மரங்களை வெட்ட மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற வேண்டியது கட்டாயம்.
- பனை ஆராய்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு பனை மேம்பாட்டு இயக்கத்திற்கு ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடு.
- மேலும் கிள்ளிக்குளம் வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பனை தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.
- ரேஷன் கடைகளில் பனை பொருட்கள், பனை வெல்லத்தை நியாய விலைக்கடைகள் மூலம் விநியோகிக்க நடவடிக்கைகள் .
- 30 மாவட்டங்களில் 76 லட்சம் பனை விதைகள் மற்றும் ஒரு லட்சம் பனங்கன்றுகளை முழு மானியத்தில் விநியோகம் செய்ய நடவடிக்கை.

## 3. Blue flag certification.
**நீலக்கொடி தரச்சான்றிதழ்**

தமிழ்நாட்டில் உள்ள கோவளம், புதுச்சேரியில் உள்ள ஈடன் கடற்கரைகளுக்கு உலகப் புகழ்பெற்ற நீலக்கொடி சான்றிதழ் கிடைத்துள்ளது.

தமிழக கடலோர பகுதி 1,076 கி.மீ., நீளம் உடையது. இதில் செங்கல்பட்டு மாவட்டம் கோவளம் கடற்கரைக்கு இந்தியாவின் ஒன்பதாவது நீலக்கொடி கடற்கரை சான்றிதழ் 21ம் தேதி வழங்கப்பட்டது

டென்மார்க் நாட்டைச் சேர்ந்த சுற்றுச்சூழல் அமைப்பு, உலக அளவில் பாதுகாப்பு, தூய்மையான கடற்கரைகளை தேர்ந்தெடுத்து 'நீலக்கொடி கடற்கரை' என்ற அங்கீகாரத்தை வழங்கி வருகிறது.

**நீலக்கொடி தரச்சான்றிதழ் பெற்ற பிற கடற்கரைகள்**

- ❖ சிவராஜ்பூர், குஜராத்
- ❖ கோக்லா, டாமன் மற்றும் டையூ
- ❖ கசர்கோடு, கர்நாடகம்
- ❖ பதுபித்ரி, கர்நாடகம்
- ❖ கப்படு, கேரளா
- ❖ ருஷிகொண்டா, ஆந்திரபிரதேசம்
- ❖ கோல்டன் கடற்கரை, ஒடிஷா
- ❖ ராதா நகர் கடற்கரை, அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள்

## 4. GI Tag – Tamilnadu.
**புவிசார் குறியீடு – தமிழ்நாடு**

ஓரிடத்தில், பாரம்பரியமாக உற்பத்தி செய்யப்படும் வேளாண் பொருட்கள், இயற்கை பொருட்கள், கைவினைப் பொருட்கள் போன்றவற்றுக்கு புவிசார் குறியீடு வழங்கப்படுகிறது. இது உற்பத்தி செய்யப்படும் இடத்தின் பெருமைக்கும், பொருட்களின் பாரம்பரியத்திற்கும், உயர்ந்த தரத்திற்கும் சான்றாக விளங்குகிறது.

மதுரை மல்லிகை, காஞ்சி பட்டு, பவானி ஜமக்காளம், நீலகிரி தேயிலை, தஞ்சை ஓவியங்கள், திண்டுக்கல் பூட்டு, ஈரோடு மஞ்சள், கொடைக்கானல் மலைபூண்டு, ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவா, காரைக்குடி கண்டாங்கி சேலை, பழனி பஞ்சாமிர்தம் ஆகியன புவிசார் குறியீடு அங்கீகாரம் பெற்று உள்ளன. மேலும் தமிழகத்தை சேர்ந்த பல பாரம்பரிய பொருட்களுக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.

**மதுரை மல்லிகை**: உலகளவில் தனித்துவம் வாய்ந்தது மதுரை மல்லிகை என்பதைக் குறிக்கும் வகையில், புவிசார் குறியீடு கிடைத்துள்ளது.

**திண்டுக்கல் பூட்டு:** திண்டுக்கல் என்றாலே முதலில் நம் நினைவுக்கு வருவது பூட்டு தான். குடிசை தொழிலாக தொடங்கப்பட்டு தற்போது திண்டுக்கல்லுக்கு அடையாளம் தந்து இருப்பது பூட்டு தொழில் தான்.

**காரைக்குடி கண்டாங்கி சேலை**: இந்தியாவிலேயே பாரம்பரிய, அடர் வண்ணங்களில் நெசவு செய்யப்படுவது செட்டிநாடு கண்டாங்கி சேலைதான். காரைக்குடி பகுதியில் இந்த சேலையை 700-க்கும் மேற்பட்ட நெசவாளர்கள் கைத்தறியாக நெசவு செய்து வருகின்றனர்..

**ஈரோடு மஞ்சள்**: தமிழகத்தின் பல பகுதிகளில் மஞ்சள் விளைவிக்கப்பட்டாலும், குச்சி போன்ற தோற்றத்தில், தனித்துவமான நிறத்துடன், நாசியைத் துளைக்கும் மணத்துடன்கூடிய ஈரோடு மஞ்சளுக்கு எப்போதும் தனி மவுசு உண்டு.

**பழனி பஞ்சாமிர்தம்:** வாழைப்பழம், வெல்லம், பசு நெய், தேன், ஏலக்காய், கற்கண்டு, பேரிச்சை உள்ளிட்டவை சேர்க்கப்பட்டு, பழனி முருகன் கோவிலில் பஞ்சாமிர்தம் தயாரிக்கப்படுகிறது..

**கொடைக்கானல் மலைப்பூண்டு:** கொடைக்கானல் மலைப்பகுதிகளில் விளைவிக்கப்படும் பூண்டு, மற்ற பூண்டுகளை போல் அல்லாமல் சாம்பல் நிறத்தில் காணப்படும். காரத்தன்மையும், மருத்துவ குணங்களும் அதிகம். இதனால் இந்த பூண்டுக்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ளது.

**ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவா**: சுவையும், தனித்துவமும் மாறாமல் இருக்கும் உலக புகழ் பெற்ற ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவாவிற்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து பெறப்படும் பசும்பால் மூலமாக மட்டுமே இதனை தயாரிக்கின்றனர்.

கன்னியாகுமரி மாவட்ட மலைப்பகுதிகளில் விளையும் கிராம்புக்கு `**கன்னியாகுமரி கிராம்பு**' என புவிசார் குறையீடு வழங்கப்பட்டுள்ளது.

இதுபோல் இன்னும் ஏராளமான தமிழக பொருட்களுக்கு புவிசார் குறியீட்டு கிடைத்துள்ளது. புவிசார் குறியீடு 10 ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும். அதன் பிறகு புதுப்பித்து கொள்ளலாம்.

## ECONOMICS / பொருளாதாரம்

### 1. Tamil Nadu White Paper.
**தமிழ்நாடு வெள்ளை அறிக்கை**

### மாநில அரசின் வெள்ளை அறிக்கை

- தமிழ்நாடு அரசின் நிதி நிலைமை குறித்த வெள்ளை அறிக்கையை நிதி அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் சட்டப் பேரவையில் வெளியிட்டார். “கடந்த 5 ஆண்டுகளில் 1.50 லட்சம் கோடி ரூபாய் வருவாய் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இந்தளவுக்கு சரியவில்லை“ என அமைச்சர் தெரிவித்தார். வெள்ளை அறிக்கையில் இடம்பெற்றுள்ள முக்கிய விவரங்கள்.

- தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலின் போது, “அரசின் நிதிநிலைமை குறித்த வெள்ளை அறிக்கை வெளியிடப்படும்“ என தி.மு.க தனது தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்தது. தேர்தல் முடிவுகளுக்குப் பிறகு தி.மு.க அரசு பொறுப்பேற்ற பிறகு, கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில தீவிர கவனம் செலுத்தியது. அதேநேரம், கடந்த சில வாரங்களாக நிதி நிலை குறித்த வெள்ளை அறிக்கையை தயாரிக்கும் பணியில் நிதித்துறை அதிகாரிகள் ஈடுபட்டிருந்தனர்.

**120 பக்க அறிக்கை :**

- இந்நிலையில், நாமக்கல் கவிஞர் மாளிகையில் நிதி நிலை தொடர்பான 120 பக்க வெள்ளை அறிக்கையை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் வெளியிட்டார்.

- அப்போது பேசிய அவர், “இது என் பெயரில் வெளியிடுகிற அறிக்கையே தவிர, இதற்கு பல வகைகளில் பலரும் வழிகாட்டியாக இருந்தனர். முதலமைச்சர் காட்டிய பாதையில் வெளிவந்த அறிக்கை இது. முதலமைச்சரும் அவரது செயலர்களும் பல திருத்தங்களை கூறியதன் அடிப்படையில் இந்த அறிக்கை வெளியாகியுள்ளது. இந்தப் பணிக்காக நிதித்துறை செயலர் கிருஷ்ணன், இணைச் செயலர், சிறப்புச் செயலர்கள் ஆகியோர் பல நாள்கள் முயற்சி எடுத்து உழைத்து இந்தத் தகவல்களைத் திரட்டியுள்ளனர். இதனை நாங்கள் வெளியிடுவதற்கு முன்பல மாநிலங்களின் வெள்ளை அறிக்கைகளை ஆய்வு செய்தோம். ஆந்திரா, பஞ்சாப் மட்டுமல்லாமல் 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதித்துறை அமைச்சராக இருந்த பொன்னையன் வெளியிட்ட அறிக்கையையும் ஆய்வு செய்தோம். அதையெல்லாம் பார்த்தால் இந்த அறிக்கையானது, இரண்டு வகைகளில் மாறுதல் உடையதாக உள்ளது. ஒன்று அனைத்து தகவல்களையும் சேர்த்து கூடுதல் விவரம் உள்ள அறிக்கையாகவும் இரண்டாவது, ஆந்திரா, பஞ்சாப் போன்ற மாநிலங்களில் உள்ள நிலவரத்தை உள்ளடக்கியதாக உள்ளது.

**அதிகரித்துள்ள தமிழ்நாட்டின் கடன்:**

- தமிழகத்தின் 2020 – 21 நிதி ஆண்டில் வருவாய் பற்றாக்குறை ரூ 61,320 கோடியாக உள்ளது. 2021 – 22 ஆம் ஆண்டின் இடைக்கால நிதிநிலை அறிக்கை கணக்கீட்டின்படி மாநிலத்தின் ஒட்டுமொத்த கடன் ரூ 5,70,189 கோடியாக உள்ளது. தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ 2,63,976 கடன் உள்ளது என்று வெள்ளை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 1999 – 2000 - ரூ 18,989 கோடி 2000 – 2001 - ரூ 28,685 கோடி 2001 – 2002 - ரூ 34,540 கோடி 2005 – 2006 ரூ 50,625 கோடி 2011 – 2012 - ரூ 1,03,999 கோடி 2015 – 2016 ரூ 2,11,483 கோடி 2017 – 2018 ரூ 3,14,366 கோடி 2020 – 2021 - ரூ 4,56,660 கோடி 2021 - ரூ 4,85,502 கோடி.

- நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு கொரோனா இரண்டாம் அலையைத் தடுப்பதில் நேரம் சென்றது. நமது பற்றாக்குறை எவ்வளவு அதிகம் என்று காண்பிப்பதற்கு இன்னும் நேரம் ஆகும் என்பதால் மாநில நிதி நிலை மற்றும் வரவு செலவு திருத்தப்பட்டதை மக்களிடம் முன்வைக்க வேண்டும் என்பதால் ”மேக்ரோ எக்கானமிக்“ அளவில் தயாரித்துள்ளோம்.

- இதில் என் பெயர் இருப்பதற்குக் காரணம். அதில் தவறு ஏற்பட்டால் நானே பொறுப்பு என்பதால் தான் இந்த அறிக்கையானது, எங்கள் தத்துவத்தையும் குணத்தையும் வெளிப்படுத்துவதற்காக வெளியிடப்படுகிறது. “எதிர்க்கட்சியாக இருந்தபோது கேட்டதை ஆளும் கட்சியாக வந்த பிறகு ஒளித்து வைக்காமல் வெளியிடுவதை எங்கள் அடையாளமாக இருக்க வேண்டும்” என முதலமைச்சர் கூறியிருக்கிறார். எனவே, வெள்ளை அறிக்கையை வெளியிடுகிறோம். அடுத்ததாக, தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டதால், அந்தக் கடமையை நிறைவேற்றுகிறோம்.

- வெளிப்படைத்தன்மையுடைய அரசாங்கமாகவும் மக்களின் ஒத்துழைப்பு மற்றும் கருத்துகளைப் பெற்ற பிறகு நிபுணர்களிடம் ஆலோசித்து அவர்களின் நிபுணத்தையும் உள்வாங்கிச் செயல்படுவது என்பது அரசின் கடமை. முறைகேடு என்ன, பாரம் என்ன என்பது தெரிந்தால்தான் ஒன்றாகச் சேர்த்து திருத்த முடியும் என்பதால் வெளியிடுகிறோம்.

**மாநிலத்தின் வருமானம் சரிவு:**

- இதில் முக்கியமான 3 பிரிவுகள் உள்ளன. நமது கடன் நிலை என்ன, வருமானம் எப்படியெல்லாம் மாறியுள்ளது. செலவினம் எப்படியெல்லாம் மாறியுள்ளது என்பது மிக முக்கியமானவை. பொதுத்துறை நிறுவனங்களான மின்வாரியம், போக்குவரத்துக் கழகம், குடிநீர் வடிகால் வாரியம், மெட்ரோ குடிநீர் வாரியம் போன்றவை எந்தநிலையில் உள்ளது என்பதையும் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

**வரி மற்றும் வருமானம்:**

- நாட்டின் வளர்ச்சி, வேலைவாய்ப்பின்மை, வருமானம் எப்படி மாறியுள்ளது என்பதைப் பார்த்தால் அதனை ஒரு பாடமாக எதை எடுத்து கொள்ளலாம். இது தொடர்பாக விரிவான விவரங்களை பட்ஜெட்தாக்கல் செய்யும்போது பார்க்கலாம். வருமானம் இல்லாத அரசாங்கத்தின் செலவுகளைக் குறைக்க முடியாது. நமது மாநிலத்தின் வருமானம் சரிந்துவிட்டது. இதைப் பற்றி சட்மன்றத்தில் பேசியுள்ளோம். இந்திய ரிசர்வ் வங்கி இதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. 15 ஆவது நிதிக்குழுவும் இதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது.

**வருவாய் பற்றாக்குறை 3.16 சதவீதம்:**

- ஆண்டுதோறும் வரும் இந்திய அரசின் தணிக்கை அறிக்கையில், எந்தளவுக்கு நிதிக்குழு நிதி ஒதுக்கியதோ, அந்த எதிர்ப்பார்ப்புக்கும் நடந்த சூழலுக்கும் இடையில் ஆண்டுதோறும் 55,000 கோடியில் இருந்து 70,000 கோடி வரையில் குறைவாக உள்ளது. தமிழ்நாட்டின் வருவாய் பற்றாக்குறை என்பது 3.16 சதவிகிதமாக உள்ளது கடந்த 2006-11 ஆம் ஆண்டு கருணாநிதி ஆட்சியில் உபரி வருமானமாக சில வருடங்களும் சில வருடங்கள் பற்றாக்குறையிலும் இருந்தது. குறிப்பாக கடைசி 2 வருடங்கள் பற்றாக்குறையில் இருந்தது. மொத்தமாக 5 ஆண்டுகால ஆட்சியைப் பார்த்தால் உபர் வருமானம் இருந்தது.

- அடுத்து வந்த ஜெயலலிதாவின் ஆட்சியில் ஓரளவுக்கு வருவாய் மேலாண்மை இருந்துள்ளது. ஆனால், அவருக்கு ஏற்பட்ட உடல்நலக் குறைவு, சிறைவாசம் போன்ற காரணங்களும் இருந்தன. அப்போது 17,000 கோடி அளவுக்கு வருவாய் பற்றாக்குறை இருந்தது. கடைசி ஐந்து வருடங்களில் பார்த்தால் 1 லட்சத்து 50,000 கோடி அளவுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. கடந்த 5 வருடத்தில் பொதுக்கடன் என்பது 3 லட்சம் கோடி ரூபாயாக இருந்துள்ளது. அதில் 50 சதவிகிதம் என்பது தினசரி செலவு என்ற அடிப்படையில் செலவழிக்கப்பட்டுள்ளது.

- ஒரு காலத்தில் ஊதியம், ஓய்வூதியம், வட்டி ஆகியவற்றுக்கு என வருமானம் வந்து கொண்டிருந்தது. அதேநேரம், கடனை வாங்கி கட்டாய செலவை செய்வதும் நடந்துள்ளது. இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் இந்தளவுக்கு செயல்படவில்லை. மகாராஷ்ட்ரா, குஜராத் போன்ற மாநிலங்களில் கொரோனா தொற்று நிதிநிலையில் சீர்கேடுகளை ஏற்படுத்தவில்லை. நாம் ஏற்கெனவே சரிந்திருந்ததால் அந்தளவுக்குத் தள்ளப்பட்டிருக்கிறோம்” என்றார்.

**13 மடங்காக உயர்ந்த கடன் அளவு:**

- இன்றைக்குள்ள சூழலில் 2 கோடியே 16 லட்சம் குடும்பங்கள் இருப்பதாக எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு குடும்பங்களின் தலையிலும் 2 லட்சத்து 63,976 ரூபாய் கடன் உள்ளது. இது பொது சந்தா கடன் மட்டுமே. தமிழ்நாட்டில் 2001 ஆம் ஆண்டு தி.மு.க.

ஆட்சிப் பொறுப்பில் இருந்து வெளியேறியபோது கடன் அளவு என்பது 34,540 கோடி ரூபாயாக இருந்தது. அதே ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு ஆகஸ்ட் 18 அன்று தாக்கல் செய்யப்பட்ட பட்ஜெட்டின் போது, நிதி நிலை தொடர்பான வெள்ளை அறிக்கை வெளியானது.

- தொடர்ந்து 2006 ஆம் ஆண்டு அதிமுக ஆட்சி முடியும் காலத்தில் கடன் அளவு என்பது 63.848 கோடியாக உயர்ந்தது. 2011- ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி நிறைவடையும் காலத்தில் கடன் அளவு என்பது 1.14 லட்சம் கோடியாக இருந்தது. அதன்பிறகு 2011-16 ஆம் ஆண்டுகளில் கடன் அளவு 2.28 லட்சம் கோடியாக அதிகரித்தது. 2016-ஆம் ஆண்டில் மீண்டும் அ.தி.மு.க ஆட்சியமைந்த பிறகு 2021 வரையில் கடன் அளவானது 4.85 லட்சம் கோடியாக அதிகரித்தது.

- 2021 – ஆம் ஆண்டு தொடக்கத்தில் இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டபோது கடன் அளவு 4 லட்சத்து 85 ஆயிரத்து 502 கோடியே 54 லட்சம் என அறிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு இறுதிக்குள் 5.70 லட்சம் கோடியா உயரும் எனவும் கூறப்பட்டது. நமது மாநிலத்தின் கடன் அளவு கடந்த 20 ஆண்டுகளில் 13 மடங்கு உயர்ந்துள்ளது" என்றார்.

## 2. Tamil Nadu Budget
**தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை**

# தமிழ்நாடு நிதிநிலை அறிக்கை – 2021 – 22

- தமிழ்நாடு அரசின் நிதி மற்றும் மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், 2021 – 22 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு – செலவுத் திட்டத்தை 2021-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13-ஆம் நாள் சட்டமன்ற பேரவை முன் வைத்து ஆற்றிய உரையின் முக்கிய அம்சங்கள்

- முதலமைச்சரின் வழிகாட்டுதலும் ஆலோசனைகளும் இந்த வரவு – செலவுத் திட்டத்தில் முத்திரை பதித்துள்ளன. முதலமைச்சர் தேர்தல் அறிக்கையில் பல்வேறு வாக்குறுதிகளை தந்துள்ளார். இந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இந்த அரசு கடமைப்பட்டுள்ளது. இந்த வாக்குறுதிகளின் அடிப்படையிலான தலைநிமிரும் தொலைநோக்கு திட்ட அறிக்கையில் உள்ள அம்சங்கள் இந்த வரவு செலவு திட்டத்தில் அரசுத் துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

- அரசின் இந்த சரிவை நிறுத்தி, நிதி நிலைமையை சீர்படுத்துவது மக்களுக்கு நாங்கள் அளித்த முக்கிய வாக்குறுதிகளில் ஒன்றாகும். ஒரே நேரத்திலோ அல்லது ஒரே ஆண்டிலோ செய்து முடிக்க இயலாத அளவிற்கு இப்பணி மிகக் கடினமாக உள்ளது. இதற்கு குறைந்த பட்சம் இரண்டு - மூன்று ஆண்டுகள் வரையிலும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

- வெளிப்படைத்தன்மை, சமூக ஈடுபாடு, வல்லுநர்களிடமிருந்து கருத்துரைகள் பெறுதல் மற்றும் உறுதியான நடவடிக்கை ஆகிய நான்கு முக்கிய கூறுகளுடன் கூடிய இந்த அரசு செயல்படும் முறையை முதலமைச்சர் தெளிவாக வகுத்துள்ளார். அதே சமயத்தில் தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்டுள்ள வாக்குறுதிகளுக்கு முன்னுரிமை அளித்து அவற்றை படிப்படியாக செயல்படுத்துவோம். முதலமைச்சர்

பதவியேற்ற நாளிலேயே முக்கியத்துவம் வாய்ந்த ஐந்து தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான உத்தரவுகளை பிறப்பித்தார்.

- தேர்தல் அறிக்கையில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளில் ஒன்று, தனியாக ஒரு வேளாண் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வதாகும். வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் முதல் வேளாண்மை நிதிநிலை அறிக்கையை நாளை தாக்கல் செய்வார் என இந்த அவைக்கு தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**உங்கள் தொகுதியில் முதலமைச்சர்:**

- இந்தத் திட்டத்தின் கீழ், மொத்தம் 4,57,645 மனுக்கள் பெறப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன. அனைத்து மனுக்களும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, உரிய சரிபார்த்தலுக்கு பின்னர் 2,29,216 குறைகளுக்கு நல்ல முறையில் தீர்வு காணப்பட்டுள்ளன என்பதை இந்த அவையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஒன்றிய – மாநில நிதி உறவுகள்:**

- பெட்ரோல் மற்றும் டீசல் மீதான வரி விதிப்பு முறையில் ஒன்றிய அரசால் கூட்டாட்சி மனப்பான்மையை நீர்த்துப்போகுமாறு மாற்றங்கள் செய்யப்படுகின்றன. பெட்ரோல் மீதான ஒட்டுமொத்த மீதான வரி 2014-ஆம் ஆண்டு மே மாதத்தில் 3.57 ரூபாயிலிருந்து இன்று 31.80 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அதேபோல், டீசல் மீதான வரி 2014-ஆம் ஆண்டு மே மாதத்தில் 3.57 ரூபாயிலிருந்து இன்று 31.80 ரூபாயாக உயர்த்தப்பட்டது.

- குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒன்றிய அரசால் விதிக்கப்பட்ட மேல்வரிகள், முழுமையாக அக்குறிப்பிட்ட நோக்கத்திற்காக பயன்படுத்தப்படவில்லை எனவும். குறிப்பிட்ட காலத்திற்கு விதிக்கப்படும் கூடுதல் வரிகள் காலவரையன்றி தொடர்கின்றன எனவும் இந்திய கணக்குத் தணிக்கைத் துறை தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

- கூட்டாட்சி நிதி வடிவம் ஒன்றை உருவாக்குவதற்காக வருவாய் மற்றும் விரிவிதிப்பு (சரக்கு மற்றும் சேவை வரி உள்பட) தொடர்புடைய புகழ்பெற்ற சட்ட, பொருளாதார வல்லுநர்கள் கொண்ட, ஆலோசனைக் குழுவை இந்த அரசு நிறுவும்.

- தரவுகளை மையமாக கொண்டுள்ள ஆளுமை தரவுகளை மையமாக கொண்டுள்ள நிர்வாக சீர்திருத்தங்கள் தொடர்பான பின்வரும் முக்கிய முயற்சிகளை செயல்படுத்துவதற்கு இந்த அரசு திட்டமிட்டுள்ளது.

- அனைத்து மக்கள் மற்றும் குடும்பங்களின் உண்மையான பொருளாதார நிலையை நன்கு அறிய, அனைத்து துறைகளிலுள்ள தரவுகளை ஒன்றிணைப்பதற்கான முயற்சி எடுக்கப்படும் எனவே மாநிலத்திலுள்ள அனைத்து பொது சேவைகளிலும் மின்னணு அளவீட்டு முறைகள் அறிமுகப்படுத்தப்படும்.

- கொள்முதல் செய்யும் அனைத்து துறைகளிலும் மின்னணு கொள் முதல் முறை (e-procurements) கண்டிப்பாக பின்பற்றப்படும். அரசு கொள்முதல் முறைகளில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசிற்கென, தனி மின்னணு கொள்முதல் வலைத்தளம் ஒன்று உருவாக்கப்படும்.

- திறனையும், வெளிப்படத்தன்மையும் மேம்படுத்துவதற்காக, திட்டமிடுதல், விலை விவர அட்டவணை புதுப்பித்தல், செத்தர விலை பட்டியலை புதுப்பித்தல், திட்ட வடிவமைப்பு, பணிகளின் மதிப்பீடுகள், ஒப்பந்த புள்ளிகள், பணிகளை அளவிடுதல் மற்றும் பணிப் பட்டியல்களுக்கு பணம் செலுத்துதல் உள்ளிட்ட அனைத்து தொழில்நுட்ப துறைகளின் நடைமுறைகளும் முழுமையாக கணினிமயமாக்கப்படும்.

**அரசு சொத்துக்கள் மற்றும் இடர் மேலாண்மை:**

- பொது நிலங்கள் குறித்த சிறப்பான மேலாண்மைக்கு, மேம்படுத்தப்பட்ட அரசு நில மேலாண்மை அமைப்பு ஒன்று உருவாக்கப்படும். அதில் அனைத்து அரசு நிலங்கள் தொடர்பான முழு விவரங்களும் உள்ளடங்கும்.

- வழக்கு இடர் மேலாண்மை அமைப்பு ஒன்று அமைக்கப்படும் அதன் மூலம், பொது நலன் திறம்பட பாதுகாக்கப்படுவதையும், அரசுக்கு வளங்கள் உடனுக்குடன் கிடைப்பதையும் உறுதி செய்யும் வகையில், விரிவிதிப்பு, நில விவகாரங்கள், பணியாளர் விவகாரங்கள் மற்றும் கொள்முதல் பிரச்சனைகள் தொடர்பான அனைத்து முக்கிய வழக்குகளும் முனைப்புடன் கண்காணிக்கப்படும். இந்த வழக்கு மேலாண்மை அமைப்பு, ஒய்வு பெற்ற நீதிபதிகள் மற்றும் மூத்த சட்ட வல்லுநர்களை கொண்ட அனுபவமிக்க குழுவால் கண்காணிக்கப்படும்.

- அதிக நம்பகத்தன்மை மற்றும் அதிகரிக்கப்பட்ட உற்பத்தித் திறன்.

- அரசின் உட்தணிக்கை அமைப்பு முறையில் அடிப்படை சீர்திருத்தம் மேற்கொள்ளப்படும். அனைத்து அரசுத் துறைகளிலும், முகமைகளிலும் உள் தணிக்கை செயல்பாடுகளை திறம்பட மேற்கொள்வதற்காக அரசில் செயல்படும் அனைத்து தணிக்கைத் துறைகளும் நிதித் துறையின் கீழ் கொண்டு வரப்பட்டு ஒருங்கிணைக்கப்படும்.

**சட்டமன்றத்தின் பங்கினை வலுவூட்டுதல்:**

- சட்டமன்றத்தின் நூற்றாண்டை குறிக்கும் வகையில், வரலாற்று சிறப்புமிக்க இந்த மன்றத்தில் 1921-ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்ற நிகழ்வுகள் குறித்த ஆவணங்கள் அனைத்தும் கணினிமயமாக்கப்படும்.

**தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு:**

- சென்னையில் உள்ள செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு புத்துயிர் அளிக்கப்படும். 2010 முதல் வழங்கபடாமலிருக்கும் கலைஞர் மு. கருணாநிதி செம்மொழி தமிழ் விருது. இனி ஒவ்வோராண்டும் ஜுன் மாதம் 3-ஆம் நாள் 10 லட்சம் ரூபாயுடன் வழங்கப்படும்.

- தலைமை செயலகம் முதல் மாநிலத்தின் அனைத்துத் துறை அலுவலகங்கள் வரையிலும், தமிழை ஆட்சி மொழியாக பயன்படுத்துவது வலுப்படுத்தப்படும்.

- உலக அளவில் போற்றப்படும் தமிழ்ப் படைப்புகள் வெவ்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்படும். தமிழ்நாட்டின் உயர்கல்வி மாணவர்கள் பயன்பெறும் வகையில், பல்வேறு தொழில்நுட்ப புத்தகங்கள் தமிழில் வெளியிடப்படும்.

- இந்த நிதியாண்டில் தமிழல்நாட்டில் தொல்லியல் ஆய்வுகளை அறிவியல் முறைப்படி மேற்கொள்ள, நாட்டில் வேறு எந்த மாநிலத்தை விடவும் அதிக அளவாக, 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும். கீழடி, சிவகளை, கொடுமணல் ஆகிய பகுதிகளில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட இடங்கள் பாதுகாக்கப்பட்ட தொல்லியல் தளங்களாக அறிவிக்கப்படும்.

- தேசிய கடல்சார் நிறுவனம், தேசிய கடல் தொழில் நுட்பவியல் நிறுவனம் மற்றும் இந்திய கடல்சார் பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்களோடு இணைந்து, முதற்கட்டமாக சங்ககால துறைமுகங்கள் அமைந்திருந்த கொற்கை மற்றும் அழகன்குளம் பகுதிகளில் ஆழ்கடல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

**சமூக பாதுகாப்பு ஓய்வூதியங்கள்:**

- முதியோர் ஓய்வூதியத் திட்டம் முழுமையாக சீரமைக்கப்பட்டு, அனைத்துத் தகுதிவாய்ந்த நபர்களும் விடுதன்றி பயன்பெறுவதை இந்த அரசு உறுதி செய்யும். மாநிலத்திலுள்ள மக்களுக்கு சமூகப்பாதுகாப்பிற்கான வழிவகைகளை ஏற்படுத்துவதில் முன்னணி நிலையை தமிழ்நாடு மீண்டும் பெறும் வகையில் இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும், சமூக பாதுகாப்பு ஓய்வூதியங்களுக்கு 4807.56 கோடி ரூபாய் என உயர்தப்பட்டது.

**நில மேலாண்மை:**

- நிலம் தொடர்பான பிரச்சனைகளை குறைப்பதற்காக, துல்லியமாக புவியிடங்காட்டி (D – GPS) மற்றும் ஏனைய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி மாநிலம் முழுவதிலும் நவீன நில ஆய்வை இந்த அரசு மேற்கொள்ளும்.

- இந்த நோக்கத்திற்காக, நில நிர்வாக ஆணையாளரின் தலைமையின் கீழ் தமிழ்நாடு சிறப்பு சமூகத் தாக்க மதிப்பீடு – மறுவாழ்வு மற்றும் குடியமர்வு பிரிவு ஒன்று உருவாக்கப்படும்.

**பேரிடர் மேலாண்மை:**

- மாநில பேரிடர் நிவாரண மற்றும் தணிப்பு நிதியை அதிகரிக்கவும், தேசிய பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தமிழ்நாட்டிற்கு கூடுதல் தொகையை விடுவிக்கவும் வேண்டுமென ஒன்றிய அரசை நாம் வலியுறுத்துவோம்.

**காவல் துறை:**

- காவல்துறையில் ஒப்பளிக்கப்பட்ட 1,33,198 பணியிடங்களில், மீதமுள்ள 14,317 காலிப் பணியிடங்களை நிரப்ப உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். பெரும் குற்றங்களில், குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்ள், இணையவழிக் குற்றங்ளக், பொருளாதார குற்றங்களுக்கு உரிய தண்டனைகள் பெற்றுத்தரும் வகையில் விரைவாக விசாரணைகள் மேற்கொள்வதில் சிறப்பு கவனம் செலுத்தப்படும்.

**தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறை:**

- தற்போதுள்ள 1985-ஆம் ஆண்டு தீயணைப்புச் சேவைகள் சட்டம் முழுமையாக மாற்றியமைக்கப்படும்.

**சாலை பாதுகாப்பு:**

- ஒருங்கிணைந்த சாலைப் பாதுகாப்பு இயக்கம் மாற்றியமைக்கப்படும். மேலும், போக்குவரத்து ஆணையரகம், போக்குவரத்து மற்றும் சாலைப் பாதுகாப்பு ஆணையரகம் என பெயர் கதவணைகளும் கட்டப்படும்.

- மேட்டூர், அமராவதி, வைகை, பேச்சிப்பாறை போன்ற முக்கிய அணைகளின் நீர்த்தேக்க கொள்ளவை மீண்டும் பழைய நிலைக்கு உயர்த்த, தேவையான திட்டங்களை இந்த அரசு வகுக்கும்.

- நவீன தொழில் நுட்பங்களான ஆளில்லா விமானங்களின் மூலம் ஆய்வு, தமிழ்நாடு நீர்வள தகவல் மற்றும் மேலாண்மை அமைப்பு, மொத்தம் 30 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

- மீன்வளம் 2021 – 22 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு – செலவுத் திட்ட மதிப்பீடுகளில் மீன்பிடி துறைமுகங்கள் மற்றும் மீன் இறங்கு தளங்களை அமைக்க மொத்தம் 433.97 கோடி ரூபாயும், மீன் இறங்கு தளங்களை மேம்படுத்த 143.46 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றம்:**

- தமிழ்நாட்டின் காடு மற்றும் மரங்களின் அடர்த்தியை மாநிலத்தின் நிலப்பரப்பில் 33 சதவீதமாக உயர்த்துவதற்காக, தமிழ்நாடு பசுமை இயக்கத்தை அரசு ஏற்படுத்தவுள்ளது. தமிழ்நாடு பசுமை இயக்கத்தின் கீழ், பல்வேறு துறைகள், பொது மற்றும் தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்புடனும், மக்களின் முழு அளவிலான பங்களிப்புடனும், பலதரப்பட்ட நம் மணசார்ந்த மரங்களை நடுவதற்கு பெரும் மரம் நடவுத் திட்டம் ஒன்று அடுத்த 10 ஆண்டு காலத்தில் செயல்படுத்தப்படும்.
- பருவநிலை மாற்ற மேலாண்மை மற்றும் தணிப்பு நடவடிக்கைககளில் கவனம் செலுத்துவதற்காக, முதலமைச்சரின் தலைமையின் கீழ், இந்தஅரசு மொத்த 500 கோடி ரூபாய் செலவில் பருவநிலை மாற்ற இயக்கம் ஒன்றினை அமைக்கும்.

- ஆளில்லா விமானங்கள், செயற்கை நுண்ணறிவு, தகவல் மேலாண்மை அமைப்புகள் (MIS), நவீன ஆயுதங்கள் மற்றும் வள நிலப்பரப்பிற்கேற்ற வாகனங்கள் உள்ளிட்ட நவீன கருவிகளுடன் வனப்படையை நவீனப்படுத்துவதற்கு சிறப்பு கவனம் செலுத்தப்படும்.

- அடுத்த 5 ஆண்டுகளில், சர்வதேச நீலக்கொடி சான்றிதழை பெறுவதற்காக உள்ளாட்சி அமைப்புகளின் ஆதரவுடன் 10 கடற்கரைகள் மேம்படுத்தப்படும்.

- இந்தியாவின் முதல் ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் கண்காணிப்பு மையம் ஒன்று தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தால் நிறுவப்படும்.

**கட்டுமானத் தொழில்நுட்பங்கள்:**

- திட்ட மதிப்பீடு, ஒப்பந்தப்புள்ளி, திட்ட மேற்பார்வை, கண்காணிப்பு மற்றும் பட்டியலிடும் நடைமுறைகள் இவையனைத்தும் ஓராண்டுக்குள்ளாக முழுமையாக மின்னணுமயமாக்கப்படும்.

**ஊரக வளர்ச்சி:**

- மாநிலத்திலுள்ள அனைத்து 79,395 குக்கிராமங்களுக்கும் ஒரு நாளைக்கு குறைந்தபட்சம் ஒரு நபருக்கு 55 லிட்டர் தரமான குடிநீர் வழங்க வழிவகை செய்யப்படும். கிராமப்புறங்களில் அமைந்துள்ள 1.27 கோடி குடும்பங்களுக்கும் வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்க வழிவகை செய்யப்படும். தற்போது வீட்டிற்கான குடிநீர் இணைப்பு இல்லாத 83.92 லட்சம் குடும்பங்களுக்கும் 2024-ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதிக்குள்ளாக குடிநீர் இணைப்பு வசதிகள் வழங்க வழிவகை செய்யப்படும். இந்த நோக்கத்தை நிறைவேற்ற 2,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜல் ஜீவன் இயக்கம் செயல்படுத்தப்படும்.

- முழுமையாடாத அனைத்து வீடுகளும் விரைந்து முடிக்கப்படுவதை இந்த அரசு உறுதி செய்வதுடன், 2021 – 22 ஆம் ஆண்டில் மொத்தம் 8,071.41 கோடி ரூபாய் செலவில், மேலும் 2,89,877 வீடுகள் கட்டப்படும். கிராமப்புறங்களில் தற்போது வீடு இல்லாத 8,03,924 குடும்பங்களுக்கும் அடுத்த 5 ஆண்டுகளில் வீடு வழங்கப்படுவதை இந்த அரசு உறுதி செய்யும் தற்போதுள்ள மேற்கூரைக்கான செலவான 50 ஆயிரம் ரூபாயுடன், கூடுதலாக மாநில அரசின் தரப்பிலிருந்து 70 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுவதால், ஒரு வீட்டிற்கான அரசு மானியம் 2.76 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மிகவும் ஏழை, எளிய பயனாளர்களுக்கு விரைவாக, விலைக் குறைவாக வீடுகள் கட்டுவதற்காக, நவீன, விலை குறைவான கட்டுமான தொழில் நுட்பங்களை இந்த அரசு ஊக்குவிக்கும் 2021 – 22 ஆம் ஆண்டிற்கான தருத்த வரவு செலவுத்திட்டம மதிப்பீட்டில் கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தில், 3,548 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

- சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கான நிதி நடப்பு ஆண்டிலிருந்து ஒரு தொகுதிக்கு 3 கோடி ரூபாயாக மீண்டும் அளிக்கப்படும்.

- இந்த அரசு 2021 – 22 ஆம் ஆண்டில் 1,200 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தை தொடங்கவுள்ளது. இத்திட்டம், குக்கிராம அளவில் நிலவும் அடிப்படை உட்கட்டமைப்பிற்கான இடைவெளிகளை நிறைவு செய்வதை உறுதி செய்யும்.

- மறைந்த முதலமைச்சர் கலைஞர் அறிமுகப்படுத்திய மிகப் புகழ்பெற்ற திட்டம் நமக்கு நாமே திட்டம். இத்திட்டம், உள்ளூர் சமூகங்களுடன் இணைந்து உள்ளூரின் முக்கியமானப் பணிகளை மேற்கொள்ள மீண்டும் அறிமுகப்படுத்தப்படும். 2021 – 22 ஆம் ஆண்டில் இடத்திட்டத்திற்காக 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டம் புதுப்பிக்கப்பட்டு 36,218 சுய உதவிக்குழுக்கள் பயன்பெறும் வகையில் 809.79 கோடி ரூபாய் செலவில் 2021 – 22 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும். நடப்பாண்டில் தமிழ்நாட்டில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிகளின் உதவியுடன் 5,500 கோடி ரூபாய் சிறப்பு கோவிட் கடன் உட்பட 20,00) கோடி ரூபாய் கடன் உறுதி செய்யப்படும்.

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை:**

- ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகை கொண்ட 27 நகரங்களில் பாதாள சாக்கடை திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

- குப்பைகள் உருவாகும் நிலையிலேயே 100 சதவிகிதப் பிரித்தலை உறுதி செய்வதன் வாயிலாகவும், வீடுகள்தோறும் குப்பைகள் சேகரித்தல் மற்றும் 100 சதவிகிதம் அகற்றுவதன் வாயிலாகவும் நாம் குப்பை இல்லா நகரங்களை உருவாக்குவோம்.

- நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள மண் சாலைகள் அனைத்தும் தரம் உயர்த்தப்படும். அனைத்து நகர்புறங்களிலும் பாதசாரிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் எளிதில் பயன்படுத்தத்தக்க நடைபாதைகள் அமைக்கப்படும்.

- நமக்கு நாமே திட்டத்தில் இதுபோன்ற பணிகளில் கணிசமாக பங்களிப்பவர்களுக்கு ஒவ்வோராண்டும் முதலமைச்சரின் சிறப்பு விருது வழங்கப்படும். இத்திட்டத்திற்காக, 300 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மக்கள் சேவையில் மாநகராட்சி மற்றும் நமது சேவையில் நகராட்சித் திட்டங்கள் மூலமாக அனைவருக்கும் இணையவழி சேவைகளை வழங்குவது உறுதி செய்யப்படும்.

- திருச்சிராப்பள்ளியில் புதியதாக ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் மற்றும் வணி வளாகம் TUFIDCO நிதியுதவியுடன் ஏற்படுத்தப்படும்.

- தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் நோக்கத்தில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் என்ற புதிய திட்டத்திற்கு ரூபாய் 1,000 கோடி மதிப்பீட்டில் இந்த அரசு 2021 – 22 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்த உள்ளது.

- 2021 – 22 க்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளில், சீர்மிகு நகரங்கள் திட்டத்திற்கு 2,350 கோடி ரூபாயும், அம்ரூத் திட்டத்திற்கு 1,450 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- ஆசிய மேம்பாட்டு வங்கியின் உதவியுடன் கொசஸ்தனை ஆற்றுப்படுகையில் ஒருங்கிணைந்த வெள்ள நீர் வடிகால் அமைப்பு ஏற்படுத்தப்படும். இதற்கென 2021 – 22 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் 87 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

- சென்னையின் ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் இணைப்பு அளிக்கப்பட்டு, சுத்தமான மற்றும் பசுமையான சென்னைக்கு முக்கியத்துவம் அளித்து சிங்கார சென்னை 20 தொடங்கப்படும்.

- சென்னை நகரில் 3 இடங்களில் அதாவது கணேசபுரம் சுரங்கப்பாதையின் மேல், கொன்னூர் நெடுஞ்சாலை - ஸ்ட்ராண்ஸ் சாலை மற்றும் தெற்கு உஸ்மான் சாலையில் 335 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மேம்பாலங்கள் கட்டப்படும். இதற்கென 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

- சென்னை நகரத்துடன் இணைக்கப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் மொத்தம் 2,056 கோடி ரூபாய் செலவில் பாதாள சாக்கடைதிட்டம் ஏற்படுத்தப்படும். சென்னையில் உள்ள நீர்வழிகளில் கழிவுநீர் கலப்பதை தடுக்கும் திட்டம் மொத்தம் 2,371 கோடி

ரூபாய் செலவில் தீவிரமாக செயல்படுத்தப்படும். ஆந்திர பிரதேசத்திலிருந்து குழாய் வழியாக கிருஷ்ணா நீரை சென்னை நீர்த்தேக்கங்களுக்கு கொண்டு வருவதற்கான சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கப்படும்.

**சென்னை நகரக் கூட்டாண்மை:**

- சென்னை நகரக் கூட்டாண்மை திட்டம் விரைவில் உலக வங்கி மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் நிதியுதவியுடன் தொடங்கப்படும்.

**நகர்ப்புற ஊதிய வேலைவாய்ப்பு:**

- அதன்படி, பூங்காக்கள், விளையாட்டு திடல்கள், வெள்ள நீர் வடிகால்கள், சாலைகள், கட்டடங்கள் போல் பொதுச் சொத்துகளை கட்டமைத்தல் மற்றும் பராமரித்தல் ஆகிய பணிகளிலும் நீர்நிலைகளை புதுப்பித்தல் போன்றவற்றிலும் நகர்ப்புற ஏழைகளை ஈடுபடுத்துவதன் மூலம் பயன்தரும் வேலைவாய்ப்பை ஏற்படுத்தல் மற்றும் ஒரு முன்னோடி திட்டமாக இந்த அரசு ஒரு நகர்புற ஊதிய வேலைவாய்ப்பு திட்டத்தை ஏற்படுத்தும்.

**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி:**

- தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு வீட்டுவசதி வாரியச் சட்டம், தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு குடிசைப்பகுதி மேம்பாடு மற்றும் அகற்றுதல் சட்டம், தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு நகர்மற்றும் ஊரமைப்புச் சட்டம் மற்றும் தமிழ்நாடு 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு அடுக்குமாடி குடியிருப்பு உரிமையாளர்கள் சட்டம் உள்ளிட்ட வீட்டுவசதித் துறையின் பழைய சட்டங்கள் மறு ஆய்வு செய்யப்படும் மேற்சொன்னவாறு, பெருந்திட்டங்களின் கீழுள்ள நிலப்பரப்பு 22 சதவீதமாக உயர்த்தப்படுவதை இந்த அரசு உதவி செய்யும்.

- புதிய பெருநகர வளர்ச்சிக்கு குழுமங்கள், மதுரை, கோயம்புத்தூர் - திருப்பூர் பகுதி, வேகமாக வளர்ந்து வரும் ஓசூர் பகுதிக்கு ஏற்படுத்தப்படும்.

- மேலும் 10 ஆண்டு காலத்திற்குள், தமிழ்நாடு முற்றிலுமாக குடிசைகளற்ற மாநிலமாக விளங்க வேண்டும்மென்பதில் இந்த அரசு உறுதியாக உள்ளது.

- தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்திற்காக 3,954.44 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

- நீர்நிலைகள் உட்பட ஆட்சேபணையுள்ள புறம்போக்கு நிலங்களிலிருந்து, குடிசையில் வாழும் மக்களை மனிதாபிமானத்துடன் நியாயமான முறையில் மறுகுடியமர்த்துவதற்காக, அனைத்து பொறுப்பாளர்களுடன் கலந்தாலோசித்து ஒரு புதிய குடிசை மறுகுடியமர்வு மற்றும் புனர்வாழ்வுக் கொள்கை வகுக்கப்படும்.

- முதலீட்டுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம் ஆகிய நிறுவனங்களின் நிதி மறுசீரமைப்பு விரிவாக ஆய்வு செய்யப்படும். அந்த அறிக்கையின் மீது அரசு விரைந்து செயல்பட்டு மின் வாரியத்தின் கழக நிறுவனங்கள் நொடித்து போவதிலிருந்து காப்பாற்ற நடவடிக்கை எடுக்கும்.

- அடுத்த 10 ஆண்டுகளில், சொந்த மின் உற்பத்தி நிலையங்களின் வாயிலாக, மாநிலத்தின் 17,980 மெகாவாட் மொத்த மின் உற்பத்தி திறன் கூடுதலாக சேர்க்கப்படும்.

- வேளாண்மைக்கான இலவச மின்சாரம் மற்றும் வீட்டிற்கான மின்சாரம் வழங்குவதற்கான மானியங்களுக்காகவும் தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மான கழகத்தின் இழப்புகளுக்கு நிதி வழங்கவும் 19,872.77 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாநிலக் கல்விக் கொள்கை:**

- தமிழ்நாட்டின் வரலாற்று மரபு, தற்போதைய நிலைமை, எதிர்காலக் குறிக்கோள்களுக்கு ஏற்ப மாநிலத்திற்கெனத் தனித்துவமான மாநிலக் கல்விக் கொள்கை ஒன்றை வகுப்பதற்கு, கல்வியாளர்கள் மற்றும் வல்லுனர்களை கொண்ட உயர் மட்டக் குழு ஒன்றை இந்த அரசு நியமிக்கும்.

**பள்ளிக்கல்வி:**

- பள்ளிக்கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் விதமாக இந்த வரவு – செலவுத்திட்டத்தில் மொத்தமாக 32,599.54 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.
- தேசிய அடைவ ஆய்வு கண்கெடுப்பின் படி, கற்றல் விளைவுகளின் அடிப்படையில் முதல் மூன்று மாநிலங்களுக்குள் தமிழ்நாடு கொண்டு வரப்படுவதை அரசு உறுதி செய்யும்.

- அனைத்து ஆசிரியர்களுக்கும் தொழில் நுட்ப வசதியுடன் கண்காணிக்கக்கூடிய மற்றும் ஆதாரங்கள் அடிப்படையிலான பயிற்சி வழங்க ஏதுவாக 413 கல்வி ஒன்றியங்களுக்கும் தலா 40 தொடுதிரை கையடக்க கணினிகள் 13.22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

- 2025-ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டில் உள்ள 8 வயதிற்குட்பட்ட அனைத்து மாணவர்களும் அந்தந்த வகுப்பு அளவில் படிக்கவும், எழுதவும், அடிப்படைக் கணக்குகளை செய்யவும் முடியும் என்பதை உறுதி செய்வதற்காக, அடிப்படை கல்வியறிவு மற்றும் கணித அறிவை உறுதி செய்ய எண்ணும் எழுத்தும் இயக்கம், 66.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தீவிரமாக செயல்படுத்தப்படும்.

- அரசுப்பள்ளி மாணவர்கள் கணினித் திறன்களை இளம் வயதிலேயே பெறுவதை உறுதிசெய்ய 1,784 அரசு நடுநிலைப் பள்ளிகளில் 114.18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் ஏற்படுத்தப்படும். மேலும், 865 உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 2076 கோடி ரூபாயில் ஸ்மார்ட் வகுப்பறைகள் துவக்கப்படும்.
- அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி கவின்திறன் மற்றும் விளையாட்டில் சிறந்து விளங்குவதற்கான வாய்ப்பை அளிக்கும் நோக்கத்துடன், மாதிரிப் பள்ளிகள் அமைத்திட, சிறப்பு திட்டம் செயல்படுத்தப்படும்.

- கொரோனா பெருந்தொற்றின் பரவல் காரணமாக ஏற்பட்டுள்ள கற்றல் இழப்புகளை குறைப்பதே இந்த அரசின் உடனடி முன்னுரிமையாக இருக்கும்.

- பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட்டு விரைவாக செயல்படும் வகையில் அனைத்து ஆசிரியர்களுக்கும் தேவையான கொரோனா தொடர்பாக கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளுக்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது மற்றும் அனைவருக்கும் தடுப்பூசி வழங்கவும், நடவடிக்கை எடுக்கப்படும் கற்றலில் ஏற்பட்ட இழப்புகளை சரிசெய்வதற்காக பள்ளி நேரங்களை தவிர பள்ளி வளாகங்களுக்கு வெளியே குறைதீர் கற்றல் வழங்குவதற்கான விரிவானத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

**உயர்கல்வி:**

- இந்த ஆண்டு புதிதாக 10 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்படும். மேலும் தரத்தை மேம்படுத்தி, அதிகளவிலான கல்வி நிறுவனங்கள் தேசிய மதிப்பீடு மற்றும் தரசான்றுக் குழுவின் தரநிலையை அடைவதற்கு அரசு முன்னெடுப்புகளை மேற்கொள்ளும்.

- அதிக எண்ணிக்கையிலான காலி பணியிடங்கள், குறிப்பாக, ஆசிரியர் பணியிடங்கள் முன்னுரிமை அடிப்படையில் நிரப்பப்டும்.

- 25 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஸ்மார்ட் வகுப்பறைகள் ஆரம்பிக்கப்படும். மேலும் 4 அரசு பொறியியல் கல்லூரிகளில் கூடுதலாக மாணவர் விடுதிகள் கட்டப்படும்.

- ராஜா முத்தையா மருத்துவக் கல்லூரியை கடலூர் மாவட்டத்திற்கான அரசு மருத்துவக் கல்லூரியாக ஆணை பிறப்பித்ததும், அண்ணாமலை பல்கலைக்கழகத்தை கடலூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, மயிலாடு துறை மாவட்டங்களுக்கான இணைவு வழங்கும பல்கலைக்கழகமாக ஆணை பிறப்பித்ததும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சந்தித்து வரும் நிதி நெருக்கடியை சமாளிக்க ஏதுவாக இருக்கும்.

- மற்றுமொரு புதிய முன்மாதிரி முயற்சியாக, ஆளில்லா விமானங்களுக்கென தமிழ்நாடு ஆளில்லா விமானக் கழகம். அண்ணா பல்கலைக்கழக சென்னை தொழில்நுட்ப நிறுவனத்துடன் இணைந்து துவக்கப்படும்.

**மருத்துவம் மற்றும் குடும்ப நலம்:**

- நோய்த் தொற்றைத் தடுக்க தடுப்பூசி போடுவது மிகவும் அவசியமாகும். நாள்தோறும் 8 லட்சம் பேருக்குத் தடுப்பூசி போடும் திறன் பெற்றிருந்தும், 2.4 லட்சம் அளவில மட்டுமே தடுப்பூசி வரப்பெறுகிறது. தமிழ்நாட்டு மக்களுக்கு போதுமான அளவில் தடுப்பூசி வழங்கவேண்டிய தேவையை முதலமைச்சர், பிரதமரின் கவனத்திற்கு அடிக்கடி எடுத்துச் சென்றார்.

- முதலமைச்சரால் மக்களைத் தேடி மருத்துவம் எனும் மகத்தான முன்மாதிரித் திட்டம் உருவாக்கப்பட்டு மொத்தம் 257.16 கோடி ரூபாய் செலவில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

- கலைஞர், அனைவரின் பாராட்டையும் பெற்ற 108 இலவச ஆம்புலன்ஸ் சேவைகள் திட்டத்தை 15.09.2008 அன்று தொடங்கி வைத்தார். இலவச ஆம்புலன்ஸ்களின் எண்ணிக்கையானது 1,303 ஆக உயர்த்தப்பட்டு, சேவைகளின் தரம் மேலும் மேம்படுத்தப்படும்.

- 23.7.2009 அன்று தொடங்கப்பட்ட கலைஞர் காப்பீட்டுத் திட்டம் தொடர்ந்து முலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டு திட்டம் என்ற பெயரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தனியார் மருத்துவ நிறுவனங்களிலுள்ள சிறந்த மருத்துவ வசதிகள் ஏழை மக்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்தும் வண்ணம், கோவிட் பெருந்தொற்று காலத்தின் போது இத்திட்டடத்தின் கீழ் பயன்பெறும் நோய்களும். சிகிச்சை முறைகளும் இந்த அரசால் விரிவுப்படுத்தப்பட்டன.

- கலைஞர், தமிழ்நாடு சித்தா பல்கலைக்கழகத்தை அமைத்திட திட்டமிட்டார். அதற்கென, உரிய நிலமும் கண்டறியப்பட்டது. அதற்கு பின், இத்திட்டத்தை செயல்படுத்தவில்லை. மற்ற உள்நாட்டு மருத்துவ முறைகளை போல் சித்தாவிற்கும் உரிய அங்கீகாரம் அளிக்கும் விதமாக, தமிழ்நாடு சித்தா பல்கலைக்கழகத்தை இந்த அரசு அமைத்திடும். இதற்கென, முதல்கட்ட நிதியுதவியாக 2 கோடி ரூபாய் வழங்கப்படும்.

**தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு:**

- அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியத்திற்கு மானியங்களை வழங்குவதற்காக, 21564 கோடி ரூபாய் ஒதுக்கீட செய்யப்பட்டுள்ளது.

- தொழில் நிறுவங்களுடன் ஒருங்கிணைந்து, தொழிற்பேட்டையில் அமைந்துள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் தொழில் 40 எனும் நவீன தரத்திற்கு உயர் உற்பத்தி தொழில் நுட்பங்கள் மற்றும் திறன் மேம்பாடு பயிற்சி இளைஞர்களுக்கு வழங்கப்படும். நெய்வேலி நிலக்கரி நிறுவனத்துடன் இணைந்து புதிய தொழிற்பயிற்சி நிலையம் ஒன்று நெய்வேலியில் அமைக்கப்படும். தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வாயிலாக, தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் தொழிற்சாலைகளில் திறம்பட வேலை செய்வதை உறுதி செய்வதற்காக, எதிர்கால வேலைவாய்ப்புக்கான திறன் பயிற்சியினை, தெரிவு செய்யப்பட்ட 15 அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் வழங்க 60 கோடி ரூபாய் செலவில் திறன் மேம்பாட்டு மையங்கள் அமைக்கப்படும்.

**தொழில்கள்:**

- ஒற்றை சாளர அமைப்புமுறை திறம்பட செயல்படுத்தப்பட்டு, அதன் கீழ் 2021ஆம் ஆண்டு ஜுலை மாதத்தில் மேலும் 100 சேவைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. 2022ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மேலும் 110 சேவைகளும் ஒற்றை சாளர வலைவாசலின் கீழ் கொண்டு வரப்படும்
- வளர்ந்து வரும் துறைகளில் தமிழ்நாட்டின் பங்கை வலுப்படுத்துவதற்காக உயிரியல் அறிவியல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, உற்பத்தி ஆகியவற்றிற்கான புதிய தொழில் கொள்கைகள் விரைவில் அறிவிக்கப்படும். அதிக அளவிலான முதலீடுகளை ஊக்குவிக்க புலம்பெயர் தமிழர்களுடனான உறவு வலுப்படுத்தப்படும். முதலீட்டாளர்களின் முதல் சார்ந்த முடிவுகளுக்கு ஆதரவு அளிப்பதற்காகவும், சிறப்பாக திட்டமிடுவதற்காகவும் மாநிலத்தில் உள்ள தொழிற்சாலைகளை பற்றி விவரமான, துல்லியமான தரவுதளம் உருவாக்கப்படும்.
- தமிழ்நாட்டில் உள்ள தொழில்துறையில் பின்தங்கிய மாவட்டங்களை மையமாக கொண்டு அடுத்த 5 ஆண்டுகளில் மொத்தம் 45,000 ஏக்கர் அளவிலான நில வங்கித் தொகுப்புகள் உருவாக்கப்படும்.
- தூத்துக்குடி மாவட்டத்தில் 4,5000 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்க்கும் விதமாகவும், 3.5 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை வழங்குமாறும் 1300 ஏக்கர் நிலப்பரப்பில்

1,000 கோடி ரூபாய் செலவில் அறைகலன்களுக்கான சர்வதேச பூங்கா ஒன்று அமைக்கப்படும்.

- நிதிநுட்பத் துறை வளர்ச்சிக்கு தமிழ்நாட்டில் மாபெரும் வாய்ப்புகள் உள்ளன. அதனை முன்னெடுக்கும் வகையில் நிதிநுட்ப கொள்கை ஒன்று வெளியிடப்படும். மேலும் வழிகாட்டி நிறுவனத்தில் இதற்கென பிரத்யேகமான நிதிநுட்ப பிரிவு ஒன்று அமைக்கப்பட்டு, நிதிநுட்ப நிறுவனங்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் அளிக்கப்படும். சென்னையில் இரண்டு கட்டங்களாக நந்தம்பாக்கம் மற்றும் காவனூரில் நிதிநுட்ப நகரம் உருவாக்கப்படும். முதற்கட்டமாக நந்தம்பாக்கத்தில் இந்த நிதிநுட்ப நகரம் 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

- பழைய மாமல்லபுரம் சாலை தகவல் தொழில்நுட்ப துறை பெருவழியாக வளர்ச்சியடைவதற்கு, 2000ஆம் ஆண்டில் சென்னையில் கலைஞரால் டைடல் தகவல் தொழில்நுட்ப பூங்கா நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது முக்கிய காரணமாகும். இப்போது தமிழ்நாட்டிலுள்ள நிலை II மற்றும் நிலை III நகரங்களிலும் டைடல் பூங்காக்கள் ஏற்படுத்தப்படுகின்றன. முதல் கட்டமாக விழுப்புரம் மாவட்டத்தின் திருச்சிற்றம்பலம், வேலூர், திருப்பூர், மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் டைடல் பூங்காக்கள் உருவாக்கப்படும்.

- ஓசூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூரை இணைக்கும் பாதுகாப்பு தொழில்துறை பெருவழிகளை நிறுவுவதாக ஒன்றிய அரசு அறிவித்த போதிலும், அதற்கான ஒன்றிய அரசின் உதவி குறைவாகவே உள்ளது. கோயம்புத்தூரில் 500 ஏக்கர் பரப்பளவில், 225 கோடி ரூபாய் மதிப்பில், பாதுகாப்பு கருவிகள் உற்பத்தி பூங்காவை மாநில அரசு அமைத்து செயல்படுத்தும். இதன் மூலம் 3500 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் ஈர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள திருவண்ணாமலை, தர்மபுரி, திருநெல்வேலி, விருதுநகர், சிவகங்கை, விழுப்புரம், நாமக்கல், தேனி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் புதிய சிப்காட் தொழிற்பூங்காக்கள் அமைக்கப்படும். இப்பூங்காக்களில், தயார்நிலையில் உள்ள தொழிற்கூடங்கள் உட்பட உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும். இதற்கென இப்பூங்காக்களில், முதற்கட்டமாக 1500 கோடி ரூபாய் முதலீட்டில் 4,000 ஏக்கர் நிலங்கள் மேம்படுத்தப்படும்.

**சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள்**

- தமிழ்நாட்டில் உள்ள இந்த நிறுவனங்கள் எதிர்கொள்ளும் நிதி, கட்டமைப்பு, இதர சிக்கல்களை ஆய்வு செய்வதற்கும். இந்நிறுவனங்கள் வளர்ச்சி அடைய தேவைப்படும் நடவடிக்கைகள் பரிந்துரைக்கவும், டாக்டர் ந. சுந்தர தேவன் இ.ஆ.ப. (ஓய்வு) தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

- மாநில அளவிலான கடன் உத்தரவாத திட்டத்தை மேலும் பல இம்மாதிரியான நிறுவனங்கள், குறிப்பாக குறு தொழில் நிறுவனங்கள் கடன் பெறும் வகையில் செயல்படுத்தும். இந்நிறுவனங்கள் வணிகத் திறனின் அடிப்படையில் நிதி நிறுவனங்களும் நவீன நிதி தொழில்நுட்ப நிறுவனங்களும் கடன் வழங்க ஏதுவாக, மின்னணு தகவல் தரவுகள் அடிப்படையிலான கடன் மதிப்பீட்டு முறை ஏற்படுத்தப்படும். இந்நிறுவனங்களுக்கு கடன் வழங்க தமிழ்நாடு தொழில் கூட்டுறவு வங்கியை மாற்றியமைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

- பங்குச் சந்தைகள் மூலம் முதலீட்டைப் பெற முயலும் இந்நிறுவனங்களுக்கு அரசு உதவி செய்து, 30 லட்சம் ரூபாய் வரை பட்டியலிடும் செலவை அரசு ஏற்றுக்கொள்ளும். முதலமைச்சரின் பொருளாதார ஆலோசனைக் குழுவின் ஆலோசனையின்படி, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் அவற்றிற்கு கடன் அளித்தவர்கள் தங்களது கடன்களை மறு கட்டமைப்பு செய்ய முன் வந்தால், அரசு கடன் உத்தரவாதத்துடன் நிதி நிறுவனங்களின் உதவியுடன் கடன் வழங்கப்படும்.

- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்களின் நிலுவைத் தொகைகளை விரைவாக வசூலிப்பதற்கான வழிவகைகளை உறுதி செய்வதற்கான வர்த்தக வரவுகள் மற்றும் தள்ளுபடித் தளங்களின் கீழ் (TReDS), அனைத்து மாநில பொதுத்துறை நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், கூட்டுறவு நிறுவனங்கள் கொண்டு வரப்படும்.

- ஐந்து பெரிய தொழில் தொகுப்புகளை மருந்து மற்றும் பெட்ரோலிய ரசாயனங்கள் துறையிலும், துல்லியமான உற்பத்தி, பாதுகாப்பு, விண்வெளி மற்றும் ஸ்மார்ட் போக்குவரத்து ஆகிய துறைகளிலும் 100 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்பட உள்ளன.

- 265 ஏக்கர் மொத்த பரப்பளவில் 5 இடங்களில் நில வங்கிகளை சிட்கோ நிறுவ உள்ளது. சிட்கோ தொழில்துறை பூங்காக்களில் விற்கப்படாத மனைகளை விரைவாக பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுவதை உறுதி செய்வதற்காக விலைக் கொள்கை சீரமைக்கப்படும்.

**கனிமங்களும் சுரங்கங்களும்**

- சுற்றுப்புறம் மற்றும் சூழலுக்கு பாதிப்பின்றி சுரங்கப் பணிகளை செயல்படுத்திட இந்த அரசு நீடித்த நிலையான சுரங்க கொள்கையை உருவாக்கும்.
- இது தவிர, பசுமை சுங்க மேல்வரி விதிக்கப்பட்டு ஒரு பசுமை நிதியம் உருவாக்கப்படும். இதன் மூலம் கைவிடப்பட்ட குவாரிப் பகுதிகள் முறைப்படி மூடப்பட்டு பாதுகாக்கப்படும். ஆறு கோடி வருடங்களுக்கு முந்தைய உள்நாட்டு புதை வடிவங்கள் கண்டறியப்பட்டுள்ள அரியலூர்-பெரம்பலூர் மாவட்டங்களில், புவியியல் புதைபடிவ பூங்கா ஒன்று பத்து கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை**

- துணி நூல் துறையில் கவனம் செலுத்துவதற்காக, ஒரு தனி இயக்குனரகம் உருவாக்கப்படும்.

**தகவல் தொழில்நுட்பவியல் துறை**

- தற்போது 131 சேவைகள் இ-சேவை மையங்கள் வாயிலாகவும், 55 சேவைகள் இணையதளம் வாயிலாகவும் மக்களுக்கு நேரடியாக வழங்கப்படுகின்றன. டிசம்பர் மாதத்திற்குள், 29 துறைகள் மூலமாக வழங்கப்படக்கூடிய 600க்கும் மேற்பட்ட சேவைகளும் மின்னணு முறையில் வழங்கப்படும்.

**இந்து சமய அறநிலையத்துறை**

- போதிய நிதி வசதி இல்லாத 12,959 திருக்கோயில்களில் ஒரு கால பூஜை திட்டத்தை செயல்படுத்த உதவும் வகையில் 130 கோடி ரூபாயில் நிலை நிதி ஏற்படுத்தப்படும்.
- பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் மூலம் ஒரு புதிய சித்த மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டு சித்தர்களின் அறிவாற்றலுடைய தொன்மை வாய்ந்த மருத்துவ முறையான சித்தமருத்துவம் மேம்படுத்தப்படும்.
- பக்தர்களின் அனுபவத்தை அதிகரிப்பதற்கும் 539 திருக்கோளில்களுக்கான பெருந்திட்டங்கள் அரசால் வகுக்கப்பட்டு வருகின்றன.

**சுற்றுலா**

- கன்னியாகுமரி மற்றும் பூம்புகாரில் உள்ள அய்யன் திருவள்ளுவர் சிலைக்கான வசதிகள் மேம்படுத்தப்பட்டு, அவற்றின் பழம்பெருமை மீட்டெடுக்கப்படும்.

**சமூக நலம்**

- திருநங்கைகளின் நலனில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. 1071 கைவிடப்பட்ட திருநங்கையர் பயன்பெறும் வகையில் மூன்றாம் பாலினத்தவருக்கான ஓய்வூதயத் திட்டத்திற்காக 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் பெற்றோரில் ஒருவரையோ அல்லது இருவரையுமோ இழந்த குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு சிறப்பு முயற்சிகளை எடுத்துள்ளது. இதுவரை 5,963 குழந்தைகள் அடையாளம் கண்டறியப்பட்டு, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 95.96 கோடி ரூபாய் நிதியுதவியாக வழங்கப்பட்டது.
- அங்கன்வடி மையங்களின் தரத்தை உயர்த்துவதற்காக சிறப்பு ஒதுக்கீடாக 48.48 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு, கல்வி சார்ந்த பொருட்களை வழங்குவதற்கு 23.33 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- மதிய உணவு திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்திற்கு முட்டைகள் மற்றும் இதர பொருட்கள் கொள்முதல் செய்யும் முறை சீரமைக்கப்படுவதன் மூலம் செலவினங்கள் குறைக்கப்படும்.

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன்**

- நபார்டு வங்கியின் ஊரக கட்டமைப்பு வளர்ச்சி நிதியத்தின் உதவியுடன் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக்கூடங்கள் உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 123.02 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விடுதிகளில் பயிலும் மாணவர்களின் மாதாந்திர சில்லறைச் செலவினக் கட்டண உதவித்தொகை இரண்டு மடங்காக உயர்த்தப்படும். தற்போதுள்ள பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான விடுதிகளை மேம்படுத்த சிறப்பு மூலதன ஒதுக்கீடாக 25 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலம்**

- இளநிலை மற்றும் முதுநிலை மருத்துவ படிப்புகளுக்கான, அகில இந்திய ஒதுக்கீட்டில், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவீத இடஒதுக்கீட்டினை

இந்தக் கல்வியாண்டில் இருந்து வழங்க, ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளது. இதன் மூலம் சமூக நீதி பாதுகாக்கப்பட்டுள்ளது.

**பொது நிதி மேலாண்மை**

- வரும் 2022-23ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட அறிக்கையுடன், எளிய மொழியில் பொதுமக்கள் அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் வெளியிடப்படும். இதனால் அரசின் நிதிநிலையை பற்றி ஆரோக்கியமான புரிதலுடன் கூடிய விவாதங்கள் ஊக்குவிக்கப்படும்.

**உரிமைத்தொகை வழங்கல்**

- இத்திட்டத்தின் நோக்கம், நிதியுதவியை இல்லத்தரசிகளுக்கு வழங்குவதே ஆகும் என உறுதியளிக்கிறேன். எனவே குடும்பத் தலைவரின் பெயரை மாற்றத் தேவையில்லை.

**வரவு-செலவுத் திட்டத்திற்கான நிதி ஆதாரங்கள்**

- வணிகவரித் துறை மறுகட்டமைப்பு செய்யப்பட்டு, கூடுதலான மனித வளங்களை களப்பணிக்கு அளிக்கவும், புலனாய்வு மற்றும் தணிக்கை பிரிவுகளை வலுவாக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திற்கும் இணங்க ஒரு வணிகவரி மாவட்டம் இருக்கும் விதமாக துறையின் அலுவலகங்கள் மாற்றியமைக்கப்படும். உயர் தரவு பகுப்பாய்வின் மூலம் வரி ஏய்ப்பு செய்வோர் கண்டறியப்பட்டு, உாயி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். ரோந்துப் பணி குழுக்கள் 100 ஆக அதிகரிக்கப்பட்டு பட்டியல் இல்லாமல் செல்லும் வாகனங்களை தடுப்பதற்காக அவர்களுக்கு வாகனங்கள் மற்றும் RFID கருவிகள் வழங்கப்படும்.

- விலைப்பட்டியல் வியாபாரிகள் உள்ளிட்ட வரி ஏய்ப்பு செய்வோர் மீது குற்றவியல் நடவடிக்கை உட்பட, கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

- தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி உள்ளிட்ட பழைய வரிகளில் நிலுவையிலுள்ள 28,000 கோடி ரூபாயை வசூலிக்க எளிமையாக, அரசிற்கு பலனளிக்கக்கூடிய விதமாக சமாதான் திட்டம் அறிவிக்கப்படும்.

- மோசடியான ஆவணங்கள் மூலம் ஏமாற்றப்பட்ட உண்மையான உரிமையாளர்களின் துயரத்தை நீக்க 1908ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தை திருத்தி, அத்தகைய ஆவணங்களின் பதிவை ரத்து செய்ய பதிவுத்துறை தலைவருக்கு அதிகாரம் வழங்கப்படும்.

- இதுவரை நிலுவையில் உள்ள இம்மாதிரி மோசடி நிகழ்வுகளுக்கும் இந்த மாற்றம் பொருந்தும். கள நிலவரம் பற்றி ஆராய்ந்து வழிகாட்டி மதிப்பினை நிர்ணயிப்பதற்கான வழிமுறைகளை பரிந்துரைக்க, ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்படும். உரிமை ஆவணங்கள் ஒப்படைப்பு பதிவு மற்றும் வாடகை ஒப்பந்த ஆவணங்களை இணைய வாயிலாகவே பதிவு செய்யும் வசதி ஏற்படுத்தப்படும்.

- 1.1.1975 முதல் மட்டுமே வில்லங்கச் சான்றினை இணையவழியில் பார்க்க முடியும். இந்த வசதி 1.1.1950 முதல் பதியப்பட்ட அனைத்து ஆவணங்களுக்கும் விரிவு

செய்யப்படும். அதற்கு முந்தைய ஆவணங்களும் பட்டியலிடப்பட்டு கணினிமயமாக்கப்படும்.

## 3. Tamil Nadu Agri Budget
### தமிழ்நாடு வேளாண் நிதிநிலை அறிக்கை

தமிழக வரலாற்றில் முதன்முறையாக வேளாண்மைத் துறைக்குத் தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களில் வேளாண்மைக்குத் தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், தமிழ்நாட்டுக்கு இது புதுசு. அப்படி இன்று தாக்கலான வேளாண் பட்ஜெட்டின் 20 முக்கிய அம்சங்கள் இங்கே...

**1. கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம்:**

பல துறைகள் சேர்ந்து ஒரு கிராமத்தின் வளர்ச்சியை மேற்கொள்ளும் பொருட்டு, கிராமங்களில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும். தமிழ்நாட்டில் 12,524 கிராம பஞ்சாயத்துகள் உள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ஐந்தில் ஒரு கிராம பஞ்சாயத்தைத் தேர்ந்தெடுத்து இத்திட்டம் செயல்படுத்தப்படும். கிராமங்களை தன்னிறைவு பெற்றதாக மாற்றவே இத்திட்டம்.

**2. இளைஞர்களை வேளாண்மைக்கு கொண்டுவருதல்**

இளைய தலைமுறையினருக்கு கணினியைப் பற்றி தெரியும் அளவுக்கு கழனியைப் பற்றி தெரிவதில்லை. இதனால் இளைஞர்கள் வேளாண்மையில் ஈடுபடுவது குறைந்துள்ளது. இதை மாற்ற `ஊரக இளைஞர் வேளாண் மேம்பாட்டு திட்டம்' இந்த ஆண்டு 5 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்படும். முதல்கட்டமாக 2,500 இளைஞர்களுக்கு இந்த ஆண்டு இதற்காக பயிற்சிகள் வழங்கப்படும்.

**3. பனை பாதுகாப்பு**

பனைமரத்தின் பரப்பு குறைந்து வருவதை அறிந்து நடப்பாண்டில் பனை மேம்பாட்டு இயக்கம் ரூ.3 கோடியில் செயல்படுத்தப்படும். இதோடு பனை வெல்லத்தை ரேஷன் கடைகள் மூலம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும். முதற்கட்டமாக 30 மாவட்டங்களில் 76 லட்சம் பனை விதைகள் விதைக்க நடவடிக்கை எடுக்கப்படும். தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் கிள்ளிக்குளம் வேளாண் ஆராய்ச்சி மையத்தில் பனை மரம் பற்றிய ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும். இதோடு பனை மரங்களை வெட்ட மாவட்ட ஆட்சியரின் அனுமதி தேவை.

**4. நெல் கொள்முதல் ஆதார விலை உயர்வு**

தற்போது ஒரு குவிண்டால் நெல்லுக்கு, சன்ன ரகம் ரூ.1960க்கும், சாதாரண ரகம் ரூ.1940க்கும் வழங்கப்படுகிறது. இனி சன்ன ரகத்திற்கு 2060-ம், சாதாரண ரகத்திற்கு 2015-ம் வழங்கப்படும்.

**5. சிறுதானிய இயக்கம்**

சாமை, தினை, வரகு உள்ளிட்ட சிறுதானிய உற்பத்தியை அதிகரிக்க, ரூ.12.44 கோடியில் சிறுதானிய இயக்கம் செயல்படுத்தப்படும். இந்த இயக்கம் கடலூர், திண்டுக்கல், விழுப்புரம், தருமபுரி, கிருஷ்ணகிரி, விருதுநகர் உள்ளிட்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். நீலகிரி மாவட்டத்தில் சிறுதானிய தானியங்களை பதப்படுத்தல் மையமும் அமைக்கப்படும். விருதுநகரில் சிறுதானிய சாகுபடியை பற்றி கற்க மையம் அமைக்கப்படும்.

**6.** வேளாண்மைத் துறையில் இயற்கை வேளாண்மைக் கென்று தனிப் பிரிவு தொடங்கப்படும். இயற்கை வேளாண்மையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கி ஊக்கப்படுத்தப்படும். இதன்மூலம் இந்தாண்டில் இயற்கை வேளாண்மை வளர்ச்சி திட்டம் என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்படும்.

**7.** **நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையம்**

பல்வேறு பயிர்களின் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், கோவை வேளாண்மை பல்கலைக்கழகத்தில் `நம்மாழ்வார் இயற்கை வேளாண்மை ஆராய்ச்சி மையம்' தொடங்கப்படும்

**8.** பல மாவட்டங்களில் உள்ள 50 உழவர் சந்தைகளை ஆராய்ந்து மக்கள் வந்து செல்லும் இடமாக மேம்படுத்திட 12.50 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் உழவர் சந்தைக்கு வருபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**9.** கடலூர், திண்டுக்கல், ஈரோடு, புதுக்கோட்டை, தஞ்சை, நெல்லை, வேலூர், திருச்சி, கரூர், கள்ளக்குறிச்சியில் புதிய உழவர் சந்தைகள் தொடங்கப்படும்.

**10.** நாளுக்கு நாள் காய்கறிகளின் தேவை அதிகரித்து வருவதால், காய்கறி, கீரைச் சாகுபடியை அதிகரிக்க மானியம் அளிக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.95 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

**11.** மாடித்தோட்டங்கள் நகர்ப்புறங்களில் பரவலாகி வருவதால், அதை இந்த ஆண்டிலும் நடைமுறைப்படுத்த நகர்ப்புறங்களில் 6 வகை காய்கறி விதைகள் அடங்கிய 1 லட்சம் மாடித்தோட்ட தளைகள் வழங்கப்படும்.

**12.** விவசாய நிலங்களில் நிலத்தடி நீரை அதிகரிக்கும் பொருட்டும் பாசன வசதியை மேம்படுத்தும் பொருட்டும் 100 சதவிகித மானியத்தில் 500 பண்ணைக்குட்டைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**13.** தமிழகத்தில் பாரம்பர்ய நெல் ரகங்களை பாதுகாத்து பரவலாக்கும் பொருட்டு, அரசு விதைப்பண்ணைகளில் பாரம்பர்ய நெல் விதைகளைப் பயிரிட்டு விவசாயிளுக்கு வழங்கப்படும்.

**14.** பயறு வகைகளின் உற்பத்தி குறைந்து வருவதால் அதைப் பெருக்கும் நோக்கில் திட்டமிடப்பட்டுள்ளது. இதோடு ரேஷன் கடைகளிலும், மதிய உணவுத் திட்டத்திலும் பயறு வகைகளை வாங்கி பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**15.** நிலக்கடலை, எள், சூரியகாந்தி, ஆமணக்கு ஆகிய எண்ணெய் வித்து பயிர்களை தரிசு நிலங்களில் சாகுபடி செய்ய ஊக்குவிக்கப்படும். இதனால் உள்நாட்டு எண்ணெய் வகைகளின் பயன்பாடு அதிகரிக்கும்.

**16.** விலைவீழ்ச்சியால் விவசாயிகள் தவிப்பதைத் தவிர்க்கவும், விளைபொருள்களை சேமித்து வைக்கவும் ஒட்டன்சத்திரம், பண்ருட்டி ஆகிய இரு இடங்களில் ரூ.10 கோடி செலவில் புதிய குளிர்ப்பதனக் கிடங்குகள் அமைக்கப்படும்.

**17.** கரும்பு விவசாயிகளுக்கு சிறப்பு ஊக்கத்தொகை டன் ஒன்றுக்கு ரூ.150 வழங்கப்படும். இதன்மூலம் ஒரு டன் கரும்புக்கு கூடுதல் விலை கிடைக்கும்.

**18.** உழவர்கள் பற்றிய உண்மைகளைப் பற்றியும், வேளாண்மையின் மகத்துவத்தைப் பற்றியும் இளம் தலைமுறையினர் தெரிந்துகொள்வது அவசியம். இதற்காக சென்னையில் வேளாண்மைக்கு என தனி அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

**19.** டெல்டா மாவட்ட தென்னை விவசாயிகளுக்காக தஞ்சாவூரில் தென்னை மதிப்புக்கூட்டு மையம் துவக்கப்படும். இதனால் தென்னை விவசாயத்தில் ஈடுபட்டு வரும் விவசாயிகளுக்கு மதிப்புக்கூட்டும் தொழில்நுட்பம் எளிதாக கிடைக்கும்.

**20.** நீலகிரி மாவட்டம், எடப்பள்ளியில் ஒருங்கிணைந்த வேளாண் கிராம சந்தை ரூ.2 கோடியில் அமைக்கப்படும். இதன்மூலம் விவசாயிகள் கிராமங்களில் விளையும் விளைபொருள்களை அந்தப் பகுதியிலேயே விற்பனை செய்து கொள்ள முடியும்.

## 4. 1 trillion-dollar economy – TN.
### 1 டிரில்லியன் டாலர்கள் பொருளாதாரம் - தமிழ்நாடு

டிரில்லியன் டாலர் பொருளியல் இலக்கை எட்டும் திறன் அரசுக்கு உள்ளது: நிபுணர்கள் நம்பிக்கை.

**சென்னை**: எதிர்வரும் 2030ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தின் பொருளியல் மதிப்பை ஒரு லட்சம் கோடி அமெரிக்க டாலராக உயர்த்தவேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் இலக்கு நிர்ணயித்துள்ளார்.

இந்த இலக்கை அடைவது வெறும் கனவு மட்டுமல்ல, அதை அடையக்கூடிய திறன் தமிழக அரசுக்கு உள்ளது என தமிழக அரசின் தொழில்துறை செயலாளர் முருகானந்தன் தெரி-வித்துள்ளார்.

சென்னையில் அண்மையில் பல்வேறு துறை சார்ந்த நிபுணர்கள் பங்கேற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், பல்வேறு நிபுணர்கள் அடங்கிய குழுவானது இலக்கை அடைவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

தமிழகத்தின் பொருளியலுக்கு சேவைத்துறையின் பங்களிப்பு 55 விழுக்காடாகவும் உற்-பத்தித் துறையின் பங்களிப்பு 30 விழுக்காடாகவும் உள்ளதாகக் குறிப்பிட்ட முருகானந்-தன், விவசாயத்துறை 15 விழுக்காடு பங்களிப்பதாகத் தெரிவித்தார்.

“தமிழக அரசு உற்பத்தி, விவசாயத்துறையுடன் அணுக்கமாகச் செயல்பட வேண்டும். நாட்டிலேயே மிகச் சிறந்த ஒன்றாகப் பெயரெடுத்துள்ள சென்னை துறைமுகத்தின் மூலம் ஏற்றுமதி செய்வதில் கவனம் செலுத்தினால் நிர்ணயித்த இலக்கை எட்டுவது உறுதி செய்-யப்படும்.

“ஒவ்வோர் ஆண்டும் சுமார் இருபது விழுக்காடு வளர்ச்சியைப் பதிவு செய்தால் ஒரு டிரில்-லியன் டாலர் பொருளியல் இலக்கை நிச்சயம் அடையலாம்,” என்று முருகானந்தன் கூறினார்.
மொத்த உள்நாட்டு உற்பத்தியைப் பொறுத்தவரையில் நாட்டில் இரண்டாவது இடத்தில் தமிழகம் உள்ளது என்று சுட்டிக்காட்டிய அவர், நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எட்டுவது சாத்-தியம் என்ற நம்பிக்கையுடன் செயல்பட வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் பேசிய பல நிபுணர்களும் தமிழக அரசு தனது பொருளாதார இலக்கை அடைவதற்கான ஆலோசனைகளை முன்வைத்தனர்.

## 5. Tamilnadu Investment Conclave.

**முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு**

**முதலீட்டாளர்களின் முதல் முகவரி – தமிழ்நாடு - செய்தி அறிக்கை**

ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அடுத்த சில மாதங் களில் தமிழகத்தின் தொழில் வளர்ச்சியை முடுக்கிவிடக் களம் இறங்கியிருக்கிறது முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான அரசாங்கம். 'முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு' என்ற நிகழ்ச்சி கடந்த 20-ம் தேதியன்று சென்னை கிண்டியில் நடந்தது. தமிழக அரசின் தொழில்துறை இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தது.

இந்தக் கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் 35 தொழில் நிறுவனங்கள் ரூ.17,141 கோடி முதலீட்டில் தொழில் தொடங்க புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமானது. இதன்மூலம் சுமார் 55,000 பேருக்கு வேலை கிடைக்கும்.

இந்த விழாவில் தொழிற்சாலைக் கான பூர்வாங்க பணிகள் முடிந்து, ஒன்பது கம்பெனிகள் அடிக்கல் நாட்டும் நிகழ்வும் நடந்தது. ரூ.4,250 கோடி மூலதனத்தில் தொடங்கப்படும் இந்தத் திட்டத்தில் 21,630 பேருக்கு வேலை கிடைக்கும். அனைத்துப் பணிகளும் முடிந்து, ஐந்து நிறுவனங் களின் தொடக்க விழாவும் இந்தக் கூட்டத்தில் நடந்தது. இந்த நிறுவனங் களில் செய்யப்பட்ட மொத்த முதலீடு ரூ.7,117 கோடி. இங்கு சுமார் 6,798 பேருக்கு வேலை கிடைக்க உள்ளது.

இந்தத் தொடக்க விழாவில் முதல்வர் ஸ்டாலின், "தெற்கு ஆசியாவில் தொழில்புரிய உகந்த மாநிலமாக தமிழகத்தை உயர்த்துவதே எங்கள் லட்சியம். முதலீட்டாளர்கள் தொழில் தொடங்கத் தேவையான அனைத்து அனுமதிகளையும் உடனுக் குடன் பெற்று, திட்டத்தை விரைவாக நிறுவ, மேம்படுத்தப்பட்ட ஒற்றைச் சாளர இணையதளம் 2.0-வைத் தொடங்கியுள்ளேன். இதில் கூடுதலாக 210 சேவைகளை அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்குள் சேர்க்கத் திட்டமிட்டு உள்ளோம். புதிய முதலீடுகளைப் பெருமளவு ஈர்க்க வேண்டும் என்பதற்காக, உலகத் தரம் வாய்ந்த உள்கட்டமைப்புகளை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம்" என்றார்.

பொதுவாக, புரிந்துணர்வு ஒப்பந்தம் போடுவார்கள். இவ்வளவு முதலீடு செய்கிறோம் என்று அறிவிப்பார்கள். கடைசியில் அது நடக்காமலே போய் விடும் என்கிற குற்றச்சாட்டு எழுவதுண்டு. ''அதுமாதிரி ஏதும் நடந்துவிடக் கூடாது. நானே மேற்பார்வை செய்கிறேன்'' என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தொழில்துறை உயர் அதிகாரிகளிடம் கறாராகத் தெரிவித்திருக்கிறாராம்.

வெளிநாட்டில் இருந்தோ, வெளி மாநிலங்களிலிருந்தோ ஏதாவது தொழில் தொடங்க முதலீட்டாளர்கள் வருகிறார் கள் எனில், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் முட்டிமோதும். சலுகைகளை வாரி வழங்கும். அந்தப் போட்டியில் தமிழக அரசு அதிகாரிகள் தமிழகத்தில் இருக்கும் பல்வேறு சாதகமான விஷயங்களைத் தொழிற்சாலை நடத்தவரும் நிறுவனங்களிடம் எடுத்துச்சொல்லி புரியவைப் பார்கள். இதன் பிறகு முதலீட் டாளர்கள் அவர்கள் தரப்பில் முழுமையாக விசாரித்த பிறகே தமிழகத்தில் தொழில் தொடங்கும் முடிவை எடுப்பார்கள். இப்படி எல்லா விசாரணைகளையும் முடித்து 35 தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் தொடங்க புரிந்துணர்வு ஒப்பந்தம் போட் டிருப்பது சிறப்பான விஷயம்.

"தடையில்லா மின்சாரம், இன்டர்நெட் வசதி, திறமையான பணியாளர்கள், ஏற்றுமதி செய்ய துறைமுகம், நேர்மையான அரசு, ஏற்கெனவே தமிழகத்தில் தொழில் ஆரம்பித்த கம்பெனிகளின் ஆலோசனை ஆகியவற்றை அடிப்படையாக வைத்துதான் முதலீட்டாளர்கள் தமிழகம் வருகிறார்கள். நமக்கு இயற்கை யாக அமைந்துள்ள வளங்கள்

தொழில் தொடங்கக் கைகொடுக் கின்றன. சென்னை தவிர, நிறைய உள்மாவட்டங்களில் தொழிற் சாலைகள் வரப்போகின்றன.

உதாரணமாக, விழுப்புரம் மாவட்டத்தில் பெரிய அளவில் தொழில் வசதி இல்லை. அதைச் சரிசெய்யும் நோக்கில், தாய்வான் கம்பெனியான லோட்டஸ் புட்வேர் தனது கிராக்ஸ் ஷூ தயாரிக்கும் தொழிற்சாலையை அந்தப் பகுதியில் தொடங்க இருக்கிறது. இந்தத் தொழிற்சாலை அமைக்கும் பணி ஒரே வருடத்தில் முடிந்துவிடும். 6,000 கோடி முதலீட்டின்மூலம் சுமார் 15,000 பேருக்கு வேலை கிடைக்கும்.

ஓலா நிறுவனம், வருகிற செப்டம்பர் மாதத்தில் ஓசூரில் எலெக்ட்ரிக் டூவீலர் தயாரிக்கும் பணியைத் தொடங்கப்போகிறது. அதற்கான பணி முழுவீச்சில் நடக்கிறது. ரூ.2,354 கோடி முதலீட்டில் சுமார் 2,200 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப்போகிறது.

தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் உற்பத்தியைத் தொடங்கத் தேவையான அத்தனை விஷயங் களையும் செய்து தருகிறோம். தமிழக முதல்வர் ஆலோசனை யுடன் தமிழகத்தை முன்மாதிரி மாநிலமாக ஆக்க நாங்கள் செயல்பட்டு வருகிறோம்’’ என்றார்.

தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மையத்தின் துணைத் தலைவரிடம் பேசினோம். “இண்டஸ்ட்ரியல் ஹெல்ப் லைன் 24 மணிநேரமும் செயல்பட்டு வருகிறது. எங்களைப் பொறுத்தவரை, புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்ட பிறகு, அதில் குறிப்பிட்டபடி தொழிற்சாலை அமைக்கும் பணி நடப்பதைக் கண்காணித்து வழிகாட்டுகிறோம். உதாரணமாக, கிருஷ்ணகிரியில் டாடா எலெக்ட்ரானிக்ஸ் கம்பெனி, மொபைல் போனுக்கான அதிநவீன எலெக்ட்ரானிக் பொருள்களை உற்பத்தி செய்ய இருக்கிறது. கடந்த பிப்ரவரியில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. தொழிற்சாலை அமைக்கும் வேலை நடக்கிறது. 18,000 பேருக்கு வேலை கிடைக்க உள்ளது’’ என்றார்.

## 6. Economic Advisory Council - Tamil Nadu.
## பொருளாதார ஆலோசனைக் குழு - தமிழ்நாடு

அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் தொழில்நுட்பக் கழகப் பேராசிரியரும் நோபல் பரிசு பெற்றவருமான எஸ்தர் டஃப்லோ, இந்திய ரிசர்வ்வங்கியின் முன்னாள் ஆளுநர் ரகுராம் ராஜன், மத்திய அரசின்முன்னாள் தலைமை பொருளாதார ஆலோசகர் அரவிந்த் சுப்பிரமணியன், பொருளாதார நிபுணர் ஜான் ட்ரீஸ், முன்னாள் மத்திய நிதித் துறை செயலர் எஸ்.நாராயண்ஆகிய பொருளாதார அறிஞர்கள்இக்குழுவில் உறுப்பினர்களாகஇருப்பார்கள்’’

‘குழுவுக்கான செயலகமாக தமிழக அரசின் நிதித் துறைசெயல்படும். குழு ஒருங்கிணைப்பாளராக நிதித் துறை செயலர்ச.கிருஷ்ணன் செயல்படுவார்’

**குழுவின் பணிகள்**

இந்த குழுவானது பொருளாதாரம் மற்றும் சமூக கொள்கை, சமூக நீதி மற்றும் மனித வளர்ச்சி தொடர்பான விஷயங்களில் குறிப்பாக பெண்களுக்கான சம வாய்ப்பு, பின்தங்கிய மக்களின் நலன் தொடர்பான தங்களது பொதுவான பரிந்துரைகளை வழங்கும். பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு மற்றும் மாநிலஉற்பத்தி வளர்ச்சியை ஊக்குவிப்பது குறித்தும், மாநிலத்தின் ஒட்டுமொத்த நிதிநிலையை உயர்த்துவது குறித்தும் ஆலோசனை அளிக்கும்.

முதல்வர் அல்லது நிதியமைச்சருக்கு பொருளாதாரம் மற்றும் சமுதாய கொள்கை தொடர்பானவிஷயங்களில் உதவி தேவைப்பட்டால், அதை ஆய்வு செய்து அதுதொடர்பான அறிவுரைகளை குழு வழங்கும்.

குழு அல்லது குழு உறுப்பினர்கள் நேரடியாகவோ, காணொலி வாயிலாகவோ தேவைப்படும் போது சந்திப்பார்கள். குழு தனது இலக்கை அடைய தனது சொந்த செயல்திட்டத்தை பயன்படுத்திக் கொள்ளலாம். முதல்வர் அல்லது அரசுக்கு தேவைப்படும் உடனடி ஆலோசனைகளை வழங்க குழு தயாராக இருக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 7. Tamil Nadu export promotion policy 2021.
**தமிழ்நாடு ஏற்றுமதி கொள்கை 2021**

## செய்தி அறிக்கை

'ஏற்றுமதியில் ஏற்றம் - முன்னணியில் தமிழ்நாடு' : ஏற்றுமதி மாநாட்டை தொடங்கி வைத்தார் மு.க.ஸ்டாலின்

மாநாட்டில் பேசிய முதலமைச்சர், ஏற்றுமதியில் ஏற்றம் முன்னணியில் தமிழ்நாடு - ஏற்றுமதியில் ஏற்றம் பெற்று இந்தியாவில் முன்னணியில் சென்று கொண்டிருகிறது தமிழகம். தொழில் துறை வளர்கிறது என்றால் அனைத்து துறைகளும் வளருகிறது என்று பொருள். அனைத்து மாவட்டங்களிலும் இது போன்ற கண்காட்சிகள் நடத்த அமைச்சர்களுக்கு அறிவுறுத்தபட்டுள்ளது. 2120 கோடி மதிப்பில் 24 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடபட்டுள்ளன. 41,695 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

ஏற்றுமதியாளர்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் அனைத்து ஆதரவுகளையும் தமிழக அரசு வழங்கும். தமிழகத்தின் தொழில் வளர்ச்சி இந்தியா முழுவதும் பரந்து உள்ளது. உலகம் நோக்கி நாம் செல்ல வேண்டும் உலகம் நம்மை நோக்கி வர வேண்டும். 1.93 லட்சம் ஏற்றுமதியில் இந்தியாவில் 3ஆவது இடத்தில் தமிழகம் உள்ளது. தமிழ்நாட்டின் தனித்தன்மையான பொருட்களுக்கு உலக அளவில் நல்ல வரவேற்பு உள்ளது.

காஞ்சி ஆரணி பட்டு சேலைகள் , திண்டுக்கல் பூட்டு, சிறுமலை வாழைப்பழம் உள்ளிட்ட பொருட்களுக்கு வெளிநாடுகளில் மிக பெரிய வரவேற்பு உள்ளது. இவற்றை அதிக அளவில் தயாரித்து. தரம் பாதிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏற்றுமதியை ஊக்குவிக்கும் வகையில், மாநில ஏற்றுமதி மேம்பாட்டு குழு தலைமை செயலாளர் தலைமையில் அமைக்கப்பட உள்ளது. தூத்துக்குடியில் ஏற்றுமதியை மையமாக கொண்ட பூங்கா அமைக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதி தொடர்பான இடர்பாடுகளை களைய ஏற்றுமதி அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. திருப்பூர் கரூர் ஆம்பூர் சென்னை உள்ளிட்ட இடங்களில் உள்ள ஏற்றுமதி இடங்கள் மேம்படுத்தபடும் என்று மு.க.ஸ்டாலின் கூறினார்.

## 8. Mudra scheme – Relating to Tamilnadu weavers.
**தமிழக நெசவாளர்களுக்கான முத்ரா திட்டம்**

**Mudra scheme – Relating to Tamilnadu weavers.**
**தமிழக நெசவாளர்களுக்கான முத்ரா திட்டம்**

பிரதான் மந்திரி முத்ரா யோஜனா (பி.எம்.எம்.ஒய்) திட்டத்தின் கீழ் இந்திய அரசு வழங்கும் கடன் திட்டத்தை முத்ரா கடன் என்று சுருக்கமாக அழைக்கின்றோம். இந்திய அரசாங்கம் பிரதான் மந்திரி முத்ரா யோஜனா திட்டத்தை (பி.எம்.எம்.ஒய்) 2015ஆம் ஆண்டு துவங்கியதற்கான முக்கிய குறிக்கோள் என்னவென்றால் சிறிய அளவிலான தொழில் நடத்தி வருபவர்களுக்கும் நடத்திக் கொண்டிருப்பவர்களுக்கும் ஞாயமான முறையில் மிகக் குறைந்த வட்டியில் எந்தவித செக்யூரிட்டி இல்லாமல் கடன் வழங்குவதே ஆகும். இவ்வாறு சிறிய தொழில் தொடங்க முனைவோருக்கு கடன் வழங்குவதால் நாட்டின் வேலைவாய்ப்பின்மை குறைந்து நாட்டின் பொருளாதாரம் அதிகரிக்கும் என்ற முன்னோக்கிய சிந்தனையுடன் இந்திய அரசாங்கத்தால் இந்த திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

**முத்தான 'முத்ரா' கடன்**

கடந்த காலங்களில் மத்திய அரசு நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மட்டுமே, அவர்களது பரிந்துரையின் பேரில், 25 ஆயிரம் ரூபாய் கடன் வழங்கியது. இதற்கு 4,200 ரூபாய் மானியம். இந்நிதி தங்களது தறிக்கூடங்களை பராமரிக்க போதுமானதாக இல்லை என நெசவாளர்கள் தெரிவித்தனர். நெசவாளர்களுக்கு வாழ்வுதரும் விதத்தில் பிரதமர் மோடி, கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும், கைத்தறி துணி விற்பனையை ஊக்கப்படுத்துவதற்காக, முத்தான 'முத்ரா' வங்கி கடன் திட்டத்தை அறிமுகம் செய்தார்.

**ரூ.2 லட்சம் உறுதி**

'முத்ரா' வங்கி கடன் திட்டம் மூலம், நெசவாளர்களுக்கு 9.8 சதவீத வட்டியில் 50 ஆயிரம் ரூபாய் வரை கடன் வழங்குகின்றனர். இதில், 10 ஆயிரம் ரூபாய் மானியம். கடனுக்கு பிணையாக எவ்வித பத்திரமும் கேட்பதில்லை. கடனை முறையாக செலுத்துவோருக்கு, வட்டி சதவீதத்தில், 2.8 சதவீதம் கழிக்கப்படும்.

கடன் பெற்று 3 ஆண்டிற்குள் அசல் தொகை முழுவதையும் கட்டி விட்டால், அந்த நெசவாளர்களுக்கு எந்த நிபந்தனையும் இன்றி, வங்கியே முன்வந்து 2 லட்ச ரூபாய் கடன் வழங்கும் சிறப்பான திட்டத்தை வங்கிகள் செயல்படுத்தி வருகிறது. 'முத்ரா' வங்கிகடன் திட்டம் மூலம், மாவட்ட அளவில் 2016- - 17ல் 500 நெசவாளர்களுக்கு இலக்கு நிர்ணயித்ததில், 518 நெசவாளர்கள் கடன் பெற்றனர். 2017 - 18 ம் ஆண்டிற்கு 500 பேருக்கு வழங்க இலக்கு.

நிர்ணயித்ததில், இது வரை 389 நெசவாளர்கள் கடன் பெற்று, தங்களது கைத்தறி தொழிலை விரிவுபடுத்தியுள்ளனர். மத்திய அரசின் 'முத்ரா' வங்கி கடன் திட்டம், கைத்தறி நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் முத்திரை பதிக்கும் திட்டம் என நெசவாளர்கள் தெரிவித்தனர்.

## 9. National Monetisation Plan - Tamilnadu.
### தேசிய பணமாக்கல் திட்டம் - தமிழ்நாடு

**தமிழ்நாட்டில் எந்தெந்த சொத்துக்கள் விற்பனை: தேசிய பணமாக்கல் திட்டம்**

தேசிய பணமாக்கல் திட்டம் மூலம் மத்திய அரசு அடுத்த 4 வருடத்தில் 2025ஆம் நிதியாண்டுக்குள் சுமார் 6 லட்சம் கோடி ரூபாய் அளவிலான திட்டத்தைக் கையில் எடுக்க உள்ளது. இதில் தமிழ்நாட்டில் எந்தெந்த சொத்துக்களை மத்திய அரசு விற்பனை செய்யப்படுகிறது என்பதைப் பட்டியலிட்டுள்ளது.

**சாலை திட்ட சொத்துக்கள்**

மத்திய அரசின் தேசிய பணமாக்கல் திட்டத்தில் சுமார் 26,700 கிலோமீட்டர் அளவிலான சாலைகளைக் குத்தகைக்கு விட்டு அதன் மூலம் சுமார் 1,60,200 கோடி ரூபாய் அளவிலான நிதியைத் திரட்ட திட்டமிட்டுள்ளது.

94 கிலோமீட்டர் கொண்ட உளுந்தூர்பேட்டை - பாடலூர் சாலை 73 கிலோமீட்டர் கொண்ட உளுந்தூர்பேட்டை - திண்டிவனம் சாலை 38 கிலோமீட்டர் கொண்ட திருச்சி - பாடலூர் சாலை 63 கிலோமீட்டர் கொண்ட கிருஷ்ணகிரி - தோப்பூர் காட் சாலை 60 கிலோமீட்டர் கொண்ட 6 வழி ஓசூர் - கிருஷ்ணகிரி சாலை 46.5 கிலோமீட்டர் கொண்ட தாம்பரம் - திண்டிவனம் சாலை 117 கிலோமீட்டர் கொண்ட திருச்சி - காரைக்குடி சாலை (திருச்சி பைபாஸ்

**ரயில்வே துறை சொத்துக்கள்**

மலை ரயில் பாதையைத் தனியாருக்குக் கொடுக்கும் திட்டத்தில் நீலகிரி ரயில் பாதை தேர்வு செய்யப்பட்டு உள்ளது.

**மின்சாரம் உற்பத்தி சொத்துக்கள்**

சுமார் 6.0 ஜிகாவாட் மின்சாரம் தயாரிக்கும் தளத்தை இந்தியா முழுவதிலும் இருந்து விற்பனை செய்யப்பட உள்ளது. இதில் NLC அதாவது நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனத்தின் சில நீர் சக்தி ஆதாரங்களை விற்பனை செய்யப்பட உள்ளது. நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் லிமிடெட் தமிழ்நாட்டில் இருந்தாலும் அது மத்திய நிலக்கரி அமைச்சகத்தின் கீழ் வருகிறது.

**விமான நிலையங்கள்**

இந்தியாவில் தேசிய பணமாக்கல் திட்டம் மூலம் சுமார் 25 விமான நிலையங்கள் நீண்ட கால அடிப்படையில் குத்தகைக்கு விடப்பட்டுச் சுமார் 20,782 கோடி ரூபாய் அளவிலான தொகையை நிதி திரட்ட உள்ளது. இத்திட்டத்தில் திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, சென்னை ஆகிய 4 விமான நிலையத்தைச் சுமார் 4,694 கோடி ரூபாய் அளவிலான நிதி திரட்டப்பட உள்ளது. இதில் நடப்பு நிதியாண்டில் திருச்சி விமானத்தைத் தனியாருக்குக் கைமாற்றப்பட உள்ளது.

துறைமுகச் சொத்துகள் தேசிய பணமாக்கல் திட்டத்தின் கீழ் 9 முக்கியமான துறைமுகத்தில் சுமார் 31 திட்டங்களைத் தனியாருக்குக் குத்தகைக்கு விடுவதன் மூலம் சுமார் 12,828 கோடி ரூபாய் நிதி திரட்ட உள்ளது. இதில் தூத்துக்குடி துறைமுகம் உள்ளது. V. O. சிதம்பரனார் துறைமுகம் என அழைக்கப்படும் தூத்துக்குடி துறைமுகத்தின் 3 திட்டங்களை விற்பனை செய்வதன் மூலம் மத்திய அரசு சாகர் மாலா திட்டத்தை நடைமுறைப்படுத்த உள்ளது. V. O. சிதம்பரனார் துறைமுகத்தில் பெர்த் 1,2,3,4, மற்றும் 9, அதைத் தொடர்ந்து NCB-III ஆகியவற்றை 3 பிரிவுகளாக விற்பனை செய்யப்பட உள்ளது.

ஹோட்டல் சொத்துக்கள் மத்திய அரசின் இந்தியா டூரிசம் டெவலப்மென்ட் கார்ப்ரேஷன் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் சில ஹோட்டல் சொத்துகளை இந்தத் தேசிய பணமாக்கல் திட்டத்தின் தனியாருக்கு விற்பனை செய்யப்பட உள்ளது. இதில் புதுச்சேரியில் இருக்கும் ஹோட்டல் பாண்டிசேரி தேர்வு செய்யப்பட்டு உள்ளது.

சொத்து விற்பனை அதாவது asset monetisation என்பது அரசு கட்டுப்பாட்டில் இருக்கும் சொத்துக்களில் பெரிய அளவில் பயன்படுத்தாமல் இருக்கும் அல்லது குறைவாகப் பயன்படுத்தும் சொத்துக்களைப் பணமாக்கி அதன் மூலம் அரசுக்கு வருமானத்தை ஈட்டும் வழியை உருவாக்குவது என மத்திய அரசின் முதலீட்டு மற்றும் பொதுச் சொத்து மேலாண்மைத் துறை (DIPAM) விளக்கம் அளிக்கப்பட்டு உள்ளது.

APPOLO STUDY CENTRE